முதிய வைனா மொயினன் அதன்பின்
உரைத்தான் அவனே உரைத்தான் இவ்விதம்:
"என்றன் கரடியே, **இனியஎன் பறவையே!
தேனார் பாதமே, திகழுமென்** பொதியே!
நீநட மாடிட நிலமுள இன்னும்
தவழ்ந்து திரிந்திட தகுபுல் வெளியுள.

பொன்னே, இப்போ புறப்படு போக!
அன்பே, நிலத்தில் அடிவை சென்றிட!
கறுப்புக்கா லுறையே,காலெடு நடக்க!
துணிக்காற் சட்டையே, தொடர்ந்துலாப் போக!
**சிறுபுள் செல்லும் திசைவழி நடக்க!
**சிட்டுக் குருவி திரிந்துலாம் பாதையில்,
காண்ஐங் கூரைக் கைமரங் களின்கீழ்,
உயர்அறு கூரை உத்திரங் களின்கீழ்.

இருங்கள்ளச் சரிக்கையாய் இழிந்தபெண் டிர்களே

அஞ்சிடா திருக்கநும் அரியகால் நடைகள்
பயந்திடா திருக்கப் படர்சிறு நிரைகள்
தலைவியர் பசுநிரை தாக்குறா திருக்க
வந்துசேர் கையில்இவ் வளர்விடம் கரடி
இங்கே நுழைகையில் **எழிலுரோ மத்துவாய்.

பையன்காள், முன்கூடப் படியிருந் தேகுக!
அரிவையீர், கதவத்து நிலையிருந் தகலுக!
**நாயகன் வதிவிட நனியுள் வருகையில்
அடிவைத்துச் சிறப்புறும் ஆடவன் வருகையில்!

காட்டினில் வாழும் கரடியே, அப்பிளே!
செறிவனத் துறையும் திரட்சியா னவரே!
அரிவையைக் கண்டும் அச்சம் கொளாதீர்
பின்னிய குழலார்ப் பெரும்பயம் கொளாதீர்
தோகையர்ப் பார்த்துத் துணுக்குற் றிடாதீர்
சுருங்கிய காலுறை அணிந்தோர்க் **கழிகலீர்!
இல்லத் திருக்கும் எம்முது மாதரும்
புகைபோக்கி மூலையில் போயமர்ந் திருப்பர்
மனிதன் வதிவிடம் வருகையில் உட்புறம்
அரும்பெரும் பையன் அடிவைத் தடைகையில்."

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"இறைவனே வருவீர், இங்கும் வருவீர்,
உயர்புகழ்க் கூரையின் உத்திரத் தின்கீழ்
இவ்வில் லத்தின் எழிற்கூ ரையின்கீழ்!
எனதன் பெடுத்துநான் ஏகுவ தெங்கே
கொழுத்தஎன் பொதியை வழிப்படுத் துவதெங்(கே)?"

மக்களோ இவ்விதம் மறுமொழி கூறினர்:
"வருகநின் வரவு நல்வர வாகுக
பார்த்தவ் விடம்உம் பறவையைச் சேர்ப்பீர்
அன்பை வழிப்படுத்(த) அங்கே செல்வீர்
தாருவின்** வாங்கு நேர்பல கைநுனி
இரும்பா சனத்தின் இயைந்தவம் முனைக்கு,
உரோம ஆடையின் பரிசோ தனைக்கு
கம்பளி யதனைக் கவனமாய்ப் பார்க்க!

கரடியே, அதனால் கடுந்துயர் வேண்டாம்!
வீணே மனநிலை பாழாக் கிடாதே
உரோம மதனைப் பரிசோ திக்கையில்
கம்பளி யதனைக் கவனமாய்ப் பார்க்கையில்
எவருமும் கம்பளி யுடைசேத மாக்கிடார்
பார்க்கையில் மாறிப் படரவும் செய்திடார்
தரித்திரம் பிடித்த தரத்தனர் உடைபோல்
ஏழை எளியவர் ஆடைக ளைப்போல்!"

முதிய வைனா மொயினன் அதன்பின்
எடுத்தான் கரடியின் உரோமத் தாடையை
கூடமேற் றளத்தில் கொண்டதை வைத்தனன்

இறைச்சியைக் கலயம் ஒன்றிலே இட்டனன்
பொன்னாய் மின்னுமோர் புதுக்கல யத்திலே
செப்பினால் அடிப்புறம் சேர்கல யத்திலே.

அனலிலே யிருந்தன அடுத்ததாய்க் கலயம்
செப்புக் கரைகள் சேர்கல யங்கள்
நிறைந்து கிடந்தன நிறைந்து வழிந்தன
சிறுசிறு இறைச்சி தெரிந்தன துண்டுகள்
உப்புக் கட்டிகள் உள்ளே யிருந்தன
தொலைதே சத்தால் நலமாய்க் கொணர்ந்தவை
ஜேர்மன் நாட்டால் நேர்பெறல் உப்பு
*வெண்கடற் புறத்தால் வந்தநல் லுப்பு
*உப்பு நீரிணை உளவழி வந்தவை
இறக்கிக் கப்பலி லிருந்து கொணர்ந்தவை.

இரசம் கொதித்து இயல்தயா ரானதும்
கலயத்தை நன்கே கனலிருந் தெடுத்ததும்
**கொள்ளைச் செல்வம் கொணரப் பட்டது
எடுத்தேகப் பட்டது **இன்சிறு குருவி
நுவல்நீள் மேசையின் நுனிப்புற மாக
பொன்னிலே யான கிண்ணங் களுக்கு
நறைப்பா னத்தை நனிசுவைத் தருந்த
`பீர்`ப்பா னத்தைப் பீடுறக் குடிக்க.

தேவ தாருவில் செய்ததம் மேசை
செப்பினா லியந்தவை திகழ்கிண் ணங்கள்
வெள்ளியில் ஆனவை விளங்கும் கரண்டிகள்
இனியபொன் தட்டி எடுத்தவை கத்திகள்;
எல்லாக் கலயமும் இருந்தன நிறைந்து
வயங்குகிண் ணமெலாம் வழிந்தன நிறைந்து
காட்டினில் பெற்ற கவின்வெகு மதியால்
பொன்னான வனத்தின் புதிய இரையினால்.

முதிய வைனா மொயினனைப் போது
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"மொய்ம்பொன் மார்புடை முதுமா மனிதா!
தப்பியோ வீட்டின் தலைவனே கேளாய்!
நற்கா னகமுறை நறைநிகர் பெண்ணே!
காட்டகம் வாழும் கவினார் தலைவி!
தகுஎழில் மனிதா, தப்பியோ மகனே!
திகழ்எழில் மனிதா, செந்தொப்பி யுடையோய்!
தனித்தெல் லர்வோ, தப்பியோ மகளே!
அனைத்துத் தப்பியோ இனத்தரும் சேர்ந்து
வருகநும் எருதின் மணத்தினுக் காக
நும்சடைப் பிராணியின் கொண்டாட் டுக்கு!
உண்டிட நிறைய உள்ளது இப்போ
அயின்றிட நிறைய, அருந்திட நிறைய,
நீங்கள்வைத் திருக்கவும் நிறையவே யுள்ளது
ஊரிலே கொடுக்கவும் உள்ளது நிறையவே."

மக்களோ இவ்விதம் மறுமொழி கூறினர்
எழிலார் இனத்தார் இயம்பினர் இவ்விதம்:
"கரடி பிறந்ததெக் கவினார் இடத்திலே
மதிப்புறும் குட்டி வளர்ந்ததும் எவ்விடம்
அமைந்ததா வைக்கோல் அமளியில் பிறப்பு
வளர்ப்புச் சவுனா அடுப்பு மூலையில்?"

முதிய வைனா மொயினனைப் போது
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"வைக்கோ(லி)ல் கரடி வந்து பிறந்தில
சூளையின் குப்பையில் தோன்றிய துவுமில
நிகழ்ந்தது கரடியின் நேர்ப்பிறப் பங்கே
தேன்பா தத்தின் திகழ்பிறப் பமைந்தது
திங்களின் இடத்தில் தினகரன் கருவில்
தாரகைக் குலத்தின் தகுதோள் மீது
காற்றின் கன்னியர் கலந்துவா ழிடத்தில்
இயற்கையின் மகளார் இனிதுவா ழிடத்தில்.

வான விளிம்பிலோர் வனிதை நடந்தனள்
சுவர்க்க மத்தியில் சுந்தரி நடந்தனள்
முகிலோ ரத்தில் மொய்குழல் தரித்தனள்
வானின் எல்லையில் வனிதை இருந்தனள்
கால்களில் நீலக் காலுறை யிருந்தன
உயர்குதிக் காலணி ஒளிர்ந்தன மின்னி
கரங்களில் கூடை கம்பளி நூலொடு
உரோமக் கூடையும் உற்றது கக்கம்;
வீசினள் கம்பளி விரிபுனல் மேலே
அதனை எறிந்தனள் அலைகளின் மேலே
அதனைக் காற்று ஆராட் டியது
குறும்புடை வாயு தாலாட் டியது
அருநீர்ச் சக்தி அசைந்தாட் டிடவே
அலையும் சென்றது அடித்துக் கரைக்கு
நறைநிகர் கானக நன்கரை யதற்கு
தேனிகர் கடலின் செறிமுனை நுனிக்கு.

மியெலிக்கி என்பாள் மிளிர்கான் தலைவி
தப்பியோ லாவின் தரமுறு மனையாள்
கண்டனள் புனலில் கட்டினை எடுத்தனள்
அலையினில் பெற்றனள் அரியமென் கம்பளி.

அதனை விரைந்து அங்கே சேர்த்தனள்
துணியால் ஒழுங்காய்ச் சுற்றியே வைத்தனள்
**`மாப்பிள்` மரத்தொரு வன்கூ டையிலே
அழகா யாடுமோர் அருந்தொட் டிலிலே;
துணிப்பொதிக் கயிற்றை தூக்கினள் உயர
பைம்பொன் இயைந்த பட்டியை உயர்த்தினள்
சடைத்து வளர்ந்ததோர் தனிமரக் கிளைக்கு
விரிந்து பரந்ததோர் வியன்இலைக் கிளைக்கு.

தானறிந் ததனை தான்தா லாட்டினள்

அன்புறும் அதனை அவளா ராட்டினள்
ஊசி(யி)லை மரத்தின் உயர்செழும் முடிக்குள்
சடைத்தநற் றேவ தாருவின் கீழே;
அங்கே கரடியை அவளும் வளர்த்தனள்
அம்சடைப் பிராணியை அங்கே வளர்த்தனள்
தேனை நிகர்த்ததோர் செறிபுதர் அருகில்
நறையை நிகர்த்ததோர் நல்வனத் துள்ளே.

அந்தக் கரடியும் அழகாய் வளர்ந்தது
தரமுறும் உருவம் தானும் பெற்றது
குறுகிய கால்கள் கூனிய முழங்கால்
மென்மையும் தடிப்பும் மேவிய முன்வாய்
தட்டையாம் மூக்கு தலையோ அகன்றது
உரோமம் சடைத்து உறுசெழிப் பமைந்தது;
ஆயினும் பற்கள் அதற்கி(ன்)னும் இல்லை
உகிர்கள் வளரவும் ஒழுங்காய் இல்லை.

மியெலிக்கி என்பாள் மிளிர்கான் தலைவி
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
'நகங்களை இதற்கு நான்உரு வாக்குவேன்
இதற்கு நானும் எயிறுகள் கொணர்வேன்
ஏதும் கொடுஞ்செயல் இழையா திருப்பின்
தீச்செயல் ஏதும் செய்யா திருப்பின்.'

ஆனதால் சத்தியம் அளித்தது கரடி
கானகத் தலைவியின் கவின்முழங் கால்மேல்
ஒளிமய மான உயரிறை வனின்முன்
சர்வ வல்லவன் தன்வத னக்கீழ்
எக்கொடும் செயலும் இழையேன் என்று
தீச்செயல் ஏதும் செய்யேன் என்று.

மியெலிக்கி என்பாள் மிளிர்கான் தலைவி
தப்பியோ லாவின் தரமுறு மனையாள்
தேடிப் பற்களைச் சென்றனள் எழுந்து
விசாரணை செய்தனள் வியன்உகிர் கேட்டு
பலமுற நின்ற **பசும்பே ரியிடம்
உரமுற நின்ற **உயர்சூ ரையிடம்
கணுக்கள் நிறைந்த கனமர வேரிடம்
**பிசின்வடி அடிமரப் பெருங்குற் றியிடம்;
அவ்விட மிருந்து அவள்நகம் பெற்றிலள்
பற்களைத் தானும் பார்த்திலள் அவ்விடம்.

வளர்ந்ததோர் **ஊசி(யி)லை மரம்புல் வெளியில்
திடரினில் எழுந்தது திகழ்ஒரு **பசுமரம்
ஊசி(யி)லை மரத்தி லுறுவெள் ளிக்கிளை
பசுமை மரத்தின் பைம்பொன் கிளையது;
ஒடித்தனள் அவற்றை உவந்துதன் கைகளால்
அவற்றிலே யிருந்து ஆக்கினள் நகங்களை
இணைத்தனள் தாடை எலும்பினில் அவற்றை
பற்களின் **முரசில் பாங்குறப் பொருத்தினள்.

பின்னர் சடைத்த பிராணியை அனுப்பினள்
செல்லப் பிராணியை செல்வெளி விட்டனள்
சேற்று நிலங்களில் திரிந்தே அலைந்திட
புதர்பற் றைகளில் புகுந்தே புறப்பட
காட்டு வெளிகளில் கால்வைத் தேகிட
புல்மே டுகளில் போய்த்தவழ் தேறிட;
நன்றாய் நடக்க நவின்றனள் அதற்கு
அழகாய் ஓடவும் அதற்கு உரைத்தனள்
மகிழ்ச்சி மிக்கதாய் வாழ்வைக் கழிக்கவும்
புகழாய் நாட்களைப் போக்கவும் கூறினள்
திறந்த சதுப்பினில் திகழ்நிலப் பரப்பினில்
மிகுதொலைப் புற்றரை விளையாட்டு வெளியினில்
கோடையில் காலணி கொள்ளாது நடந்திட
இலையுதிர் காலத் தின்றியும் காலுறை
கொடிதாம் நாட்கள்தாம் கூடினும் வாழவும்
குளிர்கால மேற்படும் குளிரினைத் தாங்கவும்
சிறுபழச் செடியதன் சேர்அகத் துள்ளிலும்
கொழுந் தேவ தாருவின் கோட்டையின் பக்கமும்
வளர்சிறப்பூ சி(யி)லை மரத்ததன் அடியிலும்
சூரைச் சோலையின் மூலையின் புறத்திலும்
ஐந்து கம்பளி அகல்விரிப் படியிலும்
எட்டுப் போர்வைகள் இதக்கீழ் இருக்கவும்.
கொள்ளைச் செல்வக் குவையங் கடைந்தேன்
அங்கிருந் திவ்வென அருஇரை கொணர்ந்தேன்."

இளைய மக்களோ இவ்விதம் கூறினர்
முதிய மக்களோ மொழிந்தனர் இவ்விதம்:
"நெடுவனம் களிப்புற நிகழ்ந்தது எதுவெது?
கானகம் களிப்புற, கவின்வனம் மகிழ்வுற?
கானகத் தலைவர் களித்ததும் எவ்விதம்?
அன்புறும் தப்பியோ ஆனந்தம் கொண்டதும்
அரியஇப் பிராணியை அன்புடன் அளித்ததும்
தேனாம் செல்வம் சென்றிட விட்டதும்?
ஈட்டியொன் றதனால் இதுபெறப் பட்டதா
அல்லது அம்பினால் அடைந்திடப் பட்டதா?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"கானகம் களிப்புற வைத்தனம் நாங்களே
கானகம் களிப்புற கவின்வனம் மகிழ்வுற
கானகத் தலைவர் களித்ததும் இவ்விதம்
அன்புறும் தப்பியோ ஆனந்தம் கொண்டதும்.

மியெலிக்கி என்பாள் மிளிர்வனத் தலைவி
தெல்லர்வோ என்னும் தப்பியோ திருமகள்
வனமதன் வனிதை வடிவுறும் காரிகை
கானகத் துறையும் ஒருகவின் சிறுபெண்
வழித்தடம் காட்ட வந்தனள் எழுந்து
அடிச்சுவட் டுக்கு அயை(ா)ளம் கூறினள்

பாதையின் பக்கம் பதித்தாள் குறிகளை
புறப்பட்ட பயணம் போம்வழி காட்டினள்;
புகுமர வரிசைப் புள்ளிகள் செதுக்கினள்
அடைய(ா)ளம் இட்டே அமைத்தனள் மலைகளில்
கரடியின் வாயிற் கதவம் வரையிலும்
மற்றது வாழ்ந்த வதிவிடம் வரையிலும்.

அந்த இடத்தைநான் அடைந்திட் டதுமே
சேரும் இடத்தைச் சேர்ந்து முடிந்ததும்
அங்கி(ல்)லை ஈட்டியால் அடைந்திடும் அலுவலே
அங்கி(ல்)லை எய்து அடைந்திடும் வேலையே:
இளுவை வளையத் திருந்துதா னுருண்டது
கிடந்துஊ சிமரக் கிளையால் வீழ்ந்தது
வற்றிய கிளைகள் மார்பெலும் புடைத்தன
கிழித்துச் சுள்ளிகள் வயிற்றைத் திறந்தன."

பின்வரும் சொற்களில் பின்அவன் சொன்னான்
உரைத்தான் அவனே உரைத்தான் இவ்விதம்:
"என்றன் கரடியே, இணையில் அன்பே!
என்றன் பறவையே, என்றன் செல்லமே!
இவ்விதம் வைத்திடு இயைதலை யணிகளை
உன்றன் பற்களை ஒன்றாய்ச் சேர்த்திடு
கூரிய எயிற்றினைக் கொண்டுவா வெளியே
அகன்ற தாடை அவைஒன் றாய்ச் சேர்.
எதையும் கொடிதாய் எண்ணிட வேண்டாம்
எங்களுக் கெதுதான் இயைந்த போதிலும்
உடைதல் எலும்புகள், உடன்தலை நொருங்குதல்,
பற்கள் நறுநறு படுஒலி எழுப்புதல்.

* * *

இப்போது நான் கரடி எழில்நாசி யைப்பெறுவேன்
எப்போது மென்நாசிக் கிருக்கட்டும் மஃதுதவி
அப்படியே யாயிடினும் அதைமுற்றாய் நான் எடுக்கேன்
செப்பமதை மட்டும்தான் தேர்ந்தெடுப்பே னென்பதில்லை.

இப்போது நான்கரடி இருசெவிக ளைப்பெறுவேன்
எப்போது மென்செவிக்கு இருக்கட்டு மஃதுதவி
அப்படியே யாயிடினும் அதைமுற்றாய் நான்எடுக்கேன்
செப்பமதை மட்டும்தான் தேர்ந்தெடுப்பே னென்பதில்லை.

இப்போது நான்கரடி இருவிழிக ளைப்பெறுவேன்
எப்போது மென்விழிக்கு இருக்கட்டு மஃதுதவி
அப்படியே யாயிடினும் அதை முற்றாய் நான்எடுக்கேன்
செப்பமதை மட்டும்தான் தேர்ந்தெடுப்பே னென்பதில்லை.

இப்போது நான்கரடி யின்நெற்றி யைப்பெறுவேன்
எப்போது மென்நெற்றிக் கிருக்கட்டு மஃதுதவி
அப்படியே யாயிடினும் அதைமுற்றாய் நான்எடுக்கேன்
செப்பமதை மட்டும்தான் தேர்ந்தெடுப்பே னென்பதில்லை.

இப்போது நான்கரடி யின்வாயைய் பெறுகின்றேன்
எப்போது மென்வாய்க்கு இருக்கட்டு மஃதுதவி
அப்படியே யாயிடினும் அதைமுற்றாய் நான்எடுக்கேன்
செப்பமதை மட்டும்தான் தேர்ந்தெடுப்பே னென்பதில்லை.

இப்போது நான்கரடி யின்நாக்கைப் பெறுகின்றேன்
எப்போது மென்நாக்குக் கிருக்கட்டு மஃதுதவி
அப்படியே யாயிடினும் அதைமுற்றாய் நான்எடுக்கேன்
செப்பமதை மட்டும்தான் தேர்ந்தெடுப்பே னென்பதில்லை.

* * *

அவனையோர் மனிதனென் றழைக்கிறேன் இப்போ
மாபெரும் வீரனாய் மதிக்கிறேன் நானே
இறுகிய பற்களை எவரும் கணக்கிடில்
வரிசையாய் அமைந்திடு வல்லெயி றிளக்கிடில்
உருக்கில் இயைந்தவாய் ஒண்தா டையினால்
கடுமிரும் பானதன் கைமுட் டியதால்."

வேறுஅப் போதுயாரு(ம்)முன் வந்திலர்
அத்தகு வீரர் அங்கிலை யெவரும்
இறுகிய பற்களை எண்ணித் தானே
வரிசையாய் அமைந்த எயிறுகள் இளக்கிட
தனது முழங்கால் தனியெலும் பதன்கீழ்
கடுமிரும் பானதன் கைமுட்டி பற்றி.

கரடியின் பற்களைக் கையினா லெடுத்தனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"காட்டுக் கரடியே, கவினார் அப்பிளே!
கொழுவனத் தழகிய கொழுத்த பிராணியே!
உனக்கொரு பயணம் உள்ளது இப்போ
பிரய(ா)ணம் ஒன்று பேணவந் துள்ளது
இந்தச் சிறிய எழிற்கூ டிருந்து
தாழ்ந்த இந்தத் தனிக்குடி யிருந்து
உயர்வாய் அமைந்த ஒருஇல் லுக்கு
விசாலமாய் அமைந்த வீடொன் றுக்கு.

பொன்னே, இப்போ புறப்படு போக!
அன்புச் செல்வமே, அடிவைத் தேக!
பன்றிகள் செல்லும் பாதையின் பக்கம்
பன்றிக் குட்டிகள் படரும் வழியாய்
குறுங்கா டடர்ந்த குன்றுகள் மேலே
உயர்ந்து ஓங்கிய ஒளிர்மலை மீது
சடைத்த தேவ தாருகள் நோக்கி
நூறுகொப் பூசி(யி)லை நுவல்மரம் நோக்கி!
அங்குநீ இருப்பது அமைந்திடும் நன்றாய்
காலத்தை அங்கே கழிப்பது சிறப்பு
பசுவின் மணியொலி படர்தொலைக் கேட்கும்
மணிகள் கணீரிடும் மற்றவ் விடத்தில்."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
அவ்விட மிருந்து அகன்றில் வந்தனன்
இளைய மக்களோ இவ்வித மியம்பினர்
எழிலார் இனத்தவர் இவ்விதம் கூறினர்:
"கொள்ளைச் செல்வம் கொண்டெங் கேகினை?
தேடிய இரையும் சென்றது எவ்வழி?
கட்டிப் பனிமேல் விட்டே கினிரா?
கூழப்பனி யுள்ளே மூழ்கவிட் டீரா?
அகலசதுப் பூற்றில் அமிழவிட் டீரா?
அம்புற் றரைவெளி அடக்கம் செய்திரா?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"கட்டிப் பனிமேல் விட்டிட வில்லை
கூழ்ப்பனி யுள்ளே மூழ்கிட வில்லை
குரைநாய் அதனைக் குழப்பித் திரியும்
பறவைக் கொடியவை மறைந்திடச் செய்யும்;
அகலசதுப் புநிலத் தமிழ்த்தவு மில்லை
அம்புற் றரைவெளி அடக்கவு மில்லை
புழுக்கள் அதனை அழித்தே போடும்
கறுப்பு எறும்புகள் கடித்தே யுண்ணும்.

கொள்ளைச் செல்வம் கொண்டங் கேகினேன்
தேடிய இரையும் சென்றது அவ்வழி
தங்கத் தமைந்த தனிமலை முடிக்கு
வெள்ளிக் குன்றின் வியன்தோள் மேலே;
அகல்துய் யமரத் ததைநான் வைத்தேன்
நூறு கிளையுடை ஊசி(யி)லை மரத்தில்
சடைத்துத் தழைத்த தகுமொரு கிளைமேல்
இலைகள் நிறைந்த இதக்சுள் ளியின்மேல்
மனிதருக் கெல்லாம் மகிழ்ச்சியுண் டாக
வழிப்போக் கர்க்கு மதிப்புண் டாக.

கிழக்கே பார்த்திடக் கிடத்தினேன் முரசு
வடமேற் பக்கமாய் வைத்தேன் விழிகளை
இருப்பினும் சரியாய் இட்டிலன் உச்சியில்:
உண்மையி லங்ஙனம் உச்சியில் வைத்தால்
செறிகால் வந்து சேதப் படுத்தும்
குளிர்காற் றெழுந்து கொடுஞ்செயல் புரியும்;
ஆனால் நிலத்திலும் அதனைநான் வைத்திலன்;
அங்ஙனம் நிலத்திலே அதனைவைத் திட்டால்
சேர்ந்து பன்றிகள் திரியும் தூக்கி
புரட்டிக் கூர்வாய்ப் பிராணிகள் போடும்."

முதிய வைனா மொயினன் அதன்பின்
வெடித்துப் பாடினான் வெடித்தன பாடல்கள்
கவின்புகழ் அந்தியைக் கௌரவப் படுத்த
நிறைவுறும் நாளை நேர்மகிழ் வூட்ட.

முதிய வைனா மொயினன் மொழிந்தான்
உரைத்தான் அவனே உரைத்தான் இவ்விதம்:
"சுடரினை ஏந்தியே, சுடர்கொழுத் திடுவாய்,
பாடும் போதொளி பார்த்துநான் பாட,
இதோவரு கின்றது இசைக்கு மென்நேரம்
வாய்விழை கின்றது வழங்கிடப் பாட்டொலி."

பின்னர் பாடினன் பின்னர் இசைத்தனன்
மாலைப் பொழுது மகிழ்ந்தனன் முழுவதும்
பாடல்கள் பாடி முடிந்ததும் பகர்ந்தனன்
இறுதியில் அவனே இவ்விதம் கூறினன்:
"இன்னொரு நேரம் இறைவனேத் தாரும்!
எதிர்கா லத்தில் இறைநிரந் தரனே!
இவ்விதம் மகிழ்ந்து இன்புற் றிருக்க
இனியும் ஒருமுறை இவ்விதம் செயற்பட
கொழுத்த கரடியின் கொண்டாட் டத்தில்
பெரிதுநீள் உரோமப் பிராணியின் விழாவில்.

இறைவனே, எமக்கு என்றுமே யருளும்!
மெய்யாம் தெய்வமே, மீண்டும் தந்திடும்!
வழித்தடம் ஒளிர வழிக்குறி யமைத்திட
அடைய(า)ளம் மரங்களில் அமைத்தே வைத்திட
வீரர்கள் கூடிய வியன்குழு மத்தியில்
மறவர்கள் கூடிய மன்றத்து மத்தியில்.

இறைவனே, எமக்கு என்றுமே யருளும்!
மெய்யாம் தெய்வமே, மீண்டும் தந்திடும்!
தப்பியோ எக்களம் **தாமெக் களமிட
காட்டுச் குழலும் கலந்துகீச் சொலித்திட
இந்தச் சிறிய இவ்வெளிர் வெளிகளில்
தொடர்குறும் இந்தத் தோட்ட வெளிகளில்.

பகற்போ தெல்லாம் பாடியே மகிழ்வேன்
மாலையில் மகிழ்ச்சியில் மூழ்கிக் களிப்பேன்
இந்தப் பகுதியில் இந்நிலங் களிலே
பின்லாந் திந்தப் பெரும்பொழில் வெளிகளில்
எழுச்சி மிகுந்துயர் இளைஞர்கள் மத்தியில்
வளர்ந்திடு தேசீய மக்களின் மத்தியில்."

# கலேவலா

## பாடல் 47- சூரிய சந்திரர் திருடப்படுதல்

அடிகள் 1-40 : வைனாமொயினனின் இசையைக் கேட்பதற்காகச் சூரியனும் சந்திரனும் கீழிறங்கி வருகிறார்கள். வடநாட்டுத் தலைவி சூரியனையும் சந்திரனையும் கைபற்றி ஒரு மலையில் ஒளித்து விடுகிறாள். அத்துடன் கலேவலாவிலிருந்து நெருப்பும் அணைந்து விடுகிறது.

அடிகள் 41-82 : மாமுது மனிதன் என்று அழைக்கப்பட்ட கடவுள் விண்ணுலகத்தில் ஏற்பட்ட ஆச்சரியமான இருளைக் கண்டு புதிய சூரிய சந்திரருக்காக நெருப்பை உண்டாக்குகிறார்.

அடிகள் 83-126 : அந்த நெருப்புப் பூமியில் விழுகிறது; அதைப் பார்ப்பதற்கு வைனாமொயினன் இல்மரினனுடன் செல்கிறான்.

அடிகள் 127-312 : அந்த நெருப்பு `அலுவே` ஏரியுள் விழுந்ததென்றும் அதனை ஒருமீன் விழுங்கி விட்டது என்றும் அவர்களுக்கு காற்றின் கன்னி கூறுகிறாள்.

அடிகள் 313-364 : அந்த மீனைப் பிடிப்பதற்கு மரப்பட்டையின் தும்பினால் செய்த வலையுடன் வைனாமொயினனும் இல்மரினனும் புறப்படுகின்றனர்; ஆனால் மீனைப் பிடிக்க முடியவில்லை.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
கந்தலே யாழ்வெகு காலம் இசைத்தனன்
அதனை இசைத்தனன் அத்துடன் பாடினன்
உண்மையில் அதுமிக உளமகிழ் வளித்தது.

வளர்மதி வதிவிடம் வரைஇசைக் கேட்டது
கதிரவன் சாளரம் வரைகளிப் பமைந்தது
சந்திரன் தன்இல் தனால்வெளி வந்தது
மிலாறுவின் வளைகிளை மெல்அடி வைத்தது
இரவிதன் கோட்டையி லிருந்தெழுந் திட்டது
ஊசி(யி)லை மரமதன் உச்சிடம் கொண்டது
கந்தலே யாழதன் கவினிசை கேட்டிட
இசையின் பத்தை இனிதே நுகர்ந்திட.

வொவ்ஹி என்பவள் வடநிலத் தலைவி
நீக்கல் எயிறுள நீள்வட முதுபெண்
சூரிய னதனைத் தொடுகரம் பற்றினள்
சந்திரன் தனையும் தன்கைப் பிடித்தனள்
மதியை மிலாறுவின் வளைந்த கிளையினில்
கதிரை ஊசி(யி)லை கவின்மர உச்சியில்;
அவற்றை எடுத்துடன் அவள்இல் ஏகினள்
இருள்நிறை வடபால் இயைநிலத் தாங்கே.

தண்மதி திகழ்வதைத் தடுத்து மறைத்தனள்
ஒளிவிடும் மார்புறும் ஒருபா றையினுள்
தகிகதிர் ஒளிர்வதைத் தடுக்கப் பாடினள்
உருக்கினால் இயைந்த ஒருமலை யுள்ளே
இவ்விதம் பின்னர் இயம்பினள் அவளே:

"நீர்இங்கி ருந்து நீங்கவே வேண்டாம்
உதிக்கவும் வேண்டாம் ஒளிர்மதி, திகழ்ந்திட!
எழுந்திட வேண்டாம் இரவியே, ஒளிர்ந்திட!
விரும்பிநான் வந்துமை விடுத்தால் தவிர,
இனிநான் வந்துமை எழுப்பினால் தவிர,
ஒன்பது பொலிப்பரி யுடனே வந்து,
அவைஒரே பெண்பரி அரிதில் ஈன்றவை."

அவள்சந் திரனை அகற்றிய பொழுது
இரவியை எடுத்து ஏகிய பொழுது
வடபுலத் திருந்த மலைக்கற் பாறையுள்
இரும்பினால் இயைந்த இருங்குன் றுள்ளே
திருடினள் உண்மையில் திகழொளி அவளே
திருடினள் வைனோத் திருவகத் தீயை;
இல்எலாம் அதனால் இழந்தன நெருப்பை
வீடுகள் அனைத்தும் வெளிச்சம் இழந்தன.

இரவு வந்தது இடைவிடா திருந்தது
இருள் நிறைந்தது இரவதே நீண்டது
கலேவலாப் பகுதியில் கடுமிரு ளானது
வைனோ நாட்டின் வதிவிடங் களிலே
அத்துடன் விண்ணிலும் அங்கே இருளாம்
விண்முது மனிதரும் வீற்றிருக் கும்மிடம்.

நெருப்பிலா திருப்பது நிகரிலா இன்னல்
கனல்இலா திருப்பது கடுந்துய ரானது
மனிதர்சா தாரணர்(க்கு) மற்றஃதோர் தொல்லை
மாமுது மனிதர்க்கும் மற்றது தொல்லையே.

அம்முது மனிதர் அதிஉயர் தெய்வம்
விண்ணுறை அவரே வியன்பெரும் கர்த்தர்
நிலைமை அந்நியம் நேர்ந்ததாய் உணர்ந்தார்
சிந்தனை செய்தார் சீருற நினைத்தார்
மதியின்முன் வந்த மாயமஃ தென்ன!
கதிரின் பாதைநேர் கடும்புகார் என்ன!
திங்களும் இப்போ திகழா தமைந்ததே!
ஒண்கதிர் கூட ஒளிரா நின்றதே!

முகிலின் பாதையில் முன்அவர் நடந்தார்
விண்ணின் கரையிலும் விரைந்தே ஏகினார்
நீல நிறத்தில் காலுறை அணிந்து
உயர்ந்த காற்குதி ஒளிர்ந்தகா லணியில்
திங்களைக் காணத் தேடித் திரிந்தார்
இரவியை அவரும் எதிர்கொளச் சென்றார்
காய்நிலா அவரும் காணவே யில்லை
இரவியை அவரும் எதிர்கொள வில்லை.
அவ்விண்மா முதியர்தீ அறைந்தே எழுப்பினர்
வெந்தீச் சுடரை மின்னிடச் செய்தனர்
ஒளிச்சுடர் அலகுறும் ஒளிர்வாள் ஒன்றினால்
சிந்திப் பொறிஅகல் திகழ்அல கொன்றினால்;

ஒருவிரல் நகத்தில் ஒளிர்நெருப் பறைந்தனர்
உடலின் உறுப்பினில் ஒளிவிடச் செய்தனர்
மீமிசைச் சுவர்க்க வியனார் இடத்தில்
தாரகைக் குலத்தின் தவழ்விண் வெளியில்.

ஆமாம், அறைந்தெழுப்(ப) அனல்எழுந் ததுவாம்
நெருப்பின் பொறியினை மறைத்தே வைத்தனர்
பொன்னிலே புனைந்த பொற்பை ஒன்றிலே
வெள்ளியில் புனைந்த வெண்சிமிழ் ஒன்றிலே
பொறிதா லாட்டவோர் பூவையைக் கொண்டனர்
அதனைஆ ராட்டிட அழகுவிண் கன்னியை
உருவாக்கி யெடுக்கவோர் ஒளிர்புதுத் திங்களை
தோன்றவைத் திடப்புதுச் சூரிய னொன்றையே.

உயர்நீள் முகிலின் உச்சியி லிருந்தபெண்
அகல்விண் விளிம்பில் அமர்ந்தவக் கன்னி
அந்தப் பொறியை அவள்தா லாட்டினள்
அந்த ஒளியை அவள்ஆ ராட்டினள்
தங்கத் தியைந்த தனியொரு தொட்டிலில்
வெள்ளியில் இயைந்த வெண்நாண் பூட்டியே.

வெள்ளியில் இயைந்த வெண்நாண் அசைந்தது
தங்கத் தொட்டிலும் தனியா டிற்று
அசைந்தன முகில்கள் அதிர்ந்தது வானம்
வானக மூடியும் வளைந்தே வந்தது
தையலும் தீயைத் தாலாட் டுகையில்
அனலைப் பாவை ஆராட் டுகையில்.

தையலும் பொறியைத் தாலாட் டினளாம்
அனலைப் பாவை ஆராட் டினளாம்
கனலினை விரல்களால் காத்து வளர்த்தனள்
அதனைக் கைகளால் அணைத்து வளர்த்தனள்,
மூடமா தங்கையால் ஆடெரி **வீழ்ந்தது
கவன மிலாதவள் கரங்களால் கனலும்
காத்து வளர்த்தவள் கைகளி லிருந்து
கிளறிய பெண்ணவள் விரல்களி லிருந்து.

சுவர்க்கம் பிளந்து துவாரம் விழுந்தது
வானகம் முழுவதும் சாரளம் வந்தது
தீப்பொறிச் சுடரும் சிதறித் தெறித்தது
சென்னிறப் பொறியாய்ச் சிந்திப் பறந்தது
சீறிச் சுவர்க்கத் தூடாய்ச் சென்றது
தொடர்முகில் ஊடாய்த் துளைத்து விரைந்தது
விண்ஒன் பதுவாம் விரைந்தவற் றூடாய்
ஆறு ஒளிறும் மூடிகள் ஊடாய்.

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"சகோதர, கொல்ல தகைஇல் மரின!
புறப்படு வோம்நாம் போய்ப்பார்ப் பதற்கு
புறப்பட்டுப் போவோம் போய்ப்படிப் பதற்கு

எவ்வகை நெருப்பவ் விழிந்தவந் நெருப்பு
புதுமையாய் வீழ்ந்த பொறியது எவ்வகை
மேலே இருக்கும் விண்ணிலே யிருந்து
கீழே யிருக்குமிவ் கிளர்புவி மீது
வண்ண நிலவின் வளையமாய் இருக்குமோ!
அல்லது சூரியன் அதன்சக் கரமோ!

இருவரும் புறப்பட் டேகினர் நாயகர்
ஏகினர் அடிவைத் தினிதுசிந் தித்தனர்
அவ்விடம் எங்ஙனம் அடையலாம் என்று
எவ்வழி அங்குபோய் இறங்கலாம் என்று
செந்தீ யேகிச் சேர்ந்தஅவ் விடத்தே
பொறியனல் வீழ்ந்து போனஅவ் விடத்தே,

அவர்களின் எதிரே ஆறொன் றடுத்தது
பெருங்கட லொன்று பெருக்கெடுத் ததுபோல்;
முதிய வைனா மொயினனு மாங்கே
படகு ஒன்றினை படைக்கத் தொடங்கினன்
காட்டிலே ஒன்றைக் கட்டத் துணிந்தனன்
அடுத்தவன் கொல்லன் அவன்இல் மரினன்
ஊசி மரத்திலே உயர்துடுப் பமைத்தனன்
தேவ தாருவில் செய்தனன் தண்டுகள்.

இப்போ தயார்நிலைக் கிருந்ததோர் தோணி
வேண்டிய துடுப்புகள், மிண்டுக் குவட்டுடன்,
தண்ணீர் மேலே தள்ளினர் தோணியை
வலித்துச் சென்றனர் வலுவிரைந் தேகினர்
சுற்றியே சென்றனர் தொடர்*நெவா நதியினை
எழில்நெவாக் கடல்முனை எல்லையை அடைந்தனர்.

*வாயுவின் மகளவள் வனிதை இன்கன்னி
இயற்கை மகளிரில் இவள்வய துயர்ந்தவள்
அவர்களின் எதிரே அப்பெண் வந்தனள்
இவ்விதம் மொழிந்தனள் இயம்பினள் இவ்விதம்:
"மனிதரில் எவ்வகை மனிதரோ நீங்கள்
ஆம்உங் களைநான் அழைப்பது எவ்விதம்?"

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"நாங்களோ இங்கே நற்கட லோடிகள்
முதிய வைனா மொயினனே நான்தான்
அடுத்தவன் கொல்லன் அரும்இல் மரினன்;
உன்னுடை இனத்தை உரைப்பாய் இப்போ
அரிவையே நின்னைநாம் அழைப்பது எவ்விதம்?"

பின்வரும் சொற்களில் பேசினள் பாவையும்:
"பெண்களில் முதிர்ந்த பெண்ணும் நானே
காற்றின் மகளிரில் மூத்தவள் நானே
அன்னை யரில்முதல் அன்னையும் நானே
ஐந்து மகளிரின் அம்சம் கொண்டவள்
ஆறு மணமகள் அழகு படைத்தவள்;

எங்கே பயணம் எடுத்தீர் மனிதர்காள்?
புறப்பட்ட தெங்குநீர் புகலுக வீரரே!"

முதிய வைனா மொயினன் மொழிந்தான்
உரைத்தான் அவனே உரைத்தான் இவ்விதம்:
"அணைந்து போனது அரியஎம் நெருப்பு
தொலைந்து போனது சுடருமெங் களலனல்
நெடுநாள் நாங்கள் நெருப்பிலா திருக்கிறோம்
இருட்டில் நாங்கள் இருக்கிறோம் மறைந்து;
இப்போ தெம்மனத் திருப்பது எதுவெனில்
அனலைப் பற்றியே அறியச் செல்வதாம்
அவ்வனல் சுவர்க்க மதிலிருந் திழிந்தது
மேகத் திருந்து வீழ்ந்தது அவ்வனல்."

பின்வரும் சொற்களில் பேசினள் பாவையும்
உரைத்தாள் அவளே உரைத்தாள் இவ்விதம்:
"தீகொடி ததனைத் தெரிவது கடினம்,
அனலோ கொடியது அறிவது சிரமம்;
செய்கைகள் முன்னரே செய்தது நெருப்பு
ஆற்றிய தணலும் அனேகம் சேதம்:
சுடர்விட் டெரிந்தன சுடர்தீப் பொறிகள்
சென்னிறப் பந்தாய்த் திகழ்ந்துகீழ் வீழ்ந்தது
இறைவனார் படைத்த பெருவெளி யிருந்து
முதியவர் படைத்த முழுவா னிருந்து
மென்மையாம் சுவர்க்க வெளிப்பரப் பிருந்து
கிளர்சீர் வானைக் கிழித்துக் கொண்டே
ஒட்டடை படிந்த உயர்புகைக் குழல்வழி
வற்றிய கூரை மரத்தினைக் கடந்து
*தூரியின் புதிய தூய வதிவிடம்
வணங்குதற் குரியவன் வயங்குமில் லுள்ளே.

அங்ஙனம் அவ்விடம் அதுவந் துறுகையில்
தூரியின் புதிய தூயஇல் லுக்கு
செயல்கள் கொடிதாய்ச் செயத்தொடங் கிற்று
தீயவை அங்கே செயத்தயா ரானது:
ஒண்தொடி யார்மார் புடைத்துப் போட்டது
கன்னியர் மார்பின் காம்பைத் தொட்டது
பையன்கள் முழங்கால் பலவு மழிந்தது
தலைவரின் தாடியை தகித்து முடித்தது.

ஒருதாய் குழந்தைக் கூட்டினள் பாலினை
துரதிர்ஷ்ட மான தொட்டில் ஒன்றிலே
வன்னெருப் பவ்விடம் வந்தே சேர்ந்ததும்
அதன் கொடுஞ்செயலை ஆற்றி முடித்தது
தொட்டிற் குழந்தையைத் துடிக்க எரித்தது
தாயின் மார்பையும் தாக்கி எரித்தது;
குழந்தை மரணக் கொடுமுல கடைந்தது
உண்மையில் பையன் உற்றனன் துவோனலா
இறப்பதற் கென்றவன் இயற்றப் பட்டவன்
அழிவதற் கென்றே ஆக்கப் பட்டவன்

செந்நிறத் தீயினால் சேர்ந்தமாத் துயரால்
கனலால் நேர்ந்த கடும்வா தையினால்.

ஆயினும் அன்னை அறிந்தது அதிகம்
அதனால் இறப்புல கவள்சென் றிலளாம்
தீயைத் தடுக்கத் தெரிந்தனள் அவளும்
அனலை அடக்கவும் அறிந்தனள் அவளே
தையல் ஊசியின் தன்சிறு கண்வழி
கோடரி முடியில் கொள்ளும் புழைவழி
உறுகொதித் திண்பனிக் **கருவியின் துளையில்
வயல் வெளிஎல்லைகள் வழியத னாலே."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
விரைவாய் அவனும் வினவினன் இவ்விதம்:
"அங்கிருந் தெங்கே அனலும் சென்றது
பறந்தது எங்கே படர்நெருப் பின்பொறி
தூரியின் வயல்வெளி தொடுஎல் லையினால்
அடவிசென் றதுவா அல்லது கடலா?"

மங்கையும் இவ்விதம் மறுமொழி கூறினள்
உரைத்தாள் அவளே உரைத்தாள் இவ்விதம்:
"அவ்விட மிருந்து அனல்செல் கையிலே
நெருப்பும் விரைவாய் நேராய்ச் செல்கையில்
எரித்தது முதலில் எல்லையி லாநிலம்
அதிக நிலங்கள் அதிக சதுப்புகள்
இறுதியில் அதுவும் இருநீர்ச் சென்றது
*அலுவே ஏரியின் அலைகளுள் சென்றது
எரியும் போலது இருந்தது தீப்பிடித்(து)
தீப்பொறி பரவும் சிதறியென் றிருந்தது.

கோடைகா லத்து குதிர்முந் நிசிகளில்
இலையுதிர் காலத் திரவுகள் ஒன்பதில்
ஊசி(யி)லை மரத்து உயர்நுரை எழுந்தது
அதன்விளிம் புவரை அதுஇரைந் தெழுந்தது
அந்தப் பயங்கர அனலதன் தன்மையால்
கொதிக்கும் அந்தக் கொடுங்கனற் சக்தியால்.

மீன்கள் காய்ந்த வெந்தரை வீழ்ந்தன
ஒருவகை**மீன்கள் உடன்வெளி வந்தன;
அப்போ மீன்கள் அவற்றைக் கண்டன
இவ்விதம் ஓரின மீன்கள் எண்ணின
எவ்விதம் இருப்பது எங்ஙனம் வாழ்வது;
ஓரின மீன்தன் உறுகுடிற் கழுத்து
தோட்டத்துக் கழுதன துன்னுவே றினமீன்
அழுதது **வெண்மீன் அதன்கற் கோட்டைக்(கு).

வளைந்த கழுத்து **மச்சமொன் றேகிற்(று)
நெருப்புப் பொறிக்கு நேரெதிர் சென்றது
அம்மீன் நெருப்பை அடைந்திட வில்லை
அதன்பின் சென்றது அழகுநீல் **வெண்மீன்;

வெங்கன லதையும் மீன்விழுங் கிற்று
அனலின் பொறியை அம்மீன் உண்டது.

நீராய் மீண்டும் மாறிற் றலுவே
அதன்கரை மீண்டும் அதற்கு வந்தன
முந்திய இடத்தில் முன்போ லிருந்தன
ஓர்நாள் கோடை உறுபொழு திரவில்.

காலம் சற்றுக் கரைந்துசென் றிட்டது
உண்டமீ னுக்கு உடல்நோ வந்தது
விழுங்கிய மீற்கு மிகுந்தது துன்பம்
பெரிதயின் றதற்குப் பெரியதோர் துயரம்.

நீந்தி யலைந்தது நீந்தித் திரிந்தது
நீந்திற் றொருநாள் நீந்திற் றிருநாள்
வெண்மீன் இடங்களில் வந்தது நீந்தி
வஞ்சர மீனின் வளைகளின் நடுவே
காண்ஆ யிரங்கூர்க் கடல்முனை கடந்து
நூறுதீவுகள் நுழைந்தடிச் சென்று;
ஒவ்வொரு கடல்முனை உரைத்தது அறிவுரை
தீவொவ் வொன்றும் செய்தியைச் சொன்னது:
'அமைதியாம் இந்த அகல்நீரி லில்லை
இன்னலார் அலுவேயில் எதுவுமே யில்லை
இழிந்த இம்மீனை விழுங்குவ தற்கு
துயருற்ற மீனைத் தொட்டுவீழ்த் துதற்கு
எரியும் நெருப்பினால் இடர்படு மீனை
அனலால் இன்னல் அடைந்த மீனினை.'

கேட்டதிச் செய்தி கிளர்வெளு வஞ்சிரம்
விழுங்கிற் றுவது வெண்ணீல் மீனினை
காலம் சற்றுக் கரைந்துசென் றிட்டது
உண்டமீ னுக் குடல்நோ வந்தது
விழுங்கிய மீற்கு வெந்துயர் வந்தது
பெரிதயின் றதற்குப் பெரியதோர் துயரம்.

நீந்தி அலைந்தது நீந்தித் திரிந்தது
நீந்திற் றொருநாள் நீந்திற் றிருநாள்
வஞ்சிர மீனின் வளைகளின் நடுவே
கோலாச்சி மீனின் கொழுந்தோட் டவெளி
காண்ஆ யிரங்கூர்க் கடல்முனை கடந்து
நூறு தீவுகள் நுழைந்தடிச் சென்று;
ஒவ்வொரு கடல்முனை உரைத்தது அறிவுரை
தீவொவ் வொன்றும் செய்தியைச் சொன்னது:
'அமைதியாம் இந்த அகல்நீரி லில்லை
இன்னலார் அலுவேயில் எதுவுமே யில்லை
இழிந்த இம்மீனை விழுங்குவ தற்கு
துயருற்ற மீனைத் தொட்டுவீழ்த் துதற்கு
எரியும் நெருப்பினால் இடர்படு மீனை
அனலால் இன்னல் அடைந்த மீனினை.'

நரைக்கோ லாச்சியந் நளிர்வழி வந்தது
விழுங்கிற் றுவது வெளுறுவஞ் சிரத்தை
காலம் சற்றுக் கரைந்து சென்றிட்டது
உண்டமீ னுக்கு உடல்நோ வந்தது
விழுங்கிய மீற்கு வெந்துயர் வந்தது
பெரிதயின் றதற்குப் பெரியதோர் துயரம்.

நீந்தி அலைந்தது நீந்தித் திரிந்தது
நீந்திற் றொருநாள் நீந்திற் றிருநாள்
பலகடற் புள்ளுறை பாறைகள் நடுவே
கடற்பற வைகளின் கற்குவைப் பக்கம்
காண்ஆ யிரங்கூர்க் கடல்முனை கடந்து
நூறு தீவுகள் நுழைந்தடிச் சென்று;
ஒவ்வொரு கடல்முனை உரைத்தது அறிவுரை
தீவொவ் வொன்றும் செய்தியைச் சொன்னது:
'அமைதியாம் இந்த அகல்நீரி லில்லை
இன்னலார் அலுவேயில் எதுவுமே யில்லை
இழிந்த இம்மீனை விழுங்குவ தற்கு
துயருற்ற மீனைத் தொட்டுவீழ்த் துதற்கு
எரியும் நெருப்பினால் இடர்படு மீனை
அனலால் இன்னல் அடைந்த மீனினை.' "

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
அடுத்தவன் கொல்லன் அவன்இல் மரினன்
மரவுரித் தும்பில் வலையொன் றியற்றினர்
திகழ்சூ ரைச்செடி சேர்த்துச் செய்தனர்
தகுமல ரிப்புனற் சாயம் தோய்த்தனர்
மிகுமல ரிமர வுரியிற் செய்தனர்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
வலைவே லைக்கு வைத்தனன் பெண்களை
வலையின் பக்கமாய் மகளிரை அனுப்பினன்
ஏகினர் வலையை இழுக்கச் சோதரி(கள்)
அவர்கள் இழுத்தனர் அவர்கள் அசைத்தனர்
தீவதன் பக்கம் செறிகடல் முனைத்திசை
வஞ்சிர மீனின் வலைகளின் நடுவே
வெண்மீன் வாழும் வியன் தீ வருகே
பழுப்புப் புல்வளர் படுக்கைகள் பக்கம்
மிகுமெழில் நாணல் மேடையின் பக்கம்.

அவர்கள் முயன்றனர் அவர்கள் பிடித்தனர்
அவர்கள் இழுத்தனர் அவர்கள் இயங்கினர்
தலைகீ ழாக வலையைப் புரட்டினர்
வலையை இழுத்தனர் பிழையாம் பக்கம்
அவர்களம் மீனினை அங்கே பெற்றிலர்
எதுவும் அகப்பட வில்லையம் முயற்சியில்.

நின்ற சகோதரர் நீரில் இறங்கினர்
மனிதர்கள் சென்றனர் வலையின் பக்கமாய்
வலையை அலம்பினர் வலையால் பிடித்தனர்

அவர்கள் இழுத்தனர் அவர்கள் வீசினர்
கற்பாறை உச்சியில் கடற்குடா வாயிலில்
கலேவாப் பகுதியின் கற்குன் றதனில்.

அவர்களம் மீனினை அங்கே பெற்றிலர்
நாடிய மீனைத் தேடியும் கொண்டிலர்
நரைக்கோ லாச்சி விரைந்தங் குற்றில(து)
குடாவின் அமைதிக் குளிர்ந்தநீ ரிருந்து
பெரிய நீரின் பேர்ப்பரப் பிருந்து
அடர்த்தியில் வலைக்கண், அவைமீன் சிறியவை.

இப்போ மீன்கள் இட்டன முறைப்பா(டு)
இன்னொரு கோலாச்சிக் கிளம்பிய ததேமீன்
**கெண்டை மீனிடம் கேட்டது வெண்மீன்
வஞ்சிரம் வேறொரு வஞ்சிர மீனிடம்:
"மரணித் தனரா மாபுகழ் மனிதர்
கலேவா மக்கள் காணா தொழிந்தரா
சணற்கயிற் றினிலே தகும்வலை பின்னுவோர்
பின்னி நூலில் பெருவலை யெடுப்போர்
நெடும்பெருந் தடியால் நீரினை யடிப்போர்
நீண்ட பிடியோடு நிகழ்த்துவோர் தொழிலை?"

முதிய வைனா மொயின னறிந்தான்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"எந்தவீ ரருமே இறந்திட வில்லை
கலேவா மக்களும் கவிழ்ந்திட வில்லை
ஒருவர் இறந்தார் இருவர் பிறந்தார்
நீரை யடிக்கும் சீர்த்தடி யுடையோர்
மேலும் நீண்ட மிகுகைப் பிடியுளோர்
வலைகளோ கொடுமை மடங்கிரண் டினவே."

# கலேவலா
# பாடல் 48 - நெருப்பை மீட்க வலை வீசுதல்

அடிகள் 1-192 : நாயகர்கள் சணற்கயிற்றில் வலை பின்னி, நெருப்பை விழுங்கிய மீனைப் பிடிக்கிறார்கள்.

அடிகள் 193-248 : மீனின் வயிற்றில் நெருப்பைக் காண்கிறார்கள். ஆனால் நெருப்புக் கொழுந்து விட்டெரிந்து இல்மரினனின் கன்னத்தையும் கைகளையும் கடுமையாய் எரிக்கிறது.

அடிகள் 249-290 : நெருப்பு காட்டுக்குள் பரந்து சென்று பல இடங்களை எரிக்கிறது. பரந்து தொடர்ந்து சென்று கொண்டிருந்த நெருப்புக் கடைசியில் கைப்பற்றப்பட்டு கலேவா மாகாணத்தின் இருண்ட வதிவிடங்களுக்குக் கொண்டு வரப்படுகிறது.

அடிகள் 291-372 : இல்மரினன் எரிகாயங்களிலிருந்து குணமடைகிறான்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
நிலைபெறும் மாய நெறியறி முதல்வன்
எண்ணம் ஒன்று இருந்ததிற் கொண்டனன்
சிந்தனை செய்தொரு திட்டம் பெற்றனன்
சணற்கயிற் றாலொரு தகுவலை பின்னிட
ஒருவலை நூறுகண் உள்ளதாய்ச் செய்திட.

இவ்விதம் அதன்பின் இயம்பினன் அவனும்
இயம்பினன் அவனே இயம்பினன் இவ்விதம்:
"உளரா யாரெனும் உயர்சணல் விதைப்பவர்
ஒருவன் விதைப்பவன் ஒருவன் உழுபவன்
நானொரு வலையினை நன்றாய்ப் பின்னிட
ஒருவலை நூறுகண் உள்ளதாய்ச் செய்திட;
இழிந்தஅம் மீனை இறுகப் பிடித்திட
எளியஅம் மீனை எழாதுவீழ்த் துதற்கு."

சிறுநில மொன்றைத் தேடிக் கண்டனன்
எரிக்கப் படாத இயல்புள ஒருநிலம்
அகன்று சதுப்பாய் அமைபெரு நிலத்திலே
அடிமரக் கட்டைகள் அவையிரண் டிடையே
எடுத்தனர் கிளறி இருமரக் கட்டைவோ்
அங்கே கண்டனர் அரியதோர் சணல்விதை
துவோனியின் புழுவின் தொல்மறை விடத்தில்
ஒருநிலப் புழுவின் உறுகளஞ் சியத்தில்.

அதிலொரு சாம்பல் அதன்குவி விருந்தது
கொதித்துயர் சாம்பல் குவிந்து கிடந்தது
இருந்தவோர் தோணியை எரித்ததால் வந்தது
அதுபட கொன்றினை அழித்ததால் வந்தது;
விதைச்சணல் அங்கே விதைக்கப் பட்டது
மென்மைச் சாம்பலும் மிக்குழப் பட்டது
அலுவே ஏரியின் அகல்கரைப் பக்கமாய்
வளக்களி மண்ணிறை வயல்நிலத் தினிலே.

அதன்பின் அங்கே அதன்முளை எழுந்தது
சணற்செடி செழித்துத் தனிவிரிந் தகன்றது
உரமுறும் செடியொன் றுயர்ந்து வளர்ந்தது
கோடைக்கா லத்துக் குறித்தவோர் நாள்நிசி.

சணல்விதை விதைத்த தகுமவ் விரவில்
அவிர்மதி ஒளியில் அதுஉழப் பட்டது
வகுத்துச் சுத்தமாய் வாரவும் பட்டது,
அழகுறப் பிடுங்கி அலசவும் பட்டது,
பக்குவ மாகப் பறித்தடப் பட்டது
தேய்த்துக் கணுக்கள் நீக்கப் பட்டன.

அதன்பின் சணல்பத மதுசெயப் பட்டது
பதப்படுத் துதலும் பண்ணி முடிந்ததும்
விரைவாய்த் தொங்க விடப்பட் டதது
உடனது அவசர முலர்த்தவும் பட்டது.

எடுத்தேகப் பட்டது இல்லினுக் குடனே
புடைத்துக் கூளம் போக்கிடப் பட்டது
குறுகத் தறித்து அறுக்கப் பட்டது
சுத்தம் கூளத் தட்டிலே யானது.

வாரப் பட்டது வனப்பொடு கவனமாய்
கோதப் பட்டது மோதுமங் கொளியில்
கட்டப் பட்டது கொத்துக் கொத்தென
எடுத்தேகப் பட்டது இகல்நூற் கும்தடிக்(கு)
கோடைக்கா லத்துக் கொளுநாள் ஒருநிசி
இரண்டு நாட்களுக் கிடைப்படு நேரம்.

அதனை நூற்றனர் அருஞ்சகோ தரிகள்
நூலாய் மாற்றினர் நுவல்மைத் துனிகள்
வலையாய்ப் பின்னினர் வன்சகோ தரர்கள்
இணைத்தனர் கயிறுகள் இனியமா மன்மார்.

பின்னல் ஊசி பெருகதித் திரும்ப
முன்பின் உருளை முழுவிரை வசைந்தது
அவ்வலை தயாரா யாகிய வேளை
இழுவைக் கயிறுகள் முழுத்தயா ராகையில்
கோடைகா லத்து கொளுநாள் ஒருநிசி
அதனிலும் பாதி அமைந்த நேரத்தில்.

தகுவலை யிப்போ தயாரா யிருந்தது
இழுவைக் கயிறுகள் முழுவா யத்தம்
அதனது அகலம் **அறுநூ றடியாம்
இதனுடன் நீளமோ **எழுநூ றாறடி
அமிழக் கற்களும் அமைக்கப் பட்டன
கட்டைகள் மிதக்கக் கட்டப் பட்டன.

இளைஞர் வலைக்கு இனிதே சென்றனர்

முதியவர் வீட்டில் மூழ்கினர் சிந்தனை:
அந்த இலக்கை அடைவரா இவர்கள்
நினைவில் உள்ளது நேர்அகப் படுமா!

அவர்கள் வீசினர் அவர்கள் எறிந்தனர்
அவர்கள் இழுத்தனர் அவர்கள்போ ராடினர்
நீளமாய் இழுத்து நீர்க்கரை சென்றனர்
வலித்துச் சென்றனர் வன்நீர்க் குறுக்காய்
அவர்கள் பெற்றனர் அங்குசிற் சிலமீன்:
சிலவெள்ளி **மீனும் சிலவேறு மீனும்
மற்றும் **சிலமீன் வாய்ந்தமுள் மீனும்
**வெண்மீன் சிலவும் மீன்கசப் பானதும்;
ஆயினும் அம்மீன் அகப்பட வில்லை
வலைசெய்த தெதற்கோ வயப்பட விலையது.

முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"ஓ,நற் கொல்ல, உயர்இல் மரின!
நாமே செல்வோம் நாடியவ் விடத்தே
வலையுடன் அங்கே வன்தண் ணீருள்."

இரண்டு வீரரும் ஏகினர் எழுந்து
நீருள் வீசினர் நேரெடுத் தவ்வலை
வீசப் பட்டது வியன்வலை ஒரு**சிறை
பரந்த நீரின் படர்தீ வொன்றிலே
வீசப் பட்டது மிகுமற் றொருசிறை
குடாக்கடல் முனையின் கொள்திடல் ஒன்றிலே
இழுவைத் தளமும் இயற்றப் பட்டது
இகல்வை னோத்தொல் இறங்கு துறையிலே.

அவர்கள் வீசினர் அவர்கள் எறிந்தனர்
அவர்கள் இழுத்தனர் அவர்கள் வலித்தனர்
போதிய அளவு புதுமீன் பிடித்தனர்:
அப்படிச் சிலமீன் இப்படிச் **சிலமீன்
அவ்விதம் சிலமீன் இவ்விதம் **சிலமீன்
**வேறுமீன் சிலவாம் வியன்வஞ் சிரம்சில
தண்ணீர் வாழும் தகுபல வகைமீன்;
அந்த மீனோ அகப்பட வில்லை
வலைசெய்த தெதற்கோ வயப்பட விலையது
இழுகயி றெதற்கோ எதிர்ப்பட விலையது.

முதிய வைனா மொயினனைப் போது
சேர்த்தனன் மேலும் சிலமீன் வலைகளை
நீட்டிப் பக்க நெடுஞ்சிறை விரித்தான்
**ஐந்நூறு ஆறடி அதனது தூரம்
**எழுநூறு ஆறடி இழுவடம் நீளம்
உரைத்தான் ஒரு சொல் உரைத்தான் இவ்விதம்:
"அகல்வலை எடுத்து ஆழத் தேகுவோம்
இன்னும் தூரம் எடுத்தே போவோம்
இழுப்போம் நீரினுள் இன்னும் வலைகளை
மற்றும் ஒருமுறை வலிதினில் முயல்வோம்."

அகல்வலை எடுத்து ஆழம் சென்றனர்
இன்னும் தூரம் எடுத்தே போயினர்
இழுத்தனர் நீரினுள் இன்னும் வலைகளை
மற்றும் ஒருமுறை வலிதின் முயன்றனர்.
முதிய வைனா மொயினனு மாங்கே
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"*வெல்ல மோவே, விரிநீர்த் தலைவியே!
**நீர்க்கோரை மார்புறு நீரின் நங்கையே!
வந்துநின் சட்டையை மாற்றுக, வருக,
இப்போது மாற்றுக, இயைந்தநின் உடைகள்.
கோரைப்புற் சட்டையை கொண்டுளாய் இப்போ
திகழ்கடல் நுரையாற் செய்தமே லாடை
செறிகால் மகளினால் செய்தமே லுடையை
அலைமகள் உனக்கு அளித்த ஆடையை:
சணலிலே நெய்த சட்டைநான் தருவேன்
சிறந்த சணலிலே செய்தசட் டையினை
நிலவு மகளினால் நெய்ததிச் சட்டை
செங்கதிர் மகளினால் செய்ததிச் சட்டை.

அஹ்தோ வேநீ, அலைகளின் தலைவனே!
ஆழக் குழிகள்நூ றாளும் முதல்வனே!
அடிமுப் பதுநீள் செடிநாற் றெடுப்பாய்
**ஏழா றடிநீள் கம்பம் எடுப்பாய்
அவற்றுடன் நகர்வாய் அலைகடற் பரப்பு
கடலா ழத்தைக் கலக்கி விடுவாய்
அடுக்கு மீன்முள்ளை உயர்த்து கிளறி
மீன்கூட் டத்தை விரட்டித் துரத்து
இந்த வலையை இழுக்கும் இடத்திலே
மிதவைகள் நூறு மிதக்கும் இடத்திலே
மச்சங் களின்ஆழ் வசிப்பிடத் திருந்து
வஞ்சிரம் வாழும் வலைகளி லிருந்து
அகன்ற கடலடி ஆழத் திருந்து
இருண்ட ஆழ இருங்குழி யிருந்து
சூரிய ஒளியது தொடாவிடத் திருந்து
மணல்தேய்க் காத மற்றிடத் திருந்து.

சிறியதோர் மனிதன் செழுங்கட லெழுந்தனன்
வீசலை மேலொரு வீரன் எழுந்தனன்
நின்றனன் கடலின் நீர்ப்பரப் பினிலே
பின்வரும் சொற்களில் பின்அவன் சொன்னான்:
"ஆளொன்று நீரினை அடித்திடத் தேவையா
அடிப்பதற் கோராள் அதிநீள் கம்பினால்?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே"
"ஆமப்பா, நீரை அடிக்கஆள் தேவை,
அடிப்பதற் கோராள் அதிநீள் கம்பினால்."

வீரன், குள்ளன், வியன்சிறு மனிதன்.

கடற்கரை யூசி(யி)லைக் கனமரம் பற்றினன்
உயர்ந்த தாருவில் உறுகம் பொடித்தனன்
ஒருகற் பாறையை உடனதில் கட்டினன்
இவ்விதம் வினவினன் இவ்விதம் கேட்டனன்:
"என்பலத் துக்கு ஏற்ப அடிக்கவா
உண்மையில் என்பலம் உள்ளதற் கேற்ப
அல்லது கருவி அதன்பலத் தேற்றதாய்?"

முதிய அறிஞன் வைனா மொயினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"அடித்தால் கருவி அதன்பலத் தேற்ப
அதுவே போதிய தாக இருக்கும்."

வீரன், குள்ளன், வியன்சிறு மனிதன்.
உறுநீ ரிப்போ ஓங்கி யடித்தான்
அடித்தனன் கருவி அதன்பலத் தேற்ப
மீன்கள்ஏ ராளம் விரட்டிட லாயினன்
இருந்தஅவ் வலையினை இழுக்கும் இடத்திலே
மிதவைகள் நூறு மிதக்கும் இடத்திலே.

இகல்துடுப் பதுவைத் திருந்தனன் கொல்லன்,
நிலைபெறு முதிய வைனா மொயினன்
உயர்த்தி எடுத்தனன் உறுவலை அவனே
இழுவைக் கயிற்றினை இழுத்துப் பிடித்தனன்;
முதிய வைனா மொயினன் மொழிந்தான்:
"இதோமீன் திரளது இப்போ வந்தது
இந்த வலையதை இழுக்கும் இடத்திலே
மிதவைகள் நூறு மிதக்கும் இடத்திலே."

உறுவலை மேலே உயர்த்தி எடுத்தனர்
உடன் வெறி தாக்கினர் உதறி எடுத்தனர்
வைனா மொயினனின் வன்பட குள்ளே
மீன்கூட் டத்தை மிகஅவர் பிடித்தனர்
வலைசெய்த தெதற்கோ வலிததைப் பிடித்தனர்
இழுகயி றெதற்கோ எதிரதைப் பிடித்தனர்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
கரையின் பக்கமாய்த் தன்பட கோட்டினன்
நீல நிறத்து நேர்பட குத்துறை
இறங்கு துறையின் எழில்செங் கரைக்கு;
சுத்தம் செய்தனர் தொகைமீன் கூட்டம்
எடுத்தனர் மீன்முள் எளிதொரு குவியல்
நரைக்கோ லாச்சி நவில்மீன் பெற்றனர்
நீடிய காலமாய்த் தேடிய மீனது.

முதிய வைனா மொயினனப் போது
எண்ணிப் பார்த்தனன் இவ்விதம் அவனே:
"இதைநான் கையால் இனித்தொட லாமா
இல்லா(து) இரும்பால் இயைந்த கையுறை.
அல்லது கையுறை கல்லில்இல் லாமல்

அல்லது செம்பில் அமையுறை இலாமல்?"

எறிகதி ரோன்மகன் இதனைக் கேட்டனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"கோலாச்சி பிளப்பேன் கொள்வோன் நானெனில்
என்கரத் ததனை எடுக்கத் துணிவேன்
எந்தையின் உறைவாள் என்னிடத் திருந்தால்
புகழ்பெற் றோரின் புடைவா ளிருந்தால்."

விண்ணகத் திருந்து வீழ்ந்ததோர் கத்தி
வீழ்ந்ததோர் உறைவாள் விண்முகி லிருந்து
வெள்ளியில் அலகும் மிகுபொன் பிடியும்
இரவியின் மகனின் இடுப்புப் பட்டியுள்.

தவழ்கதிர்த் தரமுடை தனயன் பற்றினன்
அந்தக் கத்தியை அகல்தன் கைகளால்
அதனால் பிளந்தனன் அக்கோ லாச்சிமீன்
அகன்ற வாயினை அவன்கிழித் திட்டனன்;
நரைக் கோலாச்சியின் நடுவண் வயிற்றில்
பழுப்பு வஞ்சிரப் படர்மீன் கண்டனர்
பழுப்பு வஞ்சிரப் பகர்மீன் வயிற்றில்
மென்மை ஒற்றை வெண்மீன் கண்டனர்.

மென்மை வெண்மீன் வெட்டிப் பிளந்தனர்
இருந்ததோர் நீல எழிற்பந் ததனுள்
வெண்மீன் குடலில் மேவிய வளைவில்
மூன்றாவ தாக முன்னிய மடிப்பில்.

அவிழ்த்துப் பார்த்தனர் அந்நீல் பந்தினை:
அந்த நீல்நிற அணிபந் துள்ளிருந்(து)
வீழ்ந்தது சிவப்பு மிகுநிறப் பந்து;
அவிழ்த்துப் பார்த்தனர் அச்செம் பந்தினை:
அந்தச் சிவப்பு அணிபந் துள்ளிருந்(து)
கனலின் பொறியின் கருவைக் கண்டனர்
விண்சுவர்க் கத்தால் வீழ்ந்த கருவது
மேகங்க ளூடாய் விழுந்த பொறியது
அதுஎண் சுவர்க்கத் தப்பா லிருந்தது
ஒன்பதாம் வானத் தூடிருந் திழிந்தது.

சிந்தனை வைனா மொயினன் செய்கையில்
'- இதனைக் கொண்டு எவ்விதம் செல்லலாம்
வளர்நெருப் பில்லா வதிவிடங் களுக்கு
இருண்டு கிடக்கும் இல்லங் களுக்கு -`

எரியோ துள்ளி எழுந்து பாய்ந்தது
கதிரவன் மகனின் கைகளி லிருந்து
தகித்தது வைனா மொயினனின் தாடியை
கொல்லனை நெருப்புக் கூடவே எரித்தது
கன்னங்கள் எரிந்து கருகிப் போயின
அத்துடன் கைகளும் அனலால் எரிந்தன.

அனலுமங் கிருந்து அகன்றுகொண் டிருந்தது
அலுவே ஆற்றின் அலைகளைக் கடந்து
சூரைச் செடிகளில் துள்ளிமேல் தாவி
சூரைப் புதர்களைச் சுட்டே யெரித்தது;
ஊசி(யி)லை மரத்தின் ஊடே பாய்ந்தது
செழித்த மரங்களை அழித்திட லானது;
அதன்மேல் இன்னும் அதிமுன் சென்று
எரித்தது வடபுல இருநிலப் பாதியை
*சவோவின் எல்லையின் தனியொரு பகுதியை
கர்யா லாவின் காண்இரு பாதியை.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
அவனே புறப்பட் டடிவைத் தேகினன்
வெளியே காட்டு வெளிகளின் உள்ளே
பயங்கர மாமப் படரனல் வழியே
அங்கே அந்த அனலைக் கண்டனன்
அடிமரக் குற்றியீர் அமைவே ரின்கீழ்
கனப்பூர்ச் சமரக் கட்டையின் உள்ளே
உளுத்த குற்றியின் உள்அடி வளைவில்.

முதிய வையினா மொயினனு மாங்கே
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"நெருப்பே, இறைவனின் நிகரில் படைப்பே!
அனலே, படைப்பவன் அருமைப் படைப்பே!
இல்லைக் காரணம் ஏகஆ ழத்துநீ
ஏதுக்கள் இலைநீ இத்தனை தொலைசெல;
நல்லது இவ்வழி செல்வதே உனக்கு
சென்றுகல் லடுப்பினுள் திகழ்ந்துள் எரிவது
அடுப்புக் கரிக்குள் அர்ப்பணி உன்னை
தணலின் உள்ளே தனிநீ மறைந்திரு
உனைப்பகற் பொழுதெலாம் உவந்துவைத் திருக்க
மிலாறுவின் கட்டையாம் விறகினுக் குள்ளே
மறைத்திர வெலாமுனை வைத்திருப் பதற்கு
அம்பொனாய்க் கனலும் அடுப்பதன் உள்ளே."

கனற்பொறி யதனைக் கைப்பற் றிட்டனன்
தீத்தட்டிக் கல்லில் திணித்தனன் உள்ளே
கனமிலா றுமரக் காளான் செடிக்குள்
கனமிகு செம்பிலாம் கலயம் ஒன்றினுள்;
கலயத் தினிலே கனலெடுத் தேகினன்
மிலாறுப் பட்டையில் விரைந்துகொண் டேகினன்
புகார்படி கடலதன் புணர்முனை நுனிக்கு
செறிபனிப் புகாருள தீவதன் கரைக்கு
இல்லங்க ளெல்லாம் எரிவந் திட்டது
வீடுகள் எங்கும் வெளிச்சம் கிடைத்தது.

அவனே கொல்லன் அவ்வில் மரினன்
கடலின் பக்கமாய் கடுகதிச் சென்றனன்
புனலிலே கல்மேல் தனையிழுத் தேகினன்

படர்கரை மருங்குள பாறைக் கேகினன்
நெருப்பு எரித்ததால் நேர்ந்தநோ வதனால்
அனலது சுட்டதால் அடைந்த துயரதால்.

அவ்விடம் வந்ததும் அவன்தணித் தனன்அனல்
அனலைக் குறைத்து அணையச் செய்தனன்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்ஈ
"நெருப்பே, இறைவனின் நிகரில் படைப்பே!
அனலே, சூரியன் அற்புத மகனே!
மாற்றிய தெதுவுனை வலிதாய்க் கொடிதாய்
என்கன் னத்தை இவ்விதம் எரிக்க
என்றன் இடுப்பை இவ்விதம் எரிக்க
என்னுடற் பக்கம் எரித்திட நீயே?

இப்போ தெதனால் எரிதணித் திடலாம்
அனலைக் குறைத்து அணையச் செயலாம்
செந்தீ யணைத்துச் செயலறச் செய்யலாம்
அபாய மற்றதாய் அனலதை யாக்கலாம்
இன்னலஃ துறுத்தா திருந்திட நீண்டநாள்
வெகுநாள் வாதையை அளியா திருக்க?

தோகையே வருவாய், துர்யாநா டிருந்து,
லாப்பிலே யிருந்து ஏந்திழாய்ப் புறப்படு,
பனிக்கூழ்க் காலுறை, பனித்திண்(மக்) காலணி,
உறைந்த மணிகள் நிறைந்த உடையுடன்,
பனிக்கூழ்க் கலயம் பைங்கரத் தேந்தி
பனிக்கூழ் அகப்பையும் கலயத் தெடுத்து
சிறிதே குளிர்ந்த தண்ணீர் சிந்துக
தெளித்திடு கொஞ்சம் திகழ்குளிர்ப் பனிநீர்
எரிகனல் எரித்த இடங்களின் மீது
கடுமனல் சினந்த காயத்து மீது.

இதுவும் போதா தின்னமு மென்றால்,
வடநிலத் திருந்து வருவாய்ப் பையனே!
எழிற்பிளாய், லாப்பின் இதயத் திருந்து,
உயர்மனி தனே, யிருள் உறுநாட் டிருந்து,
மிளிர்வனப் பெரிய மிலாறு அளவினன்,
சதுப்புத் தேவ தாரள வுயர்ந்தவன்,
கைகளில் பனிக்கூழ்க் கையுறை இருக்க
கால்களில் பனிக்கூழ்க் காலணி இருக்க
தலையிலே பனிக்கூழ்த் தலையணி இருக்க
பனிக்கூழ்ப் பட்டி படிந்திடுப் பிருக்க!

கொணர்க பனிக்கூழ் குளிர்வட நாடிருந்(து)
பனிக்கட்டி கொணர்க படுகுளிர் ஊரிருந்(து)
பனிக்கூழ் நிறைந்துள படர்வட நாட்டினில்
பனிக்கட்டி யுளது பலகுளிர் ஊர்களில்:
பனித்திண்ம ஏரிகள் பனிக்கூழ் அருவிகள்
காற்றிலும் பனித்துகள் கலந்தே யிருக்கும்

பனிக்கூழ் உடையுடன் பலமுயல் பாயும்
கவின்பனி ஆடையில் கரடிகள் ஆடும்
பனிமழை மூடிய பன்மலை நடுவே
பனிமழை மூடிய படிமேற் சரிவில்.
அன்னம் பனிக்கூழ் ஆடையில் விரையும்
பனிக்கூழ் மூடிய பலவாத் துலவும்
பனிமழை மூடிய பன்னதி நடுவே
நீள்பனிக் கட்டியாம் நீர்வீழ்ச்சி விளிம்பில்.

சறுக்கு வண்டியில் பனிக்கூழ் கொணர்வாய்
இழுத்துவா வண்டியில் எழிற்பனிக் கட்டியை
மொட்டை மலையின் முடியிலே யிருந்து
உயர்ந்த மலையின் உளசரி விருந்து!
குளிர்ந்த அந்தக் கூழ்ப்பனி யதனால்
பகரும் அக்குளிர்ப் பனிக்கட் டியினால்
நெருப்பினால் நேர்ந்த நெடுநோத் தீரும்
அனலால் விளைந்த அவதியும் போகும்.

இதுவும் போதா தின்னமு மென்றால்
ஓ, முது மனிதா, உயர்மா தெய்வமே!
முதிய மனிதா, முகில்களின் காவலா!
நீராவி அனைத்தையும் நிதமாள் பவனே!
இயக்குவாய் கிழக்கி லிருந்தொரு முகிலை
மேற்கி லிருந்தொரு மேகத் திரள்விடு
பக்கம் பக்கமாய்ப் பார்த்தொருங் கனுப்பு
ஒன்றோடு மோத ஒன்றினை அனுப்பு.
பொழிக பனிக்கூழ் பொழி(க)பனிக் கட்டி
பொழிக நல்லதோர் பூச்சு மருந்தையும்
எரிகனல் எரித்த இடங்களின் மீது
காயம் வந்த கருகிய இடங்களில்."

பின்னரிவ் வாறு கொல்லன்இல் மரினன்
அந்த நெருப்பினை அவன்தணித் திட்டான்
அந்த அனலை அணைத்துப் போட்டனன்
கொல்லன் அதன்பின் நல்நிலை பெற்றனன்
விளங்குமுன் நாள்போல் மீண்டும் மாறினன்
நெருப்பினால் நேர்ந்த நெடுநோ வதன்பின்.

# கலேவலா
# பாடல் 49 - இல்மரினனின் வெள்ளிச் சூரியனும் தங்க நிலவும்

அடிகள் 1-74 : இல்மரினன் ஒரு புதிய சூரியனையும் சந்திரனையும் இயற்றுகிறான். ஆனால் அவை பிரகாசிக்கவில்லை.

அடிகள் 75-230 : உண்மையான சூரியனும் சந்திரனும் வடநாட்டு மலைக்குள் ஒளித்து வைக்கப்பட்டிருப்பதை வைனாமொயினன் திருவுளச் சீட்டுகள் மூலம் அறிகிறான். அவன் வடநாட்டுக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் போரிட்டு
வெற்றி பெறுகிறான்.

அடிகள் 231-278 : அவன் மலையிலுள்ள சூரியனையும் சந்திரனையும் பார்க்கச் செல்கிறான்; ஆனால் உள்ளே புக முடியவில்லை.

அடிகள் 279-362 : மலையைப் பிளப்பதற்கு ஆயுதங்கள் செய்யும் நோக்குடன் வைனாமொயினன் திரும்புகிறான். அதற்கான ஆயுதங்களை இல்மரினன் செய்யும் நேரத்தில், வடநாட்டுத் தலைவி தனக்கு ஏதோ அழிவு வரப்போகிறது என்பதை உணர்ந்து சூரிய சந்திரரை மலையிலிருந்து விடுவிக்கிறாள்.

அடிகள் 363-422 : சூரிய சந்திரரை மீண்டும் வானில் கண்ட வைனாமொயினன் அவற்றை வணங்கி, அவை தத்தம் பாதைகளில் ஒழுங்காக வலம்வரும் என்றும் நாட்டுக்குச் செழிப்பை ஏற்படுத்தும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கிறான்.

இன்னமும் ஒளிதர வில்லை ஆதவன்
திகழ்ந்திட வில்லைச் செழும்பொற் றிங்களும்
*வைனொலா நாட்டின் வதிவிடங் களிலே
கலேவலா எனும்புதர்க் கவின்சம வெளியில்,
பயிர்கள் அதனால் படுகுளி ராயின
கால்நடை களுமே கண்டன கொடும்நிலை
பிறவான் பறவைகள் பெருவியப் புற்றன
மனிதருக் கெல்லாம் மனச்சோர் வடுத்தது
ஒண்கதிர் என்றுமே ஒளிதரா நிலையில்
திங்கள் நிலவும் திகழா நிலையில்.

கோலாச்சி கடலடிக் குழிகளை அறியும்
பறவையின் பாதையை பணைக்கழு கறியும்
கப்பலின் ஒருநாட் பயணம் **காற்றும்;
மனிதரின் பிள்ளைகள் மற்றிதை யறியார்
எப்போது காலை எழுகிற தென்பதும்
இரவாய்ப் போவது எப்போ தென்பதும்
புகார்படி கடலதன் புணர்முனை நுனியில்
செறிபனிப் புகாருள் தீவதன் கரையில்.

இளையோர் கேட்டனர் இதற்கா லோசனை
வயதாம் பிரிவினர் வலிதுசிந் தித்தனர்
எவ்விதம் மதியிலா திருப்பது என்று
எவ்விதம் வாழ்வது இரவியில் லாதென
வறிதாய் வீணே மயங்கிடும் எல்லையில்
தெரியும் வடபால் செழிப்பிலா நிலத்தில்.

ஆலோ சனையவ் வரிவையர் கேட்டனர்
விளங்க முயன்றனர் மெல்லிளம் பெண்களும்
கொல்லனின் பட்டடை கொள்புறம் வந்தவர்
இனிவரும் சொற்களில் இவ்விதம் கூறினர்:
"எழுவாய்க் கொல்லனே, சுவர்ப் புறமிருந்து!
கலைஞனே, அடுப்புக் கல்லின் பின்புறம்!
அடிப்பதற் காக அரியதோர் புதுமதி
தகுபுது சூரியச் சக்கரம் ஒன்றினை!
திங்களோ திகழ்ந்தில தீமையா யுள்ளது
ஆதவன் ஒளிர்ந்தில ததிசய மானது.

எழுந்தனன் கொல்லன் இருஞ்சுவர்ப் புறமிருந்(து)
கலைஞனோ அடுப்புக் கல்லின் பின்புறம்
அடிப்பதற் காக அரியதோர் புதுமதி
தகுபுது சூரியச் சக்கரம் ஒன்றினை;
தங்கத் தியற்றினன் திங்கள் ஒன்றினை
வெள்ளியில் செய்தனன் வெங்கதிர் ஒன்றினை.

முதிய வைனா மொயினன் வந்தனன்
நிலைகொண் டிருந்தனன் நெடுங்கத வப்புறம்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஓ,நற் கொல்லஎன் நேசச் சோதர!
என்னவோ பட்டடை யில்நீ அடிப்பது
என்ன அறைவது எல்லா நேரமும்?"

அந்தக் கொல்லன் அவ்வில் மரினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"தங்கத்தில் செய்கிறேன் திங்கள் ஒன்றினை
வெள்ளியில் செய்கிறேன் வெய்யோன் ஒன்றினை
ஒளிரவாங் கிருந்து உயர்வான உச்சியில்
**ஆறு ஒளிரும் அணிமு டியின்மேல்."

முதிய வைனா மொயினனப் போது
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"ஓகோ, கொல்ல, உயர்இல் மரின!
செய்கிறாய் நீயும் சேர்பய நிலாப்பணி
திங்களைப் போல தங்கம் திகழா
வெங்கதிர் போல வெள்ளியும் விளங்கா."

செய்து முடித்தனன் திங்களைக் கொல்லன்
ஆயத்த மாக்கினன் அடித்தே இரவியும்
உயரத் தவற்றை உயர்த்தினன் கருத்தொடு
அழகாய் அவற்றை அமைந்திடச் செய்தனன்
ஊசி(யி)லை மரத்தின் உச்சியில் சந்திரன்
உயர்தேவ தாருவின் உச்சியில் சூரியன்;
எற்றேகி யோன்தலை யெலாம்வியர் வழிந்தது
சுமந்தோன் நுதலில் சோர்ந்தது வியர்வை
மிகவும் கடியஅவ் வேலையின் போது
அவற்றைச் சிரமமாய் அவன்தூக் குகையில்.

ஒளிர்மதி தூக்கி உயர்த்தி முடிந்தது
நிலையாய் இரவியும் நிறுத்தியா யிற்று
ஊசி(யி)லை மரத்தின் உச்சியில் சந்திரன்
உயர்தேவ தாருவின் உச்சியில் சூரியன்:
திங்கள் என்றுமே திகழவு மில்லை
ஒண்கதிர் ஒளிர்ந்து ஒளிதர வில்லை.

முதிய வைனா மொயினனப் போது
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"திருவுளச் சீட்டால் தெரியும் பொழுதிது
மனித ராசியால் வினவிடும் வேளை
செங்கதிர் எமைவிட் டெங்கே சென்றது
எங்கே மறைந்தது எமைவிட் டேமதி?"

முதிய வைனா மொயினன் அவனே
நிலைபெறும் மாய நெறியறி முதல்வன்
சீவினன் **பூர்ச்சம் சீவற் றுண்டுகள்
சீவல்கள் அனைத்தையும் சீராய் அடுக்கினன்
அவற்றைத் திருப்ப ஆயத்த மாக்கினன்
விரல்களால் திருப்பி மிகஒழுங் காக்கினன்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"ஆண்டவ ரிடமொரு அனுமதி கேட்கிறேன்
ஆம்,சரி யாம்பதில் அதுவொன் றவசியம்:
இறைவனின் சீட்டே இயம்புவாய் உண்மை
தேவனின் திருவுளச் சீட்டே யுரைப்பாய்
செங்கதிர் எமைவிட் டெங்கே சென்றது
எங்கே மறைந்தது எமைவிட் டேமதி?
என்றுமே வாழ்வில் இல்லையே அவைகள்
இல்லை அவற்றைவான் என்றும் காணுதல்.

உள்ளதை உள்ளவா றுரைப்பாய் சீட்டே!
மனிதனின் விருப்புபோல் மற்றுநீ உரையேல்
உண்மைச் செய்தியை உடனிங் கருள்வாய்
விதித்தது எதுவோ விளம்புவாய் அதனை!
திருவுளச் சீட்டுச் செப்பினால் பொய்யுரை
சீட்டின் மகிமைச் சிறப்பதால் குறையும்
திருவுளச் சீட்டைத் தீயிடை வீசுவர்
மனிதரின் ராசிகள் மற்றெரி படலாம்."

உண்மைச் செய்தியை உணர்த்தின சீட்டுகள்
மனிதரின் ராசிகள் மறுமொழி தந்தன
செங்கதிர் தூரச் சென்றதாய்க் கூறின
மதியும் தொலைவில் மறைந்ததாய்க் கூறின
வடக்கே அமைந்த மலைக்கற் பாறையுள்
செப்பினால் ஆன செம்மலைக் குள்ளே.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
பின்வரும் சொற்களில் பின்அவன் சொன்னான்:
"இப்போது புறப்பட் டேகினால் வடபுலம்

வடக்குப் பையல்கள் வழிக்குப் போனால்
திங்களைப் பெற்றுநான் திகழவைத் திடுவேன்
ஒளிதர வைப்பேன் உயர்பொற் சூரியன்."

செய்தான் அங்ஙனம் சென்றான் விரைந்தான்
இருள்நின்ற வடபால் இயைநிலத் தாங்கே;
ஒருநாள் நடந்தான் இருநாள் நடந்தான்
மூன்றாம் நாளும் முன்வந் துறுகையில்
வடபுல நாட்டின் வாயிலைக் கண்டான்
திகழ்ந்தது பாறை முடியும் தெரிந்தது.

கத்தினன் முதலில் கத்தினன் உரத்து
வடநாட் டிருந்த வான்நதி பார்த்து:
"இங்கொரு தோணியை இப்போ கொணர்க
நதியினைக் கடந்து நான்சென் றிடற்கு!"

அவனது கூவல் அங்குகேட் டிலது
அதனால் வராதே அமைந்தது தோணி
பலகை அடுக்குகள் சிலஅவன் சேர்த்தான்
**ஒருமரக் காய்ந்த உறுகிளை சேர்த்தான்
நீர்க்கரை மருங்கில் நெருப்பினை மூட்டினன்
தடித்த புகையினைத் தான்எழச் செய்தனன்;
வானம் வரைக்கும் வளர்ந்தது நெருப்பு
புகையும் தடித்துப் போய்வான் பரந்தது.

லொவ்ஹி என்பவள் வடநிலத் தலைவி
சாளரப் பக்கமாய்த் தனித்தவள் சென்றனள்
நின்றங்கு பார்த்தனள் நீரிணை வாய்ப்புறம்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"எத்தகை நெருப்பு எரிகிற தங்கே
தீவின் நீரிணை வாய்ப்புறம் அங்கே?
செருக்காம் நெருப்பெனில் சிறியதா யுள்ளதே
மீனவர் நெருப்பெனில் மிகுபெரி துள்ளதே."

வடபுலம் வாழுமோர் திடமுறு பையனும்
சென்றனன் விரைந்து முன்றில் பக்கமாய்
பார்ப்பதற் காக, பாங்கொடு கேட்க,
நிகழ்வதைக் கவனமாய் நேரா யறிய:
"அங்கே தொலைவில் ஆற்றின் மறுபுறம்
சிறந்தவோர் மனிதன் நடந்துகொண் டிருக்கிறான்."

முதிய வைனா மொயினனு மாங்கே
இரண்டாம் முறையும் ஏற்றமாய்க் கத்தினன்:
"வடபுல மைந்தனே, படகொன் றெடுத்துவா!
வைனா மொயினன் வரற்கொரு படகு!"

வடநில மைந்தன் வருமா றுரைத்தான்
அவனே மறுமொழி அளித்தனன் இவ்விதம்:
"இவ்விடம் தோணிகள் எடுப்பதற் கில்லை
துடுப்பாய் விரல்களைத் தொடுத்துவந் திடுக

வலிக்கும் துடுப்பாய் வன்னுளங் கைகளை
வடபால் நிலத்தின் வளர்நதிக் குறுக்காய்."

முதிய வைனா மொயினனு மாங்கே
சிந்தனை செய்தான் சீருற நினைத்தான்:
"அவனொரு மனிதனே அல்லஉண் மையிலே
வரும்வழி விலக்கித் திரும்பியே செல்பவன்."

கோலாச்சி மீன்போல் குரைகடற் சென்றனன்
மென்மையாம் ஆற்றில் வெண்மீன் போல
நீரிணைக் குறுக்காய் நீந்தினன் விரைவாய்
இடைப்படு தூரம் ஏகிக் கடந்தனன்
ஓரடி சென்றனன் ஈரடி சென்றனன்
விரைவாய்ச் சேர்ந்தனன் வியன்வட பால்நிலம்.

வடபுல மைந்தர் வருமா றுரைத்தனர்
கொடிய குழுவினர் கூடிக் கத்தினர்:
"முதுவட நாட்டின் முற்றத் தேகுக!"
முதுவட நாட்டின் முற்றத் தேகினன்.

வடபுலம் வாழும் மைந்தர்கள் கூறினர்
கொடிய குழுவினர் கூறினர் இவ்விதம்:
"வியன்வட நாட்டின் வீட்டினுள் வருக!"
வியன்வட நாட்டின் வீட்டினுள் சென்றனன்;
வாயிற் புறத்தே வைத்தனன் காலடி
கதவுக் குமிழியில் கரத்தினை வைத்தனன்
வீட்டி னுள்ளே விரைவாய் நுழைந்தனன்
நனிகூ ரையின்கீழ் நடந்தே சென்றனன்.

அங்கே மனிதர் அருந்திட லாயினர்
கொழுநறைப் பானம் குடித்திட லாயினர்
மட்டிலா மனிதரின் பட்டியில் வாள்கள்
செறுபடைக் கலத்துடன் திகழ்ந்தனர் வீரர்
வைனா மொயினனின் சென்னிக் குத்தயார்
அமைதிநீர் மனிதனை அழிப்பதற் காக.

அவர்கள் புதிதாய் அடைந்தோர்க் குசாவினர்
இனிவரும் சொற்களில் இவ்விதம் கூறினர்:
"இழியஇம் மனிதன் மொழிசெய்தி யாது
நீந்திய நாயகன் நினைப்புத்தான் என்ன?"

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"திகழ்மதி பற்றிய செய்தி அதிசயம்
விரிகதிர் செய்தியோ மிகமிக அற்புதம்
ஏகிய தெங்கே எம்மைவிட் டெழுங்கதிர்
மறைந்தது எங்கே வான்மதி எம்மைவிட்(டு)?"

வடபுலம் வாழும் மைந்தர்கள் கூறினர்
கொடிய குழுவினர் கூறினர் இவ்விதம்:

"அங்கேயுங் களைவிட் டேகிய துகதிர்
செங்கதிர் சென்றதும் திகழ்மதி மறைந்ததும்
ஒளிவிடும் மார்புறும் உயர்பா றையினுள்
இரும்பினால் இயைந்த இருங்குன் றதனுள்;
விடுவியா விடிலவை வெளிவர மாட்டா
விடுதலை யின்றியே வெளிவர மாட்டா."

முதிய வைனா மொயினனப் போது
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"இந்துவைப் பாறையி லிருந்து விடாவிடின்
வெங்கதி ரதனையும் வியன்குன் றிருந்து
கைக்குக் கைசமர் கலந்தே பார்க்கலாம்
எடுக்கலாம் வாள்கள் தொடுக்கலாம் சமரை."

அடுத்துரு வினன்வாள் இழுத்தனன் இரும்பு
உருவினன் உறையால் உயர்கொடு மாயுதம்
அதன்கூர் முனையில் **அணிநிலாத் திகழ்ந்தது
கைப்பிடி மீதில் காய்கதிர் ஒளிர்ந்தது
அதன் முதுகினிலே அரும்பரி நின்றது
முளைவழிப் பூனை மியாமியா வென்றது.

அவர்கள்தம் வாள்களை **அளந்து பார்த்தனர்
நிமிர்குறு வாள்களின் நீளம் பார்த்தனர்:
இருந்ததப் பாசிறி தோர்நீள் அளவு
முதிய வைனா மொயினனின் வாளில்
பார்லி அரிசியின் பருமனோர் நீளம்
வைக்கோல் தண்டின் வருமள வுயரம்.

அவர்கள் வந்தனர் அகவெளி முற்றம்
நேருக்கு நேராய் நின்றனர் நிலத்தில்;
முதிய வைனா மொயினன் அதன்பின்
அறைந்தான் ஒருமுறை அதிர்மின் னலைப்போல்
ஒருமுறை அறைந்தான் இருமுறை அறைந்தான்
ஒருவகைக் **கிழங்குபோல் எறிந்தான் சீவி
சணற்கொடி நுனிபோல் தான்கொய் திட்டான்
வடபால் நிலத்து மைந்தரின் தலைகளை.

முதிய வைனா மொயினன் அதன்பின்
பொன்னிலாப் பார்க்கப் புறப்பட் டேகினன்
சென்று கதிரினைச் சேர்த்திட நினைத்தான்
பாய்ஒளி மார்புறும் பாறையி லிருந்து
உருக்கினால் ஆன உயர்மலை யிருந்து
இரும்பினால் இயைந்த இருங்குன் றிருந்து.

சிறுதொலை பாதையில் அடிவைத் தடைந்ததும்
செல்பய ணவழி சிறிது கடந்ததும்
பசும்தீ வொன்றினைப் பார்த்தனன் அங்கே;
தீவிலே அங்கொரு செழித்தமி லாறு
மிலாறு மரக்கீழ் மிகுகற் பாளம்
பாளத் தின்கீழ் பாறைசெங் குத்தாய்

முன்புறம் இருந்தன ஒன்பது கதவுகள்
கதவினில் நூறு கனத்திண் பூட்டுகள்.

கல்லிலே குறியைக் கண்டு பிடித்தனன்
செங்குத்(துப்) பாறையில் திகழ்பொய் **ஒருவரை(பு)
உறையினி லிருந்து உருவினன் வாளை
வரைந்தனன் கல்லில் வரைபட மொன்றை
தீசிந் தலகுறும் செங்கை வாளால்
சிந்தும் பொறிவாள் திகழ்அல காலே
உடைந்தது பாறை உறும்இரு துண்டாய்
மூன்றாய்ப் பிளந்தது முன்கற் பாளம்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
பாறையின் வெடிப்பின் ஊடாய்ப் பார்த்தனன்:
பாம்புகள் `பீரை`ப் பருகிட லாயின
புழுக்கள் **ஊறலைக் குடித்திட லாயின
ஒளிதரும் கல்லின் உட்புறத் தினிலே
ஈரல் நிறத்துப் பாறையின் உள்ளே.

முதிய வைனா மொயினன் மொழிந்தான்
உரைத்தான் அவனே உரைத்தான் இவ்விதம்:
"இதுதான் தலைவிக் கியைந்தது, பாவம்.
குறைந்த `பீர்`ப்பானம் கொள்வதன் காரணம்
பாம்புக ளும்`பீர்`ப் பானம் குடிப்பன
புழுக்களும் ஊரலைக் குடித்திடு கின்றன."

வெட்டியோர் புழுத்தலை வீழ்த்தினன் கீழே
கண்டபாம் பொன்றின் கழுத்தை முறித்தனன்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"இந்த உலகில் என்றுமே வேண்டாம்
இன்று தொடக்கம் என்றுமே வேண்டாம்
பாம்புகள் குடித்தல் பருகுமெம் `பீரை`
புழுக்கள் அருந்துதல் பொங்குமெம் மூறல்."

முதிய வைனா மொயினன் அதன்பின்
நிலைபெறும் மாய நெறியறி முதல்வன்
முயன்றனன் **திறக்ககை முட்டியால் கதவை
முயன்றனன் திறக்கசொல் மொய்ம்பினால் பூட்டை
கைகளால் திறபட வில்லைக் கதவுகள்
பொருட்படுத் திடவிலைப் பூட்டுசொல் மொய்ம்பினை.

முதிய வைனா மொயினனப் போது
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"மோதுமா யுதமிலான் முதிர்ந்தபெண் ணாவான்
**பகர்மண் வெ(ட்)டியிலான் பயனில் பிராணி."

இல்லம் நோக்கி எழுந்தனன் உடனே
தாழ்ந்த தலையுடன் வீழ்ந்த மனத்துடன்
ஏனெனில் மதியை இன்னும் பெற்றிலன்

தகிகதி ரதையும் சந்தித் திலனாம்.

குறும்பன் லெம்மின் கைனன் கூறினன்:
"ஓகோ, முதிய வைனா மொயினனே!
என்னைநீ அழைத்து ஏன்சென் றிட்டிலை
உன்னுடன் தொடரும் ஒருமாந் திரீகனாய்?
நவில்பூட் டுழன்று நழுவிவீழ்ந் திருக்கும்
உட்புறத் தாழ்ப்பாள் உடைந்துபோ யிருக்கும்
வியன்மதி திகழ விடுபட் டிருக்கும்
ஒண்கதிர் உதித்து ஒளிதந் திருக்கும்."

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
இந்தச் சொற்களில் இயம்பினன் அவனே:
"உறுசொலால் தாழ்ப்பாள் உடைந்து போகாது
புகல்மந் திரவலிப் பூட்டுகள் நொருங்கா
அல்லது (கை)முட்டி யதால்தொடு வதிலோ
செங்கரத் தவற்றைத் திருப்புவ தாலோ."

கொல்லன்கொல் வேலை கொள்தலம் சென்றான்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஓகோ, கொல்ல, உயர்இல் மரின!
**மண்வெட்டி மும்முனை கொண்டதாய்ச் செய்வாய்
**பனித்திண்(மக்) கருவிகள் பன்னிரண் டியற்றுவாய்
ஒருபெரும் கொத்தில் உறுதிறப் பத்துடன்
இவற்றால் மதிகல் லிருந்து விடு(வி)ப்பேன்
பாறையி லிருந்து பானுவை விடு(வி)ப்பேன்."

அந்தக் கொல்லன் அவ்வில் மரினன்
கவின்அழி வில்லாக் கைவினைக் கலைஞன்
மனிதன் நாடிய வகைப்பொருள் இயற்றினன்
பனித்திண்(மக்) கருவிகள் பன்னிரண் டியற்றினன்
ஒருபெரும் கொத்தில் உறுதிறப் பத்துடன்
நல்லதோர் கட்டில் நனிநீள் ஈட்டிகள்
அவை பெரிதல்ல அவை சிறிதல்ல
நடுத் தரமான நல்லள வியற்றினன்.

லொவ்ஹி என்பவள் வடநிலத் தலைவி
நீக்கல் எயிறுள நீள்வட முதுபெண்
இறகுகள் கொண்ட இறக்கைகள் படைத்தனள்
அடுத்து எழுந்தனள் அவள்பறந் தேகினள்;
பறந்து வந்தனள் பலஇல் பக்கமாய்
தொடர்ந்துமென் மேலும் பறந்தள்அங் கிருந்து
வடகடல் கடந்து மற்றதன் மேலும்
கொல்லன்இல் மரினன் கொல்வே லைத்தலம்.

எழுந்தே கொல்லன் திறந்தனன் சாளரம்
பார்த்தனன் காற்றுப் படர்கிற தோவென
வந்திட வில்லை வழிக்காற் றேதும்
அதுவொரு நரைத்த அருநிறக் கழுகு.

அந்தக் கொல்லன் அவ்வில் மரினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"நல்வனப் பறவையே, நாடுவது என்ன?
என்சா ளரக்கீழ் இருப்பது எதற்கு?"

இயம்பத் தொடங்கிற் றினிதப் பறவை
பகர்ந்தது கழுகு புகன்றது இவ்விதம்:
"ஓகோ, கொல்ல, உயர்இல் மரின!
நித்திய வாழ்வுடை நேரிய கொல்ல!
எத்தனை தேர்ச்சிநீ இனிதே படைத்தனை
திறமை எத்தனை சிறப்பொடு கொண்டனை?"

கொல்லன் இல்மரினன் கூறினன் இவ்விதம்:
உரைத்தான் அவனே உரைத்தான் இவ்விதம்:
"இல்லை அதிசயப் படுதற் கெதுவுமே
கவனமே யுள்ளதோர் கலைஞன் நானெனில்,
அகல்வான் தட்டி அடித்தவன் நானே.
அகல்வான் மூடியும் அடித்தவன் நானே."

இயம்பத் தொடங்கிற் றினிதப் பறவை
பகர்ந்தது கழுகு புகன்றது இவ்விதம்:
"இப்போ(து) கொல்லனே இயற்றுவ தென்ன
கட்டுவ தென்ன கலைஞ,கொல் வேலையோய்?"

அந்தக் கொல்லன் அவ்வில் மரினன்
மறுமொழி யாக வழங்கினன் ஒருசொல்:
"கழுத்து வளையம் கடிதொன் றடிக்கிறேன்
முறையிலவ் வடபுல முதிர்ந்தபெண் ணுக்கு
இதனால் அவளை இறுகப் பிணைத்திட
பெரிய மலையின் சரிந்தபக் கத்தில்."

லொவ்ஹி என்பவள் வடநிலத் தலைவி
நீக்கல் எயிறுள நீள்வட முதுபெண்
அறிந்தனள் தனக்கு அழிவு வருவதை
தொல்லை நாட்கள்தன் சென்னியில் விழுவதை
பறக்கத் தொடங்கினள் பயந்தவள் உடனே
விரைந்து சென்றனள் வியன்வட புலநிலம்.

கல்லிலே யிருந்து கலாமதி விடுத்தனள்
கருங்குன் றிருந்து கதிரையும் விட்டனள்
வடிவில் வேறாய் மாற்றினள் தன்னை
புறாவடி வத்தைப் புதிதாய் எடுத்தனள்:
அடுத்துப் பறந்தனள் அவள்தொடர்ந் தேகினள்
கொல்லன்இல் மரினனின் கொல்வே லைத்தலம்
பறவையாய்க் கதவின் பக்கம் பறந்தனள்
வாயிற் பக்கம் வந்தனள் புறாவாய்.

அந்தக் கொல்லன் அவ்வில் மரினன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"எதற்குப் பறவையே, இங்கே பறந்தனை,

வாயிற் பக்கம் வந்தனை புறாவே?"

காட்டுப் பறவை கதவரு குரைத்தது
வாயிற் பக்கம் வந்தது சொன்னது:
"வாயிற் பக்கம்நான் வந்தே யுள்ளேன்
உனக்கொரு செய்தி உரைத்திடக் கொணர்ந்தேன்
கல்லி லிருந்து கலாமதி எழுந்தது
பானுவும் பாறையால் பட்டது விடுதலை."

அந்தக் கொல்லன் அவ்வில் மரினன்
பார்ப்பதற் காகப் படர்ந்தனன் தானே
கொல்லவே லைத்தலம் குறுகினன் கதவிடம்
கவின்வான் நோக்கிக் கவனமாய்ப் பார்த்தான்
திங்கள் அங்கே திகழ்வதைக் கண்டான்
ஒண்கதிர் அங்கே ஒளிர்வதைக் கண்டான்.

வைனா மொயினன் வாழ்விடம் சென்றனன்
உரைத்தான் ஒருசொல் உரைத்தான் இவ்விதம்:
"ஓகோ, முதிய வைனா மொயினனே!
என்றுமே நிலைத்த இசைப்பா டகனே!
திங்களைப் பார்க்கச் செல்வாய், செல்வாய்!
செங்கதிர் சோதனை செய்யச் செல்வாய்!
அவையிப் போது அகல்வான் உள்ளன
அவைமுன் இருந்த அதேயிடங் களிலே.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
முற்றத்து வெளியே முன்விரைந் தேகினன்
அங்கே சென்றதும் அவன்தலை உயர்த்தினன்
விண்ணை நோக்கி விடுத்தனன் பார்வை
விடுபட்ட தேகதிர் வியன்மதி எழுந்தது
செங்கதிர் விண்ணைச் சென்றே அடைந்தது.

முதிய வைனா மொயினனப் போது
தானே இவ்விதம் சாற்றத் தொடங்கினன்
இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னான்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தான்:
"திங்களே, வாழ்க! திகழ்வதற் காக!
அழகே, உன்முக மதுகாட் டினையால்!
காதற் கதிரே, காலைவந் ததற்காய்!
மீண்டும் பகலொளி ஈண்டுவந் ததற்காய்!

பொன்னிலா, கல்லில் புகுந்துமீண் டிட்டனை!
பாங்கெழிற் கதிரே, பாறையி லிருந்து!
பொற்குயில் போல பொலிந்துமே லெழுந்தனை,
வெள்ளியில் ஆன வெண்புறாப் போலே
உங்கள் முந்திய உயர்அதே நிலைக்கு
பழைய உங்கள் பயண வழிக்கு.

காலையில் என்றும் கவினோ டுதிக்குக!
இந்நா ளிருந்து எதிர்கா லமெலாம்,

நல்குக எங்களுக் கெல்லாம் நற்சுகம்
தேடிய செல்வம் சேர்ந்திடச் செய்க!
பெருவிரல் நுனிக்கு இரையினைக் கொணர்க!
அதிர்ஷ்டம் தூண்டில்முள் முனைக்கு அருளுக!

செல்கநும் பாதையில் சேமமாய் இப்போ!
இனிமையாய் நுமது பயணம் தொடர்க!
நாளாந்தச் சுழற்சியை நன்றாய் நடத்துக!
மாலையில் நலமும் மகிழ்வும் பெறுக!"

# கலேவலா
## பாடல் 50 - கன்னி மர்யத்தாவின் மகன் கரேலியாவின் அரசனாதல்

அடிகள் 1-346 : கன்னி மர்யத்தா ஒரு சிறு பழத்தைத் தின்று, அதனால் கர்ப்பமாகி, ஒரு மகனைப் பெறுகிறாள்.

அடிகள் 347-424 : அந்தப் பையன் சிறுவனாய் இருக்கும் பொழுது காணாமல் போய் விடுகிறான். பல காலம் தேடிய பின்னர் ஒரு சேற்று நிலத்தில் அவன் காணப்படுகிறான்.

அடிகள் 425-440 : அவனுக்கு திருமுழுக்குச் செய்வதற்கு ஒரு முதியவரிடம் அழைத்துச் செல்கிறார்கள். தகப்பன் இல்லாத குழந்தைக்கு திருமுழுக்குச் செய்யக் கூடாது என்று முதியவர் மறுத்து விடுகிறார்.

அடிகள் 441-474 இதனை அறிந்த வைனாமொயினன் வந்து விசாரணை செய்து துர்ச்சகுனமான அப்பிள்ளை கொல்லப்பட வேண்டும் என்று தீர்மானிக்கிறான். அரை மாத வயதான அப்பிள்ளை பிழையான தீர்ப்பளித்த வைனாமொயினனை இகழ்கிறது.

அடிகள் 475 - 512 : அந்த முதியவர் அப்பையனை கரேலியாவின் அரசனாக ஞானமுழுக்குச் செய்கிறார். இதனால் மனமுடைந்த வைனாமொயினன் நிரந்தரமாக நாட்டை விட்டுச் செல்கிறான். அங்ஙனம் செல்வதற்கு முன்னர், புதிய சம்போவையும் யாழையும் மக்களுக்கு ஒளியையும் மீண்டும் தருவதாகக் கூறுகிறான். அவன் ஒரு செப்புப் படகில் ஏறி பூமிக்கும் சுவர்க்கத்துக்கும் நடுவே ஒரு நாட்டுக்குச் செல்கிறான். அப்படிச் செல்லும் பொழுது வைனாமொயினன் தனது யாழையும் உயர்ந்த பாடல்களையும் மக்களின் சொத்தாக விட்டுச் செல்கிறான்.

அடிகள் 513 - 620 : முடிவுரைப் பாடல்கள்.

*மர்யத்தா, அழகிய மகளவள், இளையவள்,
மிகநீள் காலம் வீட்டில் வளர்ந்தவள்
தகுபுக ழாரவர் தந்தையின் மனையிலே
அன்பார்ந்(த) அவளின் அன்னையின் இல்லில்;
ஐந்து சங்கிலி அணிந்து அழித்தனள்
தேய்த்துக் கழித்தனள் திகழ்அறு வளையம்
அவளது பிதாவின் அருந்திறப் புகளுடன்
அவள்பா வாடையில் திகழ்மின் னலுடன்.

வாயிற் படிஅரை**மங்கச் செய்தனள்
ஒளிர்பா வாடைகள் உவந்தே அணிந்ததால்,
பாதியும் மங்கின பகர்மே லுத்தரம்
பட்டு ஆடைகள் பட்டதால் அவற்றில்,
கதவு நிலைகளில் காண்அரை அவ்விதம்
மென்கை மடிப்புகள் நன்கவை தொட்டதால்,
தரையின் பலகைகள் தாம்தேய்ந் திட்டன
நல்லதோற் காலணி நனிகுதி பட்டதால்.

மர்யத்தா,அழகிய மகளவள், இளையள்,
அவளொரு சிறிய அரிவையே யாவாள்,
நன்னெறி பேணி நாள்பல காத்தவள்
ஒழுக்கம் என்றுமே ஓம்பி வளர்த்தவள்,
நல்வகை மீனே நனிஅவள் உண்பது

தேவதா ருரியல் செய்தமென் ரொட்டியே,
கோழிமுட் டையைக் கொள்ளாள் உணவாய்
சேவலால் பேடைகள் தினம்கெடு படுவதால்,
உண்ணாள் செம்மறி உயராட் டிறைச்சியும்
செம்மறி கடாவுடன் சேர்ந்தே இருப்பதால்.

பால்கறக் கும்படி பணித்தனள் தாயார்
பால்கறப் பதற்கவள் படர்ந்தன ளேயிலை
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"என்றுமே அரிவையர் என்னைப் போன்றவர்
பசுவின் அந்தப் பால்மடி தொட்டிடார்
எருதுகள் அதனுடன் என்றுமே கூடலால்,
தொழுக்கன் றினில்பால் சுரந்தால் தவிர
வளர்கன் றினில்பால் வந்தால் தவிர."

பிதாபரி வண்டியில் பூட்டப் பணித்தனர்
அவள்அமர்ந் திலளாம் அப்பரி வண்டியில்;
சோதரன் கொணர்ந்தனன் தொடர்ந்தோர் பெண்பரி,
இந்தச் சொற்களில் இயம்பினள் அரிவை:
"பெண்பரி பூட்டிய வண்டியில் அமரேன்
கூடி யாண்பரி யோடே குலவலால்,
இளம்பரிக் குட்டிகள் இழுத்தால் தவிர
மாதக் கணக்கில் வயதுள குட்டிகள்."

மர்யத்தா, அழகிய மகளவள், இளையள்,
கன்னியாய் என்றும் காலம் கழித்தனள்
நெறிதவ றாத அரிவையாய் வாழ்ந்தனள்
நற்குணப் பணிவுளள் நனியிழை கூந்தலாள்
மந்தைகள் மேய்த்து வருபவள் ஆயினள்
செம்மறிக் குழுவுடன் சென்றனள் எழுந்தே.

செம்மறிக் கூட்டம் சேர்ந்துகுன் றேறின
ஆடுகள் சென்றன அடிவ(ா)ர மலையில்
காட்டு வெளியினில் காரிகை சென்றனள்
**வியன்மரத் தூடாய் மெதுவாய் நகர்ந்தனள்
கூவிய நேரம் குலவும் பொற்குயில்
வெள்ளிப் பறவை வியன்பாட் டிசைக்கையில்.

மர்யத்தா, அழகிய மகளவள், இளையள்,
அவற்றைப் பார்த்தனள் அவற்றைக் கேட்டனள்
சிறுபழச் செடிகள் திகழ்மே டமர்ந்தனள்
குன்றின் சரிவில் கொண்டனள் ஆறுதல்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே
இயம்பினள் அவளே இயம்பினள் இவ்விதம்:
"குயிலே, தங்கக் குயிலே, கூவுவாய்!
வெள்ளிப் பறவையே மேவிப் பாடுவாய்!
தகரமார் புடையளே, தரமாய்ப் பாடுக!
**சிறுஜேர் மன்பழம், செப்புவாய் எனக்கு
நானொரு கன்னியாய் நாள்பல இருப்பனோ
ஆண்டாண்டு காலம் ஆனிரை மேய்ப்பளாய்

இந்தப் பரந்த எழில்வன நிலத்தில்
செழித்துப் பொலியுமிச் சீர்ப்பொழில் வெளியில்:
ஒருகோடை அல்லது இருகோ டையிலே
அல்லது ஐந்தோ ஆறோ கோடையோ
அல்லது பத்து அமையுமோ கோடை
அல்லது காலம் அவ்வள வில்லையோ?"

மர்யத்தா, அழகிய மகளவள், இளையள்,
வெகுநாள் ஆனிரை மேய்த்துக் கழித்தனள்
ஆனிரை மேய்ப்பதோ அருங்கொடுஞ் செயலாம்
அதுவும் பராய அழகிய மகட்கு:
புல்லின் அடியிற் புழுப்படுத் திருக்கும்
பல்லி யினங்கள் பதுங்கி நெளிவரும்.

அங்கே புழுக்கள் அவைபடுத் திருந்தில
பல்லி யினங்கள் பதுங்கி நெளிந்தில
கேட்டது குன்றிற் கிடந்தொரு சிறுபழம்
மேட்டினி லிருந்த வியன்வகைச் சிறுபழம்:
"இங்குவா, மங்கையே, எனைப்பறித் தெடுக்க!
செங்க(ன்)னம் உடையளே, தெரிந்தெனை ஆய்ந்திட!
ஈயமார் புடையளே, எனைக்கொய் தெடுத்திட!
செம்பட்டி யுடையளே, தேர்ந்தெடுத் திடுவெனை!
**நத்தையின்இனமெனை நாடியுண் டிடுமுன்
கறுத்தப் புழுவெனைக் கண்டே கடிக்குமுன்,
நூறுபேர் வந்தெனை நோக்கியே சென்றுளார்
அக்கமும் பக்கமும் ஆயிரம் பேருளார்
கன்னியர் நூற்றுவர் காரிகை ஆயிரம்
பிள்ளைகள் கணக்கினைப் பேசுதல் அரிது
ஆயினும் ஒருவரும் அணைத்தெனைத் தொட்டிலர்
ஆதலால் நீபறித் தகலுக ஏழைநான்!"

மர்யத்தா, அழகிய மகளவள், இளையள்,
சிறிய வழித்தொலை சென்றே முடித்தனள்
சென்றனள் பார்த்திடச் சிறிய பழத்தினை
சென்றனள் சிவந்த சிறுபழம் பறிக்க
நல்விரல் நுனியால் நனிகொய் தெடுக்க
அழகிய கையால் ஆய்தெடுத் திடஅவள்.

ஆராய்ந் தனள்குன் றமைந்தவச் சிறுபழம்
புதரில் பழுத்தசெம் புதுச்சிறு பழத்தை:
சிறுபழ மாய்த்தான் தெரிந்தது பார்க்க
**அப்பழ மாய்த்தான் அமைந்தது வடிவில்
உண்ண நிலத்திருந் **துயரத் ததுகனி
ஏறிப் பறிக்கவே இருந்தது மரம்தாழ்ந்(து).

தனிப்புத ரிருந்தொரு தடியை முறித்தனள்
அதனால் சிறுபழம் அதைத்தரை வீழ்த்தினள்;
திகழ்நிலத் திருந்தச் சிறுபழ மெழுந்தது
அவளது அழகிய அணிகா லணிவரை
அழகிய காலணி யதிலிருந் துயர்ந்தது

தூய அவளது தொடுமுழங் கால்வரை
தூய முழங்கால் தொட்டது எழுந்தது
மின்னிய அவளது மிளிர்பா வ(ா)டைவரை.

இடுப்புவார் வரையும் இதன்பின் சென்றது
இடுப்புப் பட்டியில் இருந்துமார் பகம்வரை
மார்பினி லிருந்து வளர்தா டைவரை
உயர்தா டையிருந் துதடுகள் வரைக்கும்
வழுவி யதிலிருந்(து) வாய்க்குட் சென்றது
அதனால் புரண்டு அடிநா விழுந்தது
தொடர்நா வழுவித் தொண்டையில் நின்றது
விலகிப் பின்னர் வீழ்ந்தது வயிற்றுள்.

மர்யத்தா, அழகிய மகளவள், இளையள்,
நிறைந்தனள் அதனால் நிறைவுற் றனள்அதால்
மற்றதி லிருந்து வளர்ந்தனள் தடிப்பாய்
கொழுத்தனள் தசையே கூடிப் பருத்தனள்.

அரைக்கச் சின்றி அவள் வாழ்ந் திட்டாள்
இடுப்புப் பட்டி இன்றியே தளர்வாய்
சவுனா ரகசிய மாய்ப்போய் மீண்டனள்
இருட்டிய பிறகே யெலாம்நட மாடினள்.

அன்னையெப் போதும் அமர்ந்துசிந் தித்தாள்
இருந்தவள் அன்னை எண்ணிப் பார்த்தனள்:
"எங்கள்மர் யத்தா(வு)க் கென்ன நடந்தது?
எம்அகப் பறவைக் கென்ன விளைந்தது?
அரைக்கச் சின்றி அவள்வாழ் கின்றனள்
இடுப்புப் பட்டி இன்றியே தளர்வாய்
சவுனா ரகசிய மாய்ப்போய் மீள்கிறாள்
இருட்டிய பிறகே யெலாம்நட மாடினாள்!"

பிள்ளை ஒன்றினால் பேசிட முடிந்தது
சிறுபிள்ளை இவ்விதம் செப்பிட லானது:
"எங்கள்மர் யத்தா(வு)க் கிதுதான் நடந்தது
ஏழைமர் யத்தா(வு)க் கிதுதான் நிகழ்ந்தது
அதிக காலம் ஆனிரை மேய்த்தனள்
நிரையுடன் வெகுதொலை நிதமும் நடந்தனள்."

கடுமையாய்ச் சுமந்தனள் கனமுறு கர்ப்பம்
கடிதே தாங்கினள் கனம்நிறை வயிற்றை
ஏழுமா தங்கள் எட்டுமா தங்கள்
முழுமையாய் மாதம் மூண்டது ஒன்பது
கன்னியர் பழைய கணக்கதன் படிக்கு
பத்தாம் மாதம் பாதியும் சுமந்தனள்.

அங்ஙனம் அண்மிய ஐயிரு திங்களில்
கன்னிப் பெண்ணவள் இன்னலை உணர்ந்தனள்
கர்ப்பம் மிகவும் கடினமா யிருந்தது
சுமையின் அழுத்தலால் தோன்றிய துநோ.

குளியல் வேண்டுமாய்க் கோரினாள் அன்னையை
"ஓ,என் தாயே, உயர்அன் பன்னையே!
தயார்நீ செய்வாய் தகுமோர் புகலிடம்
வெப்பம் ஆர்ந்த வியன்அறை ஒன்றினை
மங்கை யொருத்தியின் மறைவிட மாக
பிரசவ வேதனைப் பேதைக் காக."

தாயும் இவ்விதம் சாற்றிட வந்தனள்
சொந்தப் பெற்றவள் சொல்லினள் மறுமொழி:
"ஐயகோ, உனக்கு, அடர்பேய்ப் பரத்தையே!
எவனுடன் நீயும் ஏகிப் படுத்தனை
அவனும் விவாகம் ஆகா மனிதனா
அல்லது விவாகம் ஆகியோன் தானா?"

மர்யத்தா, அழகிய மகளவள், இளையள்,
அதற்கு மறுமொழி அளித்தனள் இவ்விதம்:
"மணஞ்செய் யாத மனிதனு மதுவல
அல்லது திருமண மாம்மனி தனுமல;
சிறுபழம் பெறற்குச் சென்றேன் குன்றிடை
பழுத்தசெஞ்**சிறுபழம் பறித்திடச் சென்றேன்
திகழ்மகிழ் வுடனச் சிறுபழம் பெற்றேன்
அடுத்துச் சுவைத்துப் பார்த்தேன் அதனை
நழுவித் தொண்டையில் நண்ணிநின் றதுவது
விலகி வயிற்றினுள் வீழ்ந்தது பின்னர்:
நிறைந்தேன் அதனால் நிறைவுற் றேனதால்
அதிலிருந் தேநான் அடைந்தேன் கர்ப்பம்."

**குளியல் வேண்டுமாய்க் கோரினள் பிதாவை:
"ஓ,என் பிதாவே, உயர்அன் பெந்தையே!
எனக்குத் தருவீர் ஏற்றதோர் புகலிடம்
வெப்பம் ஆர்ந்த வியன்அறை ஒன்றினை
அங்கோர் நோயுளாள் ஆறுதல் பெற்றிட
வாதை யுளபெண் வாதையைப் பொறுத்திட."

தந்தை இவ்விதம் சாற்றிட வந்தனர்
பிதாவும் இவ்விதம் பேசினர் மறுமொழி:
"செல்வாய் பரத்தையே , செல்வாய் அப்பால்!
வேசிப் பெண்ணே, மேலும் செல்வாய்!
கரடிகள் வாழும் கற்குகை களுக்கு
கரடிகள் உறையும் கல்வீட் டுக்கு
பரத்தையே, அங்குபோ பிரசவத் திற்கு
வேசியே, அங்கே விரைசிசுப் பெற்றிட."

மர்யத்தா, அழகிய மகளவள், இளையள்,
நன்றாய் இவ்விதம் நவின்றனள் மறுமொழி:
"பகர்எது விதத்திலும் பரத்தையே அல்லநான்
வெறுக்குமெவ் வகையான் வேசியு மல்லநான்
உயர்ந்தவோர் மனிதனை உழன்றுநான் பெறுவேன்
பிறப்பினில் சிறந்த பிறப்பினைப் பெறுவேன்

ஆண்டவர்க் கெல்லாம் ஆண்டவ னாவான்
வைனா மொயினனில் வல்லவ னாவான்.

அதன்பின் பேதைக் காயின தொல்லைகள்
எங்கே செல்வது எப்படிச் செல்வது
குளியல்வேண் டுமெனக் கோருதல் யாரை
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"பெண்ணே, என்பணிப் பெண்களில் சிறியளே!
ஊதியம் பெறுநரில் உறச்சிறந் தவளே!
குளியலைப் பெற்றிடக் குறுகுவாய் கிராமம்
**புல்வளர் அருவிப் புறம்சவு னாபெற
நோய்வாய்ப் பட்டவள் நேரா றுதல்பெற
வருசிறு பெண்தன் வாதையைத் தாங்கிட;
உடன்நீ செல்வாய் ஓடிநீ செல்வாய்
இப்போ தேவை இதுமிக அவசரம்."

பெண்ணவள், பணிசெயும் பெண்மிகச் சிறியவள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"குளியலைச் சென்றுநான் கோருதல் யாரிடம்?
எவரிடம் சென்றுநான் இரப்பது உதவியை?"

மர்யத்தா நம்சிறு மங்கை கூறினள்
உரைத்தாள் அவளே உரைத்தாள் இவ்விதம்:
"*றுவோத்துஸ் இடத்தே நுவன்றுகேள் குளியலை
**புல்வளர் அருவியில் போய்ப்பெறு சவுனா!"
பெண்ணவள்,பணிசெயும் பெண்மிகச் சிறியவள்
தாழ்மையும் பணிவும் தானே கொண்டவள்
பணிக்கப் படாமலே படர்விரை வுடையவள்
சொல்லா மலேமிகத் தொடர்கதி கொண்டவள்
பனிப்புகார் போலப் படர்ந்தனள் வெளியே
முழுப்புகை மூடிய முற்றத் தடைந்தனள்
தன்பா வாடையைத் தளிர்க்கரம் பற்றினள்
உடைகளைக் கைகளால் உருட்டித் திரட்டினள்
விரைந்தனள் ஓடினள் இரண்டையும் செய்தனள்
விரைவாய் றுவோத்துஸ் வீட்டினை நோக்கி;
அவள்செல் கையிலே அசைந்தன குன்றுகள்
மற்றவள் ஏறலால் மலைச்சரி வாடின
கூம்புக் காய்கள் குதித்தன புற்றரை
செறுகூ ழாங்கல் சேற்றில் சிதறின;
வந்து சேர்ந்தனள் றுவோத்துஸ் வசிப்பிடம்
கட்டிட வாயிலால் கடிதுட் புகுந்தனள்.

எழிலிலா றுவோத்துஸ் இருந்தனன் சட்டைபுக்(கு)
அளவில் பெரிதாய் அயின்றும் குடித்துமாய்
மேசையொன் றின்தலை **வியன்புறம் அமர்ந்தனாய்,
சணல்நூல் சட்டை தனித்தே அணிந்து.

உணவருந் தியபடி உரைத்தனன் றுவோத்துஸ்
சாய்ந்துகிண் ணங்களில் தானே குரைத்தனன்:
"இழிந்த பிறவியே, என்னநீ சொல்கிறாய்?

ஈனப் பிறவியே, எதற்காய் விரைகிறாய்?"

பெண்ணவள், பணிசெயும் பெண்மிகச் சிறியவள்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"குளியல் பெறற்குக் குறுகினேன் கிராமம்
புல்வளர் அருவியில் புணர்சவு னாபெற
நோய்வாய்ப் பட்டவள் நோய்நிவா ரணம்பெற
அல்லற் பட்டவள் ஆம்உத விபெற."

எழிலிலா றுவோத்துஸ் என்பவன் *தலைவி
வல்லிடைக் கைகளை வைத்தே நடந்தனள்
நிலப்பல கையிலே உலாவித் திரிந்தனள்
தரைமத் திக்குத் தானாய் வந்தனள்
இவ்விதம் வினவினள் இடம்தான் வந்ததும்
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
"குமரி, யா ருக்குநீ குளியல் கேட்கிறாய்
உறும்எவ ருக்குநீ உதவி கேட்கிறாய்?"

பணிப்பெண் கூறினள் பகர்ந்தனள் சிறுபெண்:
"எம்மரி யத்தா(வு)க் கிதுநான் கேட்கிறேன்."

எழிலிலா றுத்துவோஸ் என்பவன் தலைவி
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"எலார்க்கும் குளியல் இங்கே கிடையா
புல்வளர் அருவிப் புணர்வா யிற்புறம்;
குளியற் குடில்எரி குன்றிலே யுள்ளன
உளபரி லாயம் ஊசி(யி)லைச் சோலையில்
வேசிப் பெண்கள் வியன்மகற் பெறற்கு
பரத்தைப் பெண்கள் பாலரைப் பெறற்கு:
துரகம் ஆங்கே சுவாசித் திடுகையில்
குளித்துக் கொள்ளலாம் குறுகிடு நீங்களும்."

பெண்ணவள், பணிசெயும் பெண்மிகச் சிறியவள்,
திரும்பினள் வேகமாய்த் திரும்பி நடந்தனள்
விரைந்தனள் ஓடினள் இரண்டையும் செய்தனள்
திரும்பி வந்ததும் செப்பினள் இவ்விதம்:
"குளியல் என்பது இலைக்கிரா மத்தில்
புல்வளர் அருவியில் இலைச்சவு னாவும்
எழிலிலா றுத்துவோஸ் என்பவன் தலைவி
உரைத்தாள் ஒருசொல் உரைத்தாள் இவ்விதம்:
`எலார்க்கும் குளியல் இங்கே கிடையா
புல்வளர் அருவியின் புணர்வா யிற்புறம்;
குளியற் குடில்எரி குன்றிலே யுள்ளன
உளபரி லாயம் ஊசி(யி)லைச் சோலையில்
வேசிப் பெண்கள் வியன்மகற் பெறற்கு
பரத்தைப் பெண்கள் பாலரைப் பெறற்கு:
துரகம் ஆங்கே சுவாசித் திடுகையில்
நீங்களும் அதிலே நீரா டிடலாம்!'
அதுதான் நிலைமை அவ்வா றுரைத்தனள்
அவளது ஒரேயொரு மறுமொழி அதுதான்."

மர்யத்தா என்னும் மங்கைதாழ் வானவள்
அதனைக் கேட்டதும் அழவே தொடங்கினள்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"வந்தது நேரம் வழிநான் புறப்பட
கூலிமுன் நாட்பெறும் கூலிகள் போலவும்
அல்லது ஊதியத் தடிமைகள் போலவும்
எரித்துச் சுட்ட இருநிலத் தேகலாம்
ஊசி(யி)லை மரத்துச் சோலைக் கேகலாம்."

உடைகளைக் கையினால் உருட்டி எடுத்தனள்
அவள்பா வாடையை அள்ளிக் கொண்டனள்;
குளியல் இலைப்பிடி கொண்டனள் காவலுக்(கு)
இனிய இலைக்கட் டெடுத்தளா தாரமாய்
**அடிவைத் துக்கடி தவளும் விரைந்தனள்
வயிற்றிலேற் பட்ட வன்கொடு நோவுடன்
ஊசி(யி)லை மரத்துச் சோலைக் குடிற்கு
**தப்பியோ மேட்டின் தனிப்பரி லாயம்.

இனிவரும் சொற்களில் இவ்விதம் சொன்னாள்
இந்த மொழிகளில் இவ்விதம் மொழிந்தாள்:
"கர்த்தரே வாரும் காவலைத் தாரும்,
உயரன் புடையரே, உதவிக்கு வாரும்,
பிரசவ நோவும் பிடித்தஇப் பொழுது
கொடியகா லமது கூடும்இவ் வேளை!
வாதையி லிருந்திவ் வனிதையை விடுவி
பிரசவ நோவினாற் பெயர்த்தெடு பாவையை
அல்லலில் அப்பெண் அமிழா திருக்க
இன்னல் பட்டவள் இறந்திடா திருக்க!"

சேரும் இடமவள் சேர்ந்ததன் பின்னர்
இந்தச் சொற்களில் இயம்பினள் அவளே:
"நல்ல குதிரையே, நன்றாய்ச் சுவாசி!
ஊது, இழுக்கும் உயர்பரிக் குட்டியே!
குளியல்நீ ராவியைக் கொஞ்சம் அனுப்பு!
சூடுறும் சவுனா ஆவியைப் பரப்பு!
நோயுறும் நான்சற் றாறுதல் பெறட்டும்!
உறுதுயர் நானிவ் வுதவியைப் பெறட்டும்!"

நல்ல குதிரை நன்குமுச் செடுத்தது
ஊதிய திழுக்கும் உயர்பரிக் குட்டி
வாதையுற் றவளின் வயிற்றின் மீது:
துரகம் அப்படிச் சுவாசித் தமைதான்
சவுனா ஆவி தான்எழல் போன்றது
கொதிகல் அதில்நீர் கொட்டுதல் போன்றது.

மர்யத்தா என்னும் மங்கைதாழ் வானவள்
தூய்மை யான தோகைஅச் சிறுபெண்
குளித்தனள் நிறைவாய்க் குளியல் அறையிலே
வேண்டிய வரையும் வெப்ப ஆவியில்;

பாவையங் கொருசிறு பையனைப் பெற்றனள்
குணநிலை பேறுடைக் குழந்தையைப் பெற்றனள்
வைக்கோல் மீது வளர்பரி அருகில்
உரோமம் பருத்தே யுளலா யத்தினுள்.

கழுவினள் தன்சிறு கவினார் பையனை
**சாணைச் சீலையில் தான்பொதித் தெடுத்தனள்;
மகவினைத் தூக்கி வைத்தனள் முழங்கால்
பையனைத் துணிமேல் பையவே வைத்தனள்.

மறைவாய் அவள்தன் மகவினை வைத்தனள்
அருமையாய் வளர்த்தாள் அழகிய பையனை
அவள்தன் சிறிய அரும்பொன் அப்பிளை
வெள்ளியில் ஆனதன் வெண்தடி யதனை
அங்கையில் வைத்து அவளுண வூட்டினள்
அணைத்துக் கொண்டனள் அவள்கரம் திருப்பி.

முழங்கால் வைத்தனள் முனைந்தவள் பையனை
மதலையை எடுத்து மடியில் கிடத்தினள்
வாரத் தொடங்கினள் மற்றவன் தலையினை
சீவத் தொடங்கினள் சிறந்தவன் தலைமயிர்:
காணோம் முழங்கால் களிலமர் பையனை
மடியினி லிருந்த மதலை மறைந்தது!

மர்யத்தா என்னும் மங்கைதாழ் வானவள்
அவட்குப் பெருந்துயர் அதனால் வந்தது;
அவனைத் தேடி அவள்விரைந் தோடினள்
தேடினள் அவள்தான் சிறியநற் பையனை
அம்பொன் போன்றதன் அப்பிளைத் தேடினள்
வெள்ளியில் ஆனதன் வெண்தடி யதனை
அரைக்கும் திரிகை அகல்கல் லடிக்கீழ்
ஓடும் சறுக்கும் ஒண்வண்டி யின்கீழ்
புடைக்கும் முறத்தின் அடிப்புறம் தன்னில்
சுமந்தே செல்லும் தொல்பெட் டியின்கீழ்
ஆடும் மரங்களில் அசையும் புற்களில்
சிந்திப் பரவும் சிறந்தவைக் கோலில்.

பலபொழு தாய்த்தன் பையனைத் தேடினள்
அவள்தன் பையனை அவள்தன் சிறுவனை
குன்றிலும் ஊசி(யி)லை கொள்மரத் தோப்பிலும்
பருமரக் குற்றி பசும்புற் றரையிலும்
உறும்பசும் புல்வெளி ஒவ்வொரு பூவிலும்
புல்வளர் எல்லாப் புதர்பற் றையிலும்
சூரைச் செடிகளின் வேர்களைக் கில்லியும்
மரங்களின் கிளைகளை வகைநே ராக்கியும்.

மேலும் நடக்கலாம் வெளியிலென் றெண்ணினள்
புறம்நடந் துழன்று போய்வர விரும்பினள்
எழில்விண் மீனொன் றெதிர்வரும் வரையும்
தாரகை வந்ததும் தலைதாழ்த் திட்டனள்:

"ஓ,விண் மீனே, உயர்இறை படைப்பே!
என்மகன் பற்றி எதுமறிந் திலையா?
எங்கே ஏகினன் என்சிறு பையன்?
புலர்பொன் அப்பிளைப் போன்றஎன் சிறுவன்?"

விண்மீ னுக்கு விடைசொலத் தெரிந்தது:
"அறிந்திருந் தாலும் அதைநான் சொல்லேன்
இங்கே அவன்தான் எனையும் படைத்தவன்
இவ்வித மான இடர்க்கொடும் நாட்களில்
இருங்குளிர் இடங்களில் இருந்துநான் மின்ன
இருண்ட இடங்களில் இருந்துகண் சிமிட்ட."

மேலும் நடக் கலாம் வெளியிலென் றெண்ணினள்
புறம்நடந் துழன்று போய்வர விரும்பினள்
சந்திரன் அவளெதிர் தான்வரும் வரையிலும்
சந்திரன் வந்ததும் தலைதாழ்த் திட்டனள்:
"ஓ,சந் திரனே, உயர்இறை படைப்பே!
என்மகன் பற்றி எதுமறிந் திலையா?
எங்கே ஏகினன் என்சிறு பையன்?
புலர்பொன் அப்பிளைப் போன்றஎன் சிறுவன்?"

சந்திரன் மறுமொழி சாற்றிடத் தெரிந்தது:
"அறிந்திருந் தாலும் அதைநான் சொல்லேன்;
இங்கே அவன்தான் எனையும் படைத்தவன்
இவ்வித மான இடர்க்கொடும் நாட்களில்
இரவிலே தனிமையில் இருந்தே காத்திட
பகலிலே சென்று படுக்கையில் தூங்க."

மேலும் நடக்கலாம் வெளியிலென் றெண்ணினள்
புறம்நடந் துழன்று போய்வர விரும்பினள்
தகிகதி ரையவள் சந்திக் கும்வரை
தகிகதிர் வந்ததும் தலைதாழ்த் திட்டனள்:
"ஓ,கதி ரவனே, உயர்இறை படைப்பே!
என்மகன் பற்றி எதுமறிந் திலையா?
எங்கே ஏகினன் என்சிறு பையன்?
புலர்பொன் அப்பிளைப் போன்றஎன் சிறுவன்?"

சூரியன் திறனாய்ச் சொல்லிய துபதில்:
"ஆம்,உன் பையனை அறிவேன் நானும்
இங்கே அவன்தான் எனையும் படைத்தவன்
இவ்வித மான இன்பநல் நாட்களில்
பொன்னொளி வீசிப் பொன்னாய் ஒளிர
வெண்ணொளி வீசி வெள்ளியாய்த் திகழ.

உன்மகன் பற்றி உண்மையில் அறிவேன்
ஐயகோ, பாவம், பையனோ ஏழை!
உன்சிறு பையன் உளனங் கிருக்கிறான்
பொன்அப் பிளையே போன்றஉன் சிறுவன்
இடுப்பு வரைபுதைந் திருப்பன்அச் சேற்றில்
கக்கம் வரைக்கும் கடும்அப் புதர்க்கான்."

மர்யத்தா என்னும் மங்கைதாழ் வானவள்
தேடினள் அவள்தன் பையனைச் சேற்றில்
காணப் பட்டனன் கவின்மகன் சேற்றில்
அடுத்து இல்லம் அவன்கொணர் பட்டனன்.

அதன்பின் எங்கள் மர்யத் தாவிடம்
எழிலார் பையன் இனிதே வளர்ந்தனன்
ஆயினும் இன்னமும் அவனோ பெயரிலன்
அழைக் கப்படலாம் அவன்எப் பெயரால்?
`மலரே` என்று மாதா அழைத்தனள்
`சோம்பற் போக்கிரி` சொல்லினர் அயலவர்.

தேடினர் ஞானநீர் தேர்ந்தாட் டொருவரை
தேடினர் ஒருவரை திருமுழுக் குநரையே
முதியவர் ஒருவர் முழுக்காட்(ட) வந்தனர்
*விரோக(ன்)னாஸ் வந்தனர் வியன்நீ ராட்டிட.

இந்தச் சொற்களில் இயம்பினர் முதியவர்
இயம்பினர் அவரே இயம்பினர் இவ்விதம்:
"ஆவி பிடித்தோர்க் காற்றேன் திருமுழுக்(கு)
நவில்இழி பிறப்பையும் ஞானநீர் ஆட்டேன்
பையனை விசாரணைப் படுத்தும் வரையிலும்
விசாரித்(துத்) தீர்ப்பு விடுக்கும் வரையிலும்."

யாரப்பா இதனை இனிவிசா ரிக்கலாம்
விசாரித்து யாரிதை மேல்தீர்ப் பளிக்கலாம்?
நிலைபெறும் முதிய வைனா மொயினன்
நிலைபெறும் மாய நெறியறி முதல்வன்
இதனை அவனே இனிவிசா ரிக்கலாம்
அவனே விசாரித் தளிப்பன் தீர்ப்பும்.

நிலைபெறும் முதிய வைனா மொயினன்
அதன்பின் இவ்விதம் அவன்தீர்ப் பளித்தனன்:
"இப்(ப)பயல் சேற்றி லிருந்து கிடைத்ததால்
பார்மிசை ஒருசிறு பழத்தில் பெற்றதால்
பையனை மீண்டும் பார்க்குள்வைத் திடட்டும்
சிறுபழச் செடியின் திகழ்மேட் டுப்புறம்
அல்லது பெற்றஅச் சேற்றிடைப் படுத்துக
அவனது தலையை அடிக்குக தடியால்,"

அரைமாதப் (ப)பயல் அவனே பேசினன்
இருவ(ா)ர வயதினன் இவ்வா றியம்பினன்:
"ஓகோ, நீயோர் இழிந்ததோர் கிழவன்,
இழிந்த கிழவன், இளைத்தவோர் மனிதன்,
முட்டாள் தனமாய் மொழிந்தனை தீர்ப்பு,
சட்டம் பிழையாய்த் தான்பயன் படுத்தினாய்!
இன்னும் பெரிய ஏதுகட் காக
இன்னும் கொடிதாய் எழுதீச் செயற்காய்
உனையே சேற்றுள் உட்படுத் தியதிலை

தடியால் உனது தலையடிக் கவுமிலை
நீயொரு இளைஞனாய் நிலவிய போது
நீயே வழங்கினாய் **நின்தா யீன்சிசு
நின்தலை நீயே நீடு காத்திட
நீயே நின்னை நேர்விடு விக்க.

அன்றோ அன்றுதொட் டதன்பின் என்றோ
எவரும் நினைச்சே றெடுத்தே கியதிலை
இளநல் மனிதனாய் இருக்கையில் நீயே
இளம்பெண் களைநீ ஏகிட வைத்தனை
ஆழப் புனலின் அலைகளின் அடியில்
கறுத்தச் சேறு கதுவிய மடியில்."

முதியவர் உடன்திரு முழுக்கதை யாற்றினர்
நனிவிரைந் தவனை ஞானநீ ராட்டினர்
கரேலியாப் பகுதியின் கவினுறு மன்னனாய்
அனைத்தாட் சிக்கும் ஆளுன னாக.

வைனா மொயினன் மற்றதால் சினந்தான்
அத்துடன் வெட்கமும் அடைந்தான் சினத்துடன்
தானாய் எழுந்து தனிப்புறம் போந்தனன்
கடலின் பக்கமாய் கடற்கரைப் பக்கமாய்
இதன்பின் அங்கிருந் திசைக்கத் தொடங்கினன்
இறுதி முறையாய் இசைத்தான் பாடலை
பாடினான் செப்புப் படகொன் றினுக்கு
பாடினான் செப்புத் தளப்பட குக்கு.

படகின் சுக்கான் பக்கத் தமர்ந்தனன்
புறம்போந் தனன்தெளி பொலிநீர்ப் பரப்பில்
செல்லும் பொழுதவன் செப்பினன் இவ்விதம்
புறப்படும் போதே புகன்றனன் இவ்விதம்:
"காலம் சென்று கரைந்துபோ கட்டும்
ஒருநாள் போகலாம் மறுநாள் வரலாம்
மீண்டும் தேவை மிகலாம் எனக்கு
தேடப் படலாம் திரும்பெதிர் பார்க்கலாம்
சம்போ ஒன்றினைச் சமைத்திடப் புதிதாய்
இசையினை மீண்டும் இசைத்திடப் புதிதாய்
சந்திரன் புதிதாய்த் தான்கொணர் தற்கு
வியன்புதுக் கதிரினை விடுதலை செயற்கு
சூரிய சந்திரர் தோன்றா தேகிடில்
இகதலத் தின்பம் இல்லா தேகிடில்."

முதிய வைனா மொயினன் அதன்பின்
வேகமாய் முன்னே விரைந்தனன் எழுந்து
செப்பினால் செய்தவச் செம்பட கினிலே
அடித்தளம் செப்பினால் அமைந்த படகிலே
உலகத் தாயின் உதிப்பிலக் கிற்கு
இறங்கிச் சுவர்க்கம் இயைவிடத் திற்கு.
நின்றனன் படகுடன் நேர்அவ் விடத்தே
சற்றுப் படகுடன் தரித்திளைப் பாறினன்

இன்கந் தலேயாழ் பின்விட் டேகினன்
பின்லாந் தினுக்குப் பேரின் னிசையினை
நிலைபெறும் இன்பம்இந் நெடுநாட் டவர்க்கு
தனதுசேய் களுக்குத் தவப்பெரும் பாடல்கள்.

=== மு டி வு ரை ===

மெல்லவாய் மூடநான் வேண்டிய நேரம்
வியன்நா கட்ட வேண்டிய தருணம்
காவியம் - பாடலின் கடைநிலை வந்துளோம்
இனிய பாடலை இத்துடன் நிறுத்தலாம்;
வன்புர விக்கும் வரலாம் இளைப்பு
நீண்ட பயணம் நிகழ்த்திய பின்னர்,
இரும்பும் கூட இளைத்தலுத் திடலாம்
கோடையில் வைக்கோற் குவியல் அறுத்தபின்,
விரைநீ ருக்கும் வேகம் குறையலாம்
ஆற்றின் வளைவுகள் அனேகம் கடந்தபின்,
அனலும் கூட அணைந்தே போகலாம்
நீண்ட இரவில் நிலைத்தெரிந் ததன்பின்;
கவிஞற்கு மட்டுமேன் களைப்பு வராது
இனிய பாடலை ஏன்நிறுத் தொணாது
மாலைநீள் போதின் மகிழ்ச்சியி லிருந்து
பருதிவீழ் நேரப் பாடலி லிருந்து?

நான்கேட் டுள்ளேன் நவில்வதை இப்படி
வேறு விதமாம் வாதமும் அறிந்துளேன்:
"வீழ்ச்சிநீர் எவ்வள(வு) வேகமாய் வீழினும்
நீரதோ வற்றி நின்றுபோ காது
பாடகர் யாருமே பாடிடார் அவ்விதம்
தன்னிடம் நிறைந்த தனிப்பா அனைத்தையும்;
நிறுத்தி விடுவதே நேர்த்தியாம் மிகவும்
வெட்டி நடுவிலே விடுவதைப் பார்க்கிலும்."

நிற்கலாம் அதனால் நிறுத்தலாம் இங்கே
நிகழ்த்துபா அதனால் நிறைந்தது முடிந்தது
பந்தாய் எனது பாடலைச் சுற்றுவேன்
ஒருகட் டாயத்தை உருட்டி யெடுக்கிறேன்
கூடமேல் தளத்தில் கொண்டே வைக்கின்றேன்
எலும்புப் பூட்டின் இதனுள் வைக்கிறேன்
அங்கிருந் தென்றும் அவை வெளியேறா
வாழ்நாள் என்றுமே வந்திடா வெளியே
அந்த எலும்புகள் ஆட்டப் படாமல்
திண்வாய்த் தாடைகள் திறக்கப் படாமல்
பற்கள் அகட்டிப் பகுக்கப் படாமல்
அணிநா விரைவாய் அசைக்கப் படாமல்.

ஆயினும் பாடினால் அதனால் என்னநான்
பாடினால் மந்திரப் பாடலை அதிகமாய்
ஆற்றின் பள்ளத் தாக்கொவ் வொன்றிலும்
ஊசி(யி)லை மரத்துச் சோலையொவ் வொன்றிலும்.

இப்போ துயிரோ டில்லையென் அன்னை
என்னைப் பெற்றவர் இல்லை விழிப்புடன்
பொன்போல் என்னவர் நின்றும் கேட்டிலர்
அன்புக் குரியவர் அவதா னித்தலர்;
ஊசி(யி)லை மரங்கள் ஓர்ந்தே கேட்பன
பசு(மை)மரக் கிளைகள் அவதா னிப்பன
மிலாறு இலைகள் மிகஅன் பளிப்பன
பேரிநன் மரங்கள் சீராட் டுவன.

நான்சிறு வயதில் நற்றாய் இழந்தேன்
அம்மா இன்றிநான் அவதாழ் வடைந்தேன்
**மேகப் புள்ளாய் விழுந்தேன் கற்றளம்
**பாடும் பறவையாய் பாறைமேல் நின்றேன்
கீச்சொலி மேகப் புள்ளெனக் கிளப்ப
பாடும் பறவையாய்ப் பாடியே யிருக்க
அன்னிய ஓர்பெண் அரவணைப் பினிலே
ஒருசெவி லித்தாய் உறுகவ னிப்பில்;
ஏழைநான் அப்பெண் என்னைத் துரத்தினள்
அனாதைப் பிள்ளையை அப்பால் விரட்டினள்
வதிவிடத் திருந்து வளர்கால் பக்கமாய்
வடக்குப் பக்கமாய் வதிவில் இருந்து
ஆத(ா)ர மின்றி அக்காற் றெதிர்கொள
குளிர்காற் றெதிராய்க் கொளுமன் பின்றி.

எங்கும் மேகப் புள்ளென இயங்கினேன்
ஏழைப் பறவையாய் எங்கும் சுற்றினேன்
நலிவுற் றவனாய் நாடுக ளனைத்திலும்
துன்புற்ற வனாய் எங்கும் சுற்றினேன்
அதனால் ஒவ்வொரு காற்றையும் அறிந்தேன்
அனுபவத் துணர்ந்தேன் அதிர்காற் றுறுமலை
குளிரின் கொடுமையால் கொண்டேன் நடுக்கம்
உறைந்துறை குளிரில் உற்றழு திருந்தேன்.

இப்போ எனக்கு இங்கே பலருளர்
பற்பல பேரைநான் இப்போ காண்கிறேன்
பெருஞ்சினக் குரலால் பேசுவோர் இருக்கிறார்
தகாக் கடும் குரலால் தாக்குவோர் இருக்கிறார்;
தானாய் ஒருவரென் தனிநாச் சபித்தார்
ஒருவரென் குரல்கேட் டுரக்கக் கத்தினார்
பொருத்தமில் பாட்டெனப் புகன்றார் பழிச்சொல்
அதிகம் பாடிய தாய்அவ தூறுள
நன்றாய்ப் பாடிலேன் என்றும் முணுமுணுப்(பு)
பாடலை மாற்றிப் பார்த்தார் தகாப் பொருள்.

வேண்டாமெக் காலமும் விருப்பன் புடையரே
எக்காலும் கருதா திருப்பீர் தவறாய்
அடியனோர் பிள்ளை அதிகம் பாடினால்,
சிறியேன் ஏதேனும் தீதாய் உரைத்தால்!
பள்ளிநான் சென்று பாடம் கற்றிலேன்

அறிஞர் வாழ்நா டடைந்தது மில்லைநான்
அருஞ்சொல் வெளிப்புறத் தால்நான் பெற்றிலேன்
தூரத் திருந்து சொற்றொடர் வந்தில.

பள்ளியில் மற்றவர் பாடம் படித்துளர்
வீட்டைவிட் டென்னால் வெளிச்செல முடிந்தில
என்றுமன் னைக்குநான் இருந்தேன் உதவியாய்
தனித்திருந் தவளைத் தான்வலம் வந்தேன்
கற்கும்நிர்ப் பந்தம் கடுமைஇல் லில்தான்
என்குடிற் கூரை இயைமரத் தின்கீழ்
நூல்நூற்கும் அன்னையின் நூற்புக் கழியினில்
சோதரன் சீவும் துண்டுப் பலகையில்
நான்ஒரு சிறுவன் நனிசிறு பையன்
கிழிந்த சட்டையும் அணிந்ததோர் சிறுவன்.

அதுஅவ் வாறு அப்படி இருக்க
பாடகர் களுக்குநான் பாதையொன் றமைத்தேன்
அமைத்தேன் பாதை ஒடித்தேன் மரமுடி,
மரக்கிளை முறித்தேன் வகுத்தேன் பாதைநான்
இதுதா னப்பா இப்போ போம்வழி
இதுதான் புதிதாய் ஏகும் வழிதடம்
பலதிறப் புலமை யுடையபா டகர்க்கு
பாடகர் களுக்கு பாடல்க ளுக்கு.
எழுந்துயர்ந் தோங்கும் இளையசந் ததியில்
வளர்ந்துயர்ந் தோங்கும் மக்களார் மத்தியில்.

================

Kalevala - A Finland Epic (in tamil script, TSCII format)
Compiled by: Elias Lonnrot
Translated into Tamil by R.Sivalingam
Edited with an introduction by Asko Parpola

கலேவலா - பின்லாந்தின் தேசிய காவியம்
தொகுப்பு: எலியாஸ் லொண்ரொத்
தமிழ் மொழிபெயர்ப்பு: ஆர். சிவலிங்கம் (உதயணன்)
நூல் அமைப்பும் அறிமுகமும்: டாக்டர் அஸ்கொ பார்பொலா (பேராசிரியர் - இந்திய இயல்)

# சொற்றொகுதி

[பெயர்கள் முதலில் தமிழிலும் அடுத்து பின்னிஷ் மொழியிலும் (அவசியமான இடங்களில் அடைப்புக்குறிக்குள் ஆங்கிலத்திலும்) இடம் பெற்றுள்ளன].

## அ

அசுரமலை: இம்மலை தீய ஆவிகள் உறைவதாகக் கருதப்படும் ஒரு மலை. Horna என்னும் பின்னிஷ் சொல்லுக்கு தீய ஆவி, அசுரன், பூதம் என்று பொருள். இம்மலை கல்லவெசி ஏரிக்கு தென்கிழக்கில், பின்லாந்தின் பெரிய தீவான சொய்ஸலோவில் இருந்ததாகக் கருதப்படுகிறது.

அந்தரோவிபுனன்: Antero Vipunen: மந்திரம் தெரிந்த ஒரு பௌராணிக பூதம்.

அமைதிநீர் மனிதன்: அமைதி நீரினன், நன்னீர் மனிதன் ஆகியன வைனாமொயினனின் சிறப்புப்பெயர்கள்.

அய்யோ:A*ijo*: இக்கு - துர்சோவின் தந்தை; பார்க்க 'இக்கு - துர்சோ'.

அலுவே: Alue: ஒரு ஆதி காலத்து நதியின் பெயர்.

அன்னிக்கி: Annikki: கொல்லன் இல்மரினனின் சகோதரி. 'நற்பெயருடையாள்' என்பது அவளுடைய சிறப்புப் பெயர். இரவிலும் அதிகாலையிலும் வீட்டுக் கடமைகளைச் செய்வதால் இரவின் நங்கை, வைகறை வனிதை என அழைக்கப் படுபவள்.

அஹ்தி: Ahti: லெம்மின்கைனனின் இன்னொரு பெயர்.

அஹ்தொலா: Ahtola: அஹ்தோவின் ஆளுகைக்கு உட்பட்ட இடம்.
அஹ்தோ: Ahto: அலைகளின் அதிபதி; கடலுக்கும் நீருக்கும் அதிபதி; அஹ்தோவின் மனைவியின் பெயர் வெல்லமோ.

அஹ்தோலைனன்: Ahtolainen: அஹ்தொலாவில் வசிப்பவர்.

## ஆ

ஆழத்துலகம்: துவோனலா என்னும் மரண உலகத்தின் இன்னொரு பெயர். பாதாள உலகம்.

## இ

இக்கு - துர்சோ: Iku-Turso: கடலரக்கன், கடற்பூதம், கடலின் மாபெரும் சக்தி (sea monster)

இங்கிரியா: Inkeri: பின்லாந்தின் குடாக் கடலுக்கு தென்கிழக்கில் உள்ள ஓர் இடம். ரஷ்யாவின் ஒரு பகுதியாக இருந்தது. சென்ற், பீற்றர்ஸ் பேர்க் ( St. Petersberg ) [முந்திய லெனின் கிராட்] மாநிலத்தில் இருக்கிறது.

இடுகாட்டு ஆவி: Kalma: மரணம், மரண சக்தி, மரணத்தின் ஆவி என்னும் பொருளில் இடுகாடு உருவகப் படுத்தப்பட்டது.

இமாத்ரா: Imatra: வுவோக்ஸி நதியில் வீழ்ந்ததாகக் கருதப்படும் ஒரு பெரிய நீர்வீழ்ச்சி; இப்பொழுது இந்த இடம் இமாத்ரா என்ற பெயரில் ஒரு நகரமாக மாறியிருக்கிறது. இங்கே தான் பின்லாந்தின் மிகப் பெரிய காகித ஆலையும் நீராற்றல் மின்சக்தி நிலையமும் அமைந்துள்ளன.

இல்போ[வின்] மகள்: Ilpotar: லொவ்ஹியின் இன்னொரு பெயர்.

இல்மத்தார்: Ilmatar: (air spirit) வாயுவின் மகள்; காற்றின் கன்னி; நீரன்னை; பூமியைப் படைத்தவள்; வைனாமொயினனின் கன்னித்தாய்.

இல்மரி, இல்மரினன்: Ilmari, Ilmarinen: இந்நூலின் மூன்று முக்கிய நாயகர்களில் ஒருவன். அழிவில்லாத ஆதிகாலத்து உலோக வேலைக் கலைஞன். இவனைக் "கொல்லன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நமது வழக்கில் "கொல்லன்" என்றால் இரும்பு வேலைத் தொழிலாளியையே குறிக்கும். அதே நேரத்தில் "பொற்கொல்லன்" என்ற சொல்லும் வழக்கில் இருக்கிறது. பின்னிஷ் மொழியில் seppo என்றால் உலோகத் தொழிலாளி என்று பொருள். எந்த வகையான உலோகத்திலும் வல்லமையுடைய கலைஞன் என்றே பொருள். இதை ஆங்கிலத்தில் smith என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள்.
வடநாட்டில் சம்போ என்னும் சாதனத்தைச் செய்த திறமை மிக்க தேவ கொல்லன். வானத்தைச் செய்தவன், விண்ணுலகின் மூடியைச் செய்தவன் என்றெல்லாம் வர்ணிக்கப்படுபவன். பின்னிஷ் மொழியில் Ilma என்றால் காற்று, ஆகாயம், வானம் என்று பொருள். இச்சொல்லில் இருந்து இப்பெயர் வந்தது. இப்பெயர் இன்னமும் பின்னிஷ் மக்களிடையே வழக்கில் இருக்கிறது. இல்மரினனைப்பற்றிப் படிக்கும் பொழுது இந்திய மரபுப்படி புராணங்களில் வரும் தேவதச்சன் விசுவகருமாவும் அசுரதச்சன் மயனும் நினைவுக்கு வரலாம்.

இல்மரினனின் சகோதரி அன்னிக்கி. வடநாட்டுத் தலைவி லொவ்ஹியின் மகளைத் திருமணம் செய்தவன். அடுத்த மகளைக் கவர்ந்து சென்று கடல் பறவையாகச் சபித்தவன்.

இல்மரினனின் தலைவி: Ilmarisen ema*nta*: இல்மரினனின் மனைவி; வடநாட்டுத் தலைவியான லொவ்ஹியின் மூத்த மகள்; விவாகத்துக்கு முன்னர் வடநில மங்கை என்றும் பின்னர் இல்மரினனின் தலைவி என்றும் அழைக்கப்பட்டவள்; பெயர் கூறப்படவில்லை.

இல்மா: Ilma: (i) இல்மரினனின் தோட்டம், (ii) இல்மரினனின் வசிப்பிடம், (iii) இல்மரினன் என்ற பெயரின் சுருக்கம்.

## ஈ

ஈயநெஞ்சாள்: Tinarinta: ஈயம், தகரம் போன்றவற்றால் செய்யப்பட்ட பெறுமதி குறைந்த நகைகளை அணியும் கன்னிப் பெண்ணை முன்னாளில் தகர மார்பணி அல்லது ஈய மார்பணி அணிந்தவள் என்னும் பொருளில் `ஈய நெஞ்சாள்`, `ஈயத்துநெஞ்சாள்`, `தகர நெஞ்சாள்`, `ஈய மார்பினள்`, `தகர மார்பினள்` என அழைத்தனர். பொதுவாக விவாகமாகாத ஒரு கன்னிப் பெண்ணையே இவ்விதம் அழைத்தனர் என்ற கருத்தும் உண்டு.

## உ

உக்கோ: Ukko: முதியவன் என்று பொருள். முகில்களின் அதிகாரம் கொண்ட சுவர்க்கத்தை ஆளும் கடவுள் என்ற கருத்தில் "உக்கோ" என்று ஆதிகாலத்தில் அழைத்தனர்.

உந்தமோ: Untamo: 5ம் பாடலில் கனவின் சக்தி, கனவின் ஆக்க சக்தி, கனவின் ஆவி, கனவின் காரண கர்த்தா என்ற பொருளிலும் 26ம் பாடலில் ஓநாய்களை உடையவன் என்னும் பொருளிலும் கூறப்பட்டது. ஆனால் கலர்வோ என்பவனின் சகோதரனாக 31,34, 36ம் பாடல்களில் கூறப்படுகிறது.

உந்தாமொயினன்: Untamoinen: பார்க்க `உந்தமோ`.

உந்தோ: Unto: `உந்தமோ`வின் சுருக்கம்; பார்க்க `உந்தமோ`.

உப்பு - நீரிணை: Suolasalmi: ( the salt sound, the Sound); ஒரு உப்புக் கடற்கால்வாய், கடலுட் கால்வாய், தொடுவாய், நீரோட்டம். 46ம் பாடலில் கூறப்பட்ட இந்த நீரிணை தென் சுவீடனுக்கும் டென்னிஷ் தீவான சீலந்துக்கும் Sjaelland (Zealand) நடுவே அமைந்தது. இந்த நீரிணையின் இன்றைய பின்னிஷ் பெயர் Juutinrauma (`Jutland current`).

உறுத்தியா: Rutja: நோர்வேயின் வடகோடியில் லாப்லாந்தில் உள்ள இடம்; இதன் தற்போதைய பின்னிஷ் பெயர் உறுய்யா Ruija.

உறைபனி மனிதன்: Pakkanen: (Jack Frost); வடபுலத் தலைவி தனது பாதுகாப்புக்காக மந்திர சக்தியால் கொடிய உறைபனிக் குளிரை உண்டாக்கவல்ல ஒரு சக்தியை உருவாக்கி அதை லெம்மின்கைனன் மீது ஏவிவிடுகிறாள். இவன் உறைபனி மனிதன், உறைபனியோன், உறைபனி மைந்தன், பனிப் பையன் என்றும் அழைக்கப்படுகிறான். பின்னிஷ் மொழியில் புஹுரியின் மைந்தன்; புஹுரி Puhuri என்பது கடுங் காற்றின் உருவகப் பெயர்.

## எ

எஸ்த்தோனியா: Viro: (Estonia); முன்னர் சோவியத் யூனியனைச் சேர்ந்திருந்தது; இப்பொழுது ஒரு தனிநாடு.

## ஐ

ஐனிக்கி: Ainikki: லெம்மின்கைனனின் சகோதரி.

ஐனோ: Aino: யொவுகாஹைனனின் சகோதரி; வைனாமொயினனுக்கு மனைவியாக்க வாக்களிக்கப்பட்டவள்; கடைசியில் நீரில் மூழ்கி இறக்கிறாள். இதிலிருந்து நீரில் மூழ்கி இறப்பவர்கள் பின்னர் நீரின் ஆவியாக/சக்தியாக மாறுவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் ஒரு கருத்து உண்டு.

## ஒ

ஒஸ்மோ: Osmo: ஒரு பௌராணிக இடம்; கலேவாவின் இன்னொரு பெயர்.

ஒஸ்மொலா: கலேவலாவின் இன்னொரு பெயர்.

ஒஸ்மொயினன்: Osmoinen: கலேவாவின் சந்ததியினன் என்ற பொருளில் வைனாமொயினனைக் குறிக்கும்.

## க

கந்தலே: kantale: ஒருவகை நரம்பிசைக் கருவி; ஆரம்பத்தில் ஐந்து நரம்புகளைக் கொண்டது. பல நூறு வருடங்களாகப் பின்லாந்து மக்களால் இசைக்கப்பட்டு வரும் ஒருவகை யாழ்.

கந்தலேதார்: Kanteletar: யாழிசைக் கருவியின் தேவதை; கலேவலா நூலின் தொகுப்பாசிரியர் லொண்ரொத் "கந்தலேதார்" என்ற பெயரில் ஒரு இசைப்பாடல் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார்.

கர்யலா: Karjala: பார்க்க `கரேலியா`.

கரேலியா: Karelia: ரஷ்யா - பின்லாந்து எல்லையின் இரு புறமும் பரந்துள்ள பெரிய நிலப்பகுதி. இந்நூலின் பெரும்பாலான பாடல்கள் இங்குதான் சேகரிக்கப் பட்டன. இப்பகுதி கர்யலா Karjala என்றும் அழைக்கப்படும். Karja 'கர்யா' என்ற பின்னிஷ் சொல்லுக்குக் கால்நடை ( = ஆடுமாடுகள்) என்று பொருள். 'கர்யலா' என்பதை 'கால்நடை நாடு' 'கால்நடைப் பகுதி' என்று சொல்லலாம்.

கல்மா: Kalma: இடுகாடு; மரணத்தின் உருவகப் பெயர்; இதன் வேறு பெயர்கள்: துவோனி, மனா.

கலர்வோ: Kalervo: குல்லர்வோவின் தந்தை; உந்தமோவின் சகோதரன்.

கலர்வொயினன்: Kalervoinen: குல்லர்வோவின் ஒரு சிறப்புப் பெயர்.

கலேவா: Kaleva: இந்தக் காவியத்தின் நாயகர்களின் மூதாதையரின் பெயர்; ஆனால் இவர் ஒரு காவிய நாயகனாக இக்காவியத்தில் இடம்பெறவில்லை. இவர் வழி வந்தவரை கலேவா இனத்தவர் என்பர். இந்தக் கலேவா இனத்தவர் வாழ்ந்த இடம் கலேவலா என அழைக்கப்பட்டது. பாடல்களில் கலேவாவின் மைந்தர், கலேவாவின் மக்கள், கலேவாவின் பெண்கள் என வருவதைக் காணலாம்.

கலேவலா: Kalevala: ஒரு மாகாணப் பெயர்; அதுவே இந்நூலின் பெயரும் ஆயிற்று. 'கலேவா' என்பது ஓர் இனத்தவரின் பெயர். இந்நூலின் மூன்று முக்கிய நாயகர்களான வைனாமொயினன், இல்மரினன், லெம்மின்கைனன் ஆகியோரின் மூதாதையர் வாழ்ந்ததாகக் கூறப்படும் ஓரிடமே/நாட்டின் ஒரு பகுதியே 'கலேவலா'. -லா -la அல்லது -la* என்பது வதிவிடங்களைக் குறிக்கும் ஒரு விகுதி. 'தப்பியோ' Tapio என்பவன் காட்டு அரசன். 'தப்பியோ'வின் வசிப்பிடம் 'தப்பியோலா' Tapiola. 'துவோனி' Tuoni என்பவன் மரண உலகின் தலைவன். 'துவோனி'யின் வசிப்பிடம் 'துவோனலா' Tuonela.

கலேவைனன், கலேவலைனன்: Kalevainen, Kalevalainen: கலேவாவின் வழித் தோன்றல்கள். பாடல் 4: 94ல் வைனாமொயினனைக் குறிக்கும்.

கலேவத்தார் அல்லது ஒஸ்மத்தார்: Kalevatar/Osmotar: ஆதிகாலத்து "பீர்" என்னும் பானம் வடித்த கலேவாவின் பெண்கள்.

கனவுலகம்: பின்னிஷ் மொழியில் 'உந்தமோ' Untamo நித்திரைக்கும் கனவுகளுக்கும் அதிபதி. 'உந்தமொலா' Untamola உந்தமோவின் உறைவிடம். பார்க்க 'உந்தமோ'.

## கா

காத்ரா: Kaatra, Kaatrakoski: ஒரு கற்பனை நீர்வீழ்ச்சியின் பெயர்.

## கி

கிம்மோ: Kimmo: (i) ஒரு பசுவின் பெயர் (ii) ஒரு பாறைக் கல்லின் பெயர்.

## கு

குய்ப்பன: Kuippana: காட்டு அரசன் தப்பியோவின் இன்னொரு பெயர்; பார்க்க 'தப்பியோ'.

குயிலி, குயில்லி, குயிலிக்கி: Kylli, Kyllikki: லெம்மின்கைனன் கடத்திச் சென்று மணம் முடித்த மங்கை; ஒரு தீவைச் சேர்ந்தவள்; தீவின் மலர் என அழைக்கப்பட்டவள்.

குல்லர்வோ: Kullervo, Kullervoinen: கலர்வோவின் மகன். சிறு வயதில் தவறாக வளர்க்கப் பட்டதால் மன வளர்ச்சி இல்லாதவன் என்று கருதப் பட்டவன்.

## கெ

கெமி: Kemi, Kemijoki: வட பின்லாந்திலிருந்து பொத்னியாக் குடாக் கடலில் பாயும் ஓர் ஆறு. பின்னிஷ் மொழியில் joki என்றால் ஆறு. இங்கேயுள்ள ஒரு நகரமும் கெமி என்று அழைக்கப்படும்.

## கௌ

கௌப்பி: Kauppi: லாப்லாந்தைச் சேர்ந்த பனிக் கட்டியில் சறுக்கிச் செல்லும் பாதணிகளைச் செய்பவன்.

## ச

சக்ஸா: Saksa: 'சக்ஸா' என்ற பின்னிஷ் சொல்லின் பொதுவான பொருள் ஜேர்மனி (நாடு) என்பதாகும். வர்த்தகம், வெளிநாடு என்றும் இந்நூல் தொடர்பாகச் சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். பாதணிகள், உப்பு, சவர்க்காரம், பலகைகள் தொடர்பாகவும் இச்சொல் சில இடங்களில் வருகிறது. எனவே பாடல் 18:137ல் வர்த்தகத் தொடர்புடைய ஒரு நீர்ப்பகுதி என்று கருதப்படுகிறது. பாடல் 21:168ல் இச்சொல்லுக்கு வெளிநாட்டுப் பலகைகள் என்று பொருள் கொள்ளலாம்.

சம்போ: Sampo: ஒரு மந்திரப் பொருள், மர்மப் பொருள். மாய சக்தி படைத்த சாதனம். செல்வச் செழிப்பின் சின்னம். இது மூன்று முகங்கள் அல்லது பக்கங்கள் கொண்ட மூன்று சக்தி படைத்த ஓர் ஆலை என்றும் கருதப்படுகிறது. இப்பக்கங்கள் முறையே தானியத்தையும் உப்பையும் காசையும் அளவில்லாமல் அரைத்துக் கொண்டு அல்லது செய்து கொண்டே இருக்கும். வடநாட்டுத் தலைவியின் மகளை மணம் செய்வதற்காகத் தேவ கொல்லன் இல்மரினனால் செய்யப்பட்டது. சம்போவைப் பற்றிச் சொல்லும் இடங்களில் அதன் பிரகாசமான அல்லது பல வர்ண அல்லது ஒளிப் புள்ளிகளுள்ள மூடியும் கூறப்படுகிறது. வடநிலத் தலைவி இதனை வடக்கில் ஒரு குகையில் நிறுவுகிறாள். அங்கே இது மூன்று வேர்கள் விட்டு நிற்கிறது. இதுபோல் மீண்டும் ஒன்றைச் செய்ய முடியாது என்று சொல்லப்படுகிறது. சம்போவைப்பற்றி பல ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் வந்துள்ளன. ஆயினும் இதன் வடிவம் பற்றியும் இயல்பு பற்றியும் நூற்றுக் கணக்கான ஊகங்கள் சொல்லப்படுகின்றன.

சம்ஸா: Sampsa: விவசாயத்துக்குரிய ஆவி, சக்தி; முழுப் பெயர் சம்ஸா பெல்லர்வொயினன் Sampsa Pellervoinen.

சரா: Sara: வடநாட்டின் இன்னொரு பெயர்.

சரியொலா, ஸரியோலா: Sariola: வடநாட்டின் இன்னொரு பெயர்.

சவுனா, சௌனா: sauna: நீராவிக் குளியல்; நீராவிக் குளியல் செய்யும் இடத்தையும் குறிக்கும். நீராவிக் குளியலுக்கென்று அந்த நாட்களில் ஒரு தனிக் குடிசையும் இந்த நாட்களில் வசிக்கும் வீட்டோடு சேர்ந்த தனி அறையும் கட்டப்படுவது உண்டு. உள்ளே விறகுகளால் தீ மூட்டி அந்தத் தணலின் மேல் கற்களை அடுக்கி வைத்திருப்பார்கள். இந்த நாட்களில் மின் அடுப்புகளில் கற்களை அடுக்கிப் பயன்படுத்தினாலும் கிராமப் புறங்களில் இன்னமும் பழைய முறையையே விரும்பி அனுபவிக்கிறார்கள். இப்படி அடுக்கப்பட்ட கற்கள் கனன்று கொண்டிருக்கும். நீராவிக் குளியலைப் பெறுபவர் நீரை அள்ளி அக்கற்களில் எறியும் போது நீராவி எழுந்து அந்த அறையை நிறைப்பதோடு குளிப்பவரின் உடலிலும் படியும். நீராவியில் உள்ள வெப்பம் குறையும் போது மீண்டும் மீண்டும் நீரை எற்றுவார்கள். இடைக்கிடை இலைக் கட்டினால் விசிறி மெதுவாக உடலில் அடித்துக் கொள்வதும் வழக்கம். கடும் குளிர்ப் பிரதேசங்களான இந்நாடுகளில், இந்த நீராவிக் குளியல் அந்தக் காலத்தில் ஒரு மருத்துவ அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. பிள்ளைப்பேறு காலத்தில் சவுனாக் குடிசைகளையே சுகப் பிரசவங்களுக்காகப் பயன்படுத்தினார்கள். பாடல் 45ல் லொவியத்தார் என்னும் பெண்ணும் பாடல் 50ல் மர்யத்தாவும் பிரசவத்துக்குச் சவுனாவுக்குச் செல்வது கவனிக்கத்தக்கது.

சவோ: Savo: பின்லாந்தின் கீழ் மத்திய பகுதியில் கரேலியாவுக்கு அருகில் இருக்கும் ஒரு மாவட்டம். இப்பொழுது குவோப்பியோ மாகாணத்தில் ஒரு பகுதி; பின்னிஷ் பெயர் Kuopio.

சுவோமி: Suomi: (Finland); பின்லாந்தின் பின்னிஷ் (மொழிப்) பெயர்.

## த

தப்பியோ: Tapio: காட்டின் காவலன்; காட்டின் அரசன்; காட்டில் நடக்கும் ஆடல்களைத் தலைமை தாங்கி நடத்தும் வன தேவதை.

தப்பியோலா: Tapiola: தப்பியோவின் வதிவிடம்.

தனிக்காக் கோட்டை: Tanikkan linna: எஸ்த்தோனியாவின் தலைநகரமும் துறைமுகமுமான தல்லினாவைக் குறிக்கிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் டென்மார்க்கைச் சேர்ந்த கடல் வீரர்கள் கண்டுபிடித்த இந்த நகரம் டென்மார்க்கின் கோட்டை என்று அழைக்கப்பட்டது. டென்மார்க்கின் கோட்டை என்பது பின்னிஷ் மொழியில் 'தன்ஸ்கான் லின்னா' Tanskan linna எனப்படும். பின்னிஷ் மொழியில் 'தன்ஸ்கா' Tanska என்றால் டென்மார்க் (என்னும் நாடு) (gen: Tanskan) என்றும் 'லின்னா' என்றால் கோட்டை என்றும் பொருள். இதுவே பிற்காலத்தில் மருவி தனிக்காவின் கோட்டை என்னும் பொருளுள்ள Tanikkan linna ஆயிற்று என்று கருதப்படுகிறது. அதுவே இப்போது தல்லினா எனவும் வழங்குகிறது. Tanskan linna >Tanikkan linna >Taninlinna >(Est.) Tallinn > (Finn.) Tallinna. எஸ்த்தோனியாவின் பின்னிஷ் பெயர் `விரோ` Viro.

## தி

தியேரா: Tiera: (snow - foot); லெம்மின்கைனனின் தோழன். பனிப்பாத மனிதன், வெண் பனிப்பாத மனிதன், உறைபனிப் பாதங்களை உடையவன் என்றெல்லாம் அழைக்கப்படுபவன். பனிமழை பொழிந்து பாதங்கள் உறைந்து போகும் அளவுக்குப் பூமியில் குவிந்து கிடந்தாலும் அதைத் தாங்கும் தன்மையும் வன்மையும் உடையவன் என்று பொதுவாகக் கருதப்படுபவன்.

## து

துர்யா: Tyrja*, Tyrja*n koski: வடக்கில் இருந்ததாகக் கற்பனையாகக் கூறப்படும் ஒரு நீர்வீழ்ச்சி. லாப்லாந்தின் இன்னொரு பெயர். வடக்கில் கொடிய மாந்திரீகரின் வசிப்பிடம்.

துர்யா மனிதர்: லாப்லாந்து மக்கள்.

துர்யா மொழி: லாப்லாந்தியரின் மொழி; லாப்லாந்தியரின் மந்திரச் சொற்கள் என்ற பொருளிலும் சில இடங்களில் காணலாம்.

துவோனலா: Tuonela: ஒரு பௌராணிக இடம். மரண உலகம், இறப்புலகம் என்று பொருள். துவோனியின் வதிவிடம்.

துவோனி: Tuoni: மறு உலகத்து அல்லது மரண உலகத்துத் தலைவன்.

துவோனியின் மகள்: Tuonetar, Tuonen tytto*: மரண உலகத்துத் தலைவனின் மகள். வைனாமொயினன் ஆற்றைக் கடந்து மரண உலகம் செல்ல முயன்ற போது அவனைத் தடுத்து வாதாடுபவள்.

## தூ

தூர நெஞ்சினன், தூர நாட்டினன்: Kaukomieli, Kaukolainen: லெம்மின்கைனன் என்ற பாத்திரத்தின் சிறப்புப் பெயர்கள்.

தூரி: Tuuri: ஒரு தேவதையின் பெயர். இது இடி முழக்கத்தின் அதிபதியான `தொர்` (Thor) என்ற சொல்லிலிருந்து வந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. வேறோர் இடத்தில் கடவுளை இடி முழக்கங்களின் தலைவர் என்று வர்ணிக்கப்படுவது கவனிக்கத்தக்கது.

தூலிக்கி: Tuulikki: தப்பியோவின் மகள்; காற்றின் சக்தி, காற்றின் ஆவி என்று பொருள் உண்டு.

## தெ

தெல்லர்வோ: Tellervo: தப்பியோவின் மகள்.

## ந

நகத்து நீர்வீழ்ச்சி: Kynsikoski: மரண உலகில் இருப்பதாகக் கற்பனை செய்யப்பட்ட ஒரு நீர்வீழ்ச்சி. இந்த பின்னிஷ் சொல்லை ஆங்கிலத்தில் claw rapid என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள்.
நனைந்த தொப்பி, நனைந்த

தொப்பியன்: Ma*rka*hattu: (soppy-hat); ஈரமான தொப்பியை அணிந்திருப்பவன்; ஒரு குருட்டு இடையன் லெம்மின்கைனன் மரண ஆற்றில் இறப்பதற்குக் காரணமானவன்.

## நு

நுயீரிக்கி: Nyyrikki: தப்பியோவின் மகன்.

## நெ

நெவாநதி: Neva: முன்னர் 'பீட்டர்ஸ் பேர்க்' (St. Petersburg) என்றும் பின்னர் 'பீட்ரோகிராட்' (Petrograd) என்றும் [ இடைக்காலத்தில் 'லெனின்கிராட்' ( Leningrad) என்றும்] இப்பொழுது மீண்டும் 'பீட்டர்ஸ் பேர்க்' (St. Petersburg) என்றும் அழைக்கப்படும் பிரதேசத்தில் 'லடோகா' என்னும் ஏரியிலிருந்து நாற்பது மைல் தொலைவில் பாயும் ஒரு நதி.

ப

பனிப்பாத மனிதன்: லெம்மின்கைனனின் தோழன். தியேரா என்பவனின் இன்னொரு பெயர். பார்க்க: 'தியேரா'.

பி

பிஸா மலை: Pisanma*ki, Pisanvuori: நில்ஸியா (Nilsia*) என்னும் இடத்திலுள்ள மலை. அந்நாளைய வழக்கு மொழியில் பேய் மலை என்று பொருள்.

பு

புகார் மகள்: பூமியில் பனிப்புகாரை உண்டாக்கக் கூடிய சக்தி, தேவதை; முகில் மகள் என்றும் மொழிபெயர்த்துள்ளனர்.

புதிய கோட்டை: Uusi Linna: இந்த பின்னிஷ் சொல்லுக்கு புதிய கோட்டை என்பதே பொருள். ஆங்கிலத்தில் சிலர் Novgorod என்றே மொழிபெயர்த்திருக்கிறார்கள். இந்தச் சொல்லுக்கும் புதிய கோட்டை, புதிய நகரம் என்று தான் பொருள். ரஷ்ய மொழியில் 'Nov' என்றால் 'புதிய' என்றும் + 'gorod' என்றால் 'அடைக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட இடம்' என்றும் பொருள். இதுவே பின்னாளில் 'கோட்டை' என்றும் 'நகரம்' என்றும் மாறிற்று. இது ஆதியில் சுவீடன் நாட்டுக் கடலோடிகள் ரஷ்யாவில் குடியேறிய இடம்.

பெ
பெல்லர்வொயினன்: Pellervoinen: சம்ஸாவின் இன்னொரு பெயர்; முழுப்பெயர் சம்ஸா பெல்லர்வொயினன் Sampsa Pellervoinen.

பொஹ்யொலா: Pohjola: வடநாடு; கலேவலாவுக்கு வடக்கே இருந்த இருள் நிறைந்த நாடு; வடநாட்டுத் தலைவியான லொவ்ஹி என்பவளின் நாட்டையும் கோட்டையையும் இப்பெயரால் அழைப்பர்.

ம
மர்யத்தா: Marjatta: கன்னித்தாய்; கிறீஸ்துவ மதத்துக் கன்னி மேரியுடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்டது. மரியா என்ற பெயரே திரிந்து மர்யத்தா ஆகியது என்பர். ஆங்கிலத்தில் Mary என்பதை பின்னிஷ் மொழியில் Maria என்றே எழுதுவர். கன்னி மேரி என்பதை ஆங்கிலத்தில் Virgin Mary என்றும் பின்னிஷ் மொழியில் Neitsyt Maria என்றும் எழுதுவர். பின்னிஷ் மொழியில் marja என்றால் சிறுபழம் (berry) என்றும் பொருள் உண்டு. ஒரு சிறு பழத்திலிருந்து கர்ப்பம் ஆன கன்னிப் பெண்ணாகையால் இப்பெயர் ஏற்பட்டது என்று கருதுவோரும் உளர்.

மரண ஆறு: துவோனலா என்னும் மரண உலகத்தின் கறுப்பு நிற ஆறு.

மரணத்தின் மகன்: மரண உலகின் மகன், துவோனியின் மகன். பார்க்க 'துவோனி'.

மனா: Mana: மனா என்றால் மரண உலகின் அதிபதி. Manala என்பது மரண உலக அதிபதியின் உறைவிடம்; ஒரு பௌராணிக இடம். மரண உலகம் என்று பொருள்.

மி
மிமெர்க்கி: Mimerkki: காட்டுத் தலைவி மியெலிக்கியின் இன்னொரு பெயர்; காட்டுத் தலைவன் தப்பியோவின் மனைவி.

மியெலிக்கி: Mielikki: அன்பானவளே, மனதுக்கு உகந்தவளே என்று பொருள். காட்டுத் தலைவியின் இன்னொரு பெயர். தப்பியோவின் மனைவி.

மூ
மூரிக்கி: Muurikki: ஒரு பசுவின் பெயர்.

யொ
யொவுகோ, யொவுகாஹைனன்: Jouko, Joukahainen: ஓர் இளைஞன். வைனாமொயினனுடன் போட்டியாக மந்திரப் பாடல்கள் பாடித் தோற்பவன். தோல்வியின் காரணமாகத் தன் சகோதரியை வைனாமொயினனுக்கு மனைவியாக்குவதாக வாக்களிப்பவன். வைனாமொயினனின் குதிரையை எய்து கொல்பவன்.

யொவுகொலா: Joukola: யொவுகாஹைனனின் இடம்.

யோ
யோர்தான்: Juortanin joki: ஒரு கற்பனை நதி.

லா
லாப்பியர், லாப்லாந்தியர்,

லாப்புலாந்தியர்: lappalainen: (Lappish); லாப்லாந்தில் வாழும் மக்கள்.

லாப், லாப்லாந்து, லாப்புலாந்து: Lappi: ( Lapland); பின்லாந்தில் வட பகுதியில் உள்ள ஒரு மாகாணம்; மந்திரவாதிகள் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் ஓர் இடம்.

லூ

லூலிக்கி: Lyylikki: பனிக்கட்டியில் சறுக்கிச் செல்லும் பாதணிகளைச் செய்பவனான கௌப்பியின் இன்னொரு பெயர்.

லெ

லெம்பி: Lempi (gen.: Lemmen): லெம்மின்கைனனின் தந்தை. 'லெம்பி' என்ற பின்னிஷ் சொல்லுடன் ஆறாம் வேற்றுமை உருபு (genitive case) சேரும் பொழுது வல்லினம் மெல்லினமாகி லெம்பியின் என்ற பொருளில் 'லெம்மின்' என்று வரும். அதனால் தான் மகனுடைய பெயர் 'லெம்மின்'கைனன் ஆயிற்று. தமிழ் மொழிபெயர்ப்பில் இன்னாரின் மகன் என்று கூற வேண்டிய இடங்களில் லெம்பியின் மைந்தன் என்றும் பெயரைக் குறிப்பிடும் இடங்களில் லெம்மின்கைனன் என்றும் வருகிறது.

"லெம்பி" என்றால் 'அன்பு' 'பிரியம்' என்று பொருள். இது சமீப காலம் வரை ஓர் ஆண்பால் பெயராகவே இருந்தது. இன்று பெண்பால் பெயராக வழக்கில் உள்ளது.

லெம்போ: Lempo: ஒரு தீய சக்தி; ஹீசியின் இன்னொரு பெயர்.

லெம்மின்கைனன்: Lemminka*inen: மூன்று முக்கிய நாயகர்களில் ஒருவன். லெம்பியின் மகனாகையால் லெம்மின்கைனன் என்று பெயர் பெற்றவன். குறும்பன்,போக்கிரி என்று வர்ணிக்கப்படுபவன். பெண்களில் அதிக நாட்டம் உள்ளவன். தூர நெஞ்சினன், அஹ்தி, தீவின் அஹ்தி என்னும் பெயர்களாலும் அழைக்கப்படுபவன்.

இவனுடைய சகோதரி ஐனிக்கி. துண்டுகளாக வெட்டி ஆற்றில் வீசப்பட்ட இவனை உயிர்த்தெழ வைத்த இவனுடைய தாய் இவன் வாழ்வில் முக்கிய அங்கம் வகிக்கிறாள். லெம்மின்கைனனின் தாய்: Lemminka*isen a*iti: இவளின் பெயர் கூறப்படவில்லை.

லொ

லொக்கா: Lokka: இல்மரினனின் தாய்; கலேவாவின் ஒரு பெண் சந்ததியாள் என்பதால் 'கலேவாவின் மகள்' 'கலேவத்தார்' Kalevatar ஆகிய சிறப்புப் பெயர்களைப் பெற்றவள். பின்னிஷ் மொழியில் 'தார்' (-tar) என்பது ஒரு பெண்பால் விகுதி.

லொவ்ஹி: Louhi: வட நாட்டுத் தலைவி. திறமை மிக்க மந்திரவாதி. இல்மரினனின் இரு மனைவியரின் தாய். நீண்ட பல்லுடையவள், நீக்கல் பல்லுடையவள் என்று வர்ணிக்கப்படுபவள்.

லொவியத்தார்: Loviatar: துவோனலா என்னும் மரண உலகில் இருக்கும் ஒரு குருட்டு வயோதிபப் பெண். இவளே கொள்ளை நோயை உண்டாக்குபவள் என்று பாடல் 45ல் கூறப்படுகிறது.

வ

வடக்கு: வடக்கு, வடபகுதி, வடநிலம், வடபால் நிலம் என்ற வருபவை யாவும் பின்லாந்தின் வட பகுதியைக் குறிக்கும். வடநாட்டின் இன்னொரு பெயர் லாப்லாந்து. வேறொரு பெயர் சரியொலா; வடநாடு பொதுவாக இருண்ட நாடு, புகார் படிந்த நாடு என்று வர்ணிக்கப்படுகிறது.

வடநிலத் தலைவன்: Pohjolan isa*nta*: லொவ்ஹியின் கணவன். லெம்மின்கைனனால் தலை வெட்டப்படுபவன். பெயர் கூறப்படவில்லை.

வடபுல நங்கை: Pohjolan / Pohjan neiti: மற்றும் வடநாட்டு மங்கை, வடநிலச் சிறுபெண் என்று வருபவை வடநாட்டுத் தலைவி லொவ்ஹியின் மகளைக் குறிக்கும். இல்மரினனை மணந்த பின்னர் 'இல்மரினனின் தலைவி' என்று அழைக்கப்பட்டாள். பெயர் கூறப்படவில்லை.

வா

வாயுமகள்: Ilmatar: வாயுவின் மகள்; காற்றின் கன்னி; நீரன்னை; பூமியைப் படைத்தவள்; வைனாமொயினனின் கன்னித்தாய். பாடல் 47:141ல் வைனாமொயினனும் இல்மரினனும் நெருப்பைத் தேடிச் செல்லும் வழியில் சந்திக்கும் பெண்ணும் வாயுவின் மகள், காற்றின் கன்னி Ilmatar என்றுதான் அறிமுகமாகிறாள். ஆனால் இவர்களின் உரையாடலிலிருந்து இவள் வைனாமொயினனுக்கு முற்றிலும் புதியவளாகத் தெரிகிறது.

வி

விபுனன்: Vipunen: அந்தரோவிபுனனைப் பார்க்க.

விரோகன்னாஸ்: Virokannas: பாடல் 20ல் விவாகக் கொண்டாட்டத்துக்குக் கொண்டு வரப்பட்ட பெரிய எருதைக் கொல்வதற்கு எஸ்த்தோனியாவிலிருந்து வந்த ஒரு அறிஞனின் பெயராகக் கூறப்பட்டது. மீண்டும் ஐம்பதாம் பாடலில் திருமுழுக்குச் செய்பவராக வருகிறது. கிறிஸ்துவ மதத்தினரின் புதிய ஏற்பாட்டில் வரும் யோவான் என்னும் திருமுழுக்குநரை இப்பெயருடன் தொடர்புபடுத்திக் கூறுவர்.

வு

வுவோக்ஸி: Vuoksi: பின்லாந்தின் கிழக்குப் பகுதியின் ஒரு பெரிய நதி; சைமா ஏரிகளிலிருந்து ரஷ்யாவின் லடொகா ஏரிக்குப் பாய்கிறது.

வெ

வெண்கடல்: Vienanmeri: ரஷ்யாவின் கரேலியா ( Russian Karelia) பகுதியில் உற்பத்தியாகும் 'வியன்னன்யொக்கி' Vienanjoki ( Northen Dvina river) என்னும் ஆறு பாயும் இடம் வெண்கடல். ( White sea).

வெல்லமோ: Vellamo: கடலுக்கும் நீருக்கும் அதிபதியான அஹ்தோவின் மனைவி.

வை

வைனா, வைனோ: Va*ina*, Va*ino*: வைனாமொயினன் என்ற பெயரின் சுருக்கம்.

வைனாமொயினனன்: Va*ina*mo*inen: வாயுமகளின் புத்திரன். இல்மரினன், லெம்மின்கைனன் உட்பட்ட மூன்று முக்கிய நாயகர்களில் முதன்மையானவன். அமானுஷ்ய சக்தி படைத்த பாவலன். 'கந்தலே' என்னும் இசைக்கருவியை இசைப்பதில் வல்லவன். 'நிலையானவன்' 'முதியவன்' என்பவை இவனுடைய தனித்தன்மை. நீண்ட காலம் கர்ப்பத்தில் இருந்ததால் பிறக்கும்போதே முதியவன் என்று பெயர் பெற்றவன்.
இவனுடைய அறிவையும் ஆற்றலையும் கூறும் பின்னிஷ் சொல் tieta*ja*. இதனை ஆங்கிலத்தில் wise man என்று மொழிபெயர்த்துள்ளனர். இதன் நேரடிப் பொருள் '[மந்திரமும் மாயமும்] அறிந்தவன்/தெரிந்தவன்' என்பதாகும். இச்சொல் வரும் அடி தமிழில் வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: "நிலைபெறும் மாய நெறியறி முதல்வன்".

யேசுநாதர் பிறந்த சமயத்தில், அவரைத் தரிசிக்கக் கிழக்கிலிருந்து வந்த மூன்று அறிஞர்களைப்பற்றிக் கிறீஸ்துவ வேதாகமத்தில் கூறுமிடத்தில் tieta*ja* என்ற பின்னிஷ் சொல்லும் wise man என்ற ஆங்கில சொல்லும் பயன்படுத்தப்பட்டிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

வைனொலா: Va*ino*la*: வைனாமொயினன் வாழ்ந்த இடம்.

று

றுவோத்துஸ்: Ruotus: ஒரு கொடிய கிராமத் தலைவனின் பெயர். கிறீஸ்துவ வேதாகமத்தில் யேசுநாதரை விசாரணை செய்தவன் எனக் கூறப்பட்ட ஏரோது ( Herod) என்ற பெயருடன் தொடர்புபடுத்திக் கூறுவர்.

றுவோத்துஸின் தலைவி: Ruotuksen ema*nta*: றுவோத்துஸின் மனைவி; பெயர் கூறப்படவில்லை.

ஹ

ஹமே: Ha*me: தென் மத்திய பின்லாந்தில் ஒரு மாகாணம்.

ஹல்லா: Ha*lla*pyo*ra*: ஹமே மாகாணத்தில் இருந்ததாகக் கருதப்படும் ஒரு நீர்ச்சுழி.

ஹீசி: Hiisi: ஒரு தீய சக்தி.

ஹீத்தொலா: Hiitola: ஹீசியின் ஆளுகைக்கு உட்பட்ட இடம்.

ஹெர்மிக்கி: Hermikki: ஒரு பசுவின் பெயர்.

# விளக்கக் குறிப்புகள்

(உதாரணம்: 1:31 = பாடல்1; அடி 31; உதாரணம்: பார்க்க 2:22 = விளக்கக் குறிப்புகளில் 2:22 பார்க்க; அடைப்புக் குறிக்குள் இருப்பவை ஆங்கிலப் பெயர்கள்.)

1:31 அணியிலிருந்து: அரைக் கச்சிலிருந்து, இடுப்புப் பட்டியிலிருந்து என்றும் மொழிபெயர்க்கலாம்.

1:34 குறுக்குவில்: கணை அல்லது கல் எறிவதற்காக ஒரு காலத்தில் கையாண்ட வில் போன்ற படைக்கலப் பொறி; இதற்கு வக்கிரதனு என்றும் ஒரு பெயர் உண்டு. இதன் பின்னிஷ் சொல் jousi, kaari; (cross bow, arch).

1:35 வடபால் நிலம், வடபுலம், வட நாடு என்று வருபவை யாவும் பின்லாந்தின் வடக்கில் உள்ள லாப்புலாந்தைக் குறிக்கும்; இருளான இடம், புகார் படிந்த இடம் என்னும் பொருளில் சரியொலா என்றும் அழைக்கப் படும்.

1:40 துணி நெய்யும் தறியில் நூல் சுற்றும் தண்டு.

1:43 வாயிலிருந்து வழிந்து தாடி போலத் தெரியும் பாலைத் துடைக்கத் தெரியாத சிறுபிராயம்.

1:44 இந்நூலில் பல இடங்களில் 'புளித்த பால்' 'தயிர்' என்ற சொற்கள் வருகின்றன. புளித்த பால் என்றால் கெட்டுப் போன பால் என்றும் தமிழர் வாழும் சில இடங்களில் கருதப்படுகிறது. ஆனால் மேல் நாடுகளில் பெரிதும் விரும்பிப் பருகும், பாலில் இருந்து செய்யப்பட்ட ஒரு பானத்தை இப்படி அழைக்கிறார்கள். ஆங்கிலத்தில் இதனைத் தயிர் என்னும் பொருளில் curd என்றும் sour milk என்றும் butter milk என்றும் மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஆனால் இது தயிருமல்லாத மோருமல்லாத ஒரு புளிப்புச் சுவையுள்ள சத்து நிறைந்த பானம். இதன் பின்னிஷ் பெயர் 'பீமா' piima*.

1:73 பனிக்கட்டியில் சறுக்கிச் செல்லும் வண்டி; இதன் பின்னிஷ் பெயர்கள் kelkka, reki (sledge, sleigh). இதன் மேல் வண்டி என்று வரும் இடங்களில் இச்சறுக்கு வண்டியையே குறிக்கும்.

1:93 றொட்டி, 'பாண்' (bread) செய்யப் பயன்படும் ஒருவகைத் தானியம். கம்புவகை, புல்லரிசி; இதன் பின்னிஷ் சொல் ruis (rye, Secale cereale).

1:94 உணவுக்கும் மதுபானம் வடிப்பதற்கும் பயன்படும் ஒரு வகைத் தானியம்; பார்லி; இதன் பின்னிஷ் பெயர் ohra (barley); பார்லியிலிருந்து வடிக்கும் பானம் 'பீர்' (beer); இதன் பின்னிஷ் சொல் 'ஒளுத்' olut.

1:169 இந்நாட்டு மக்கள் முன்னாளில் கடவுளை 'உக்கோ' Ukko என்று அழைத்தனர். 'உக்கோ' என்றால் கிழவன், முதியவன், வயோதிபன் என்றும் இடிமுழக்கத்தின் அதிபதி என்றும் பொருள். இதையே சில இடங்களில் முது மனிதன், மானிட முதல்வன் என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

1:179(i) நேரான பறவை: நேராகப் பறக்கும் பறவை.

1:179(ii) ஒரு வாத்து இனப்பறவை. இதன் பின்னிஷ் சொல் 'சொத்கா', sotka; (pochard, scaup, [duck], Aythya).

1:272 வஞ்சிர மீனினம். இதன் பின்னிஷ் சொல் பெயர் 'லொஹி', lohi (salmon, Salmo salar).

1:285 மலைகள் பாறைகளில் இயற்கையாகத் தோன்றும் சித்திர வடிவங்கள்.

1:304 வட துருவத்திற்கு அருகில் காணப்படும் ஏழு மீன்கள் அல்லது சத்தரிஷிகள் என அழைக்கப்படும் நட்சத்திரக் கூட்டம். (Great Bear, the constellation Ursa major, alias the Plough, alias Charle's Wain). இது தாரகைக் குழு, தாரகைக்குலம், விண்மீன் குலம் என்றும் பாடலில் வெவ்வேறு இடங்களில் வருகின்றது. துருவ மண்டலம், சப்த மண்டலங்களில் ஒன்றான துருவ நட்சத்திரப் பிரதேசம். இதன் பின்னிஷ் சொல் Otava.

1:342 பாவலன், பாடகன் என்று பல இடங்களில் சொல்லப்படுகின்றது. இது சபித்து அல்லது வாழ்த்தி அல்லது ஏதோ ஒன்று நிகழ வேண்டும் என்று மந்திரப் பாடல்களைப் பாடும் திறனுடையோரைக் குறிக்கும்; அகவர், அகவுநர், பாணர்.

2:21 இவ்வடியில் கூறப்பட்டது 'பைன்' என்னும் மரத்தை; தேவதாரு இன மரவினம். இதன் பின்னிஷ் சொல் ma*nty, (pine, Pinus).
2:22 இவ்வடியில் கூறப்பட்டது 'ஸ்புறூஸ்' என்னும் மரத்தை. இதுவும் தேவதாரு இனத்தைச் சேர்ந்தது. இது ஊசியிலை மரம் என்றும் சொல்லப்படும். இதன் பின்னிஷ் சொல் 'கூசி', kuusi, (spruce, Picea).
2:23 இது ஒரு குட்டையான புதர்ச்செடி வகை. இதன் பின்னிஷ் பெயர் 'கனெர்வா', kanerva (heath[er], ling, Calluna vulgaris),
2:25 இது மிலாறு, பூர்ச்ச மரம் என்னும் மரவினத்தைச் சேர்ந்தது. இதன் பின்னிஷ் சொல் 'கொய்வு', koivu (birch, Betul).
2:26 'அல்டர்' மரம்; பூர்ச்ச மரவினத்தைச் சேர்ந்தது. இதன் பின்னிஷ் சொல் leppa* (alder, Alnus).
2:27 இவ்வடியில் கூறப்பட்டது ஒரு சிறுபழ வகை; இதன் பின்னிஷ் சொல் tuomi (bird cherry, Prunus padus).
2:28 இது அலரி இனத்தைச் சேர்ந்த ஒருவகைச் சிறிய மரம். இதன் பின்னிஷ் சொல் raita (sallow, goat willow, great sallow, Salix caprea).
2:29 இது 'ரொவன்' என்னும் சிறிய பழங்கள் காய்க்கும் மரம்; ஒருவகைச் செந்நிறப் பழம்; பேரி இனத்தைச் சேர்ந்தது. இதன் பின்னிஷ் சொல் pihlaja (rowan, mountain ash, Sorbus aucuparia).
2:30 இது 'வில்லோ' என்னும் சிறிய மரம். இதுவும் அலரி இனத்தைச் சேர்ந்தது. இதன் பின்னிஷ் சொல் paju (willow, Salix).
2:31 இது 'ஜுனிப்பர்' என்னும் பழச்செடி. இது சூரைச்செடி இனத்தைச் சேர்ந்தது. இதன் இன்னொரு பெயர் உரோதமம். இதன் பின்னிஷ் சொல் kataja (juniper, Juniper communis).
2:32 இது சிந்தூர மரவினம்; இதன் தமிழ்ப் பெயர்களாவன சிந்தூர மரம், கருவாலி மரம், அல்லோன் விருட்சம். இதன் பின்னிஷ் சொல் 'தம்மி', tammi (oak, Quercus).
2:35 பார்க்க 2:22
2:38 பார்க்க 2:26
2:39 பார்க்க 2:27
2:42 பார்க்க 2:27
2:67 வைனாமொயினனுக்கு உதவ வந்த ஒரு நீர்விலங்கு. இதன் பின்னிஷ் சொற்கள் Tursas, turska; இதை நீர்ப் பாம்பு என்றும், வெட்ட வெட்ட முளைக்கவல்ல பல தலைகளையுடைய நீர்ப்பாம்பு என்றும் சொல்வதுண்டு. இதனைக் கடற்குதிரை, கடல்யானை என்றும் சில மொழிபெயர்ப்புகள் கூறுகின்றன (octopus, water monster, Hydra, Octopodida).
2:79 இந்த அடியில் கூறப்பட்டது மஞ்சள் விதைகளையுடைய சிறிய சிவந்த சதைப் பற்றுள்ள பழம். இதன் பின்னிஷ் சொல் 'மன்ஸிக்கா', 'மன்ஸிமர்யா' mansikka, mansimarja (strawberry, Fragaria).
2:122 பரசு
2:172 ஈரல் நிறத்து மண்ணில் என்பது மூலபாடம்.
2:206 வடபுல நங்கை, வடநாட்டு மங்கை, வடநிலச் சிறுபெண் என்று வருவதெல்லாம் வட நாட்டுத் தலைவியின் மகளைக் குறிக்கும். இந்த வடநிலத் தலைவியின் பெயர் லொவ்ஹி; இவளுடைய மகளுக்குப் பெயர் கூறப்படவில்லை. எனவே வடநிலத் தலைவியும் வடநில மங்கையும் ஒருவரல்ல என்பது கவனிக்கத்தக்கது.
2:230 இது குயில் இனத்தைச் சேர்ந்த ஒரு பறவை; இதன் பின்னிஷ் சொல் 'குக்கூ' kukku (cuckoo).
2:245 இது கீரி இனத்தைச் சேர்ந்த ஒரு பிராணி; இதன் பின்னிஷ் சொல் na*a*ta* (marten, pine marten, Martes martes).
2:253 இது ஒரு புல்லரிசித் தானிய வகை; இதன் பின்னிஷ் சொல் kaura (oats, Avena sativa).
2:292 இது பட்டிழை மயிர்த் தோலையுடைய கீரிவகை விலங்கு; இராஜ கீரி, மரநாய் என்றும் சொல்வதுண்டு; இதன் பின்னிஷ் சொல் ka*rppa* (stoat, ermine, weasel, Mustela erminea).

2:372 ஈயம், தகரம் போன்றவற்றால் செய்யப்பட்ட நகைகளை அணியும் கன்னிப் பெண்ணை முன்னாளில் தகர மார்பணி அல்லது ஈய மார்பணி அணிந்தவள் என்னும் பொருளில் 'ஈய நெஞ்சாள்', 'ஈயத்து நெஞ்சாள்', 'தகர நெஞ்சாள்' 'ஈய மார்பினள்' 'தகர மார்பினள்' என அழைத்ததை இக்காவியத்தின் பல இடங்களில் காணலாம். (இந்த அடியில் குயிலை விளித்து 'ஈய நெஞ்சால் பாடு!' என்று கேட்கப் படுகிறது.)

3:45 பாடல்கள் என்னும்போது அது மந்திரப் பாடல்களையே குறிக்கும். இக்காவியத்தின் நாயகர்கள் ஏதேனும் ஓர் உயிரினம் அல்லது ஓர் உயிரற்ற பொருள் உண்டாகும்படி, உருவாகும்படி பாடிய சந்தர்ப்பங்களைப் பின்னால் காண்போம். பாடல் 1:342 ஐயும் பார்க்க.

3:105 வளைந்த மரத்தினால் செய்யப்பட்ட குதிரையின் கழுத்திலுள்ள கண்ட வளையம்.

3:159 இது நீண்ட ஒடுங்கிய வாயும் கூரிய பற்களையுமுடைய பெரிய நன்னீர் மீனினம்; கோலாச்சி மீன்; இதன் பின்னிஷ் சொல் hauki (pike, Esox lucius).

3:161 இந்த அடியில் கூறப்பட்டது 'பேர்ச்' என்னும் மீனை; இதன் பின்னிஷ் சொல் ahven (perch, Perca fluviatilis).

3:168 இது ஒரு மான் இனம்; கலைமான், வட தேசத்து மான்; இதன் பின்னிஷ் சொல் poro (reindeer, Rangifer tarandus).

3:170 இது காட்டெருது, காட்டுப் பசு, கடம்பை என்றும் அழைக்கப் படும்; மூல பாடத்தில் உள்ள பின்னிஷ் சொல் tarvas; தற்கால பாவனையில் உள்ள பின்னிஷ் சொல் hirvi (elk, Alces alces).

3:191 இது ஒரு சிறு பறவையினம்; இதன் பின்னிஷ் சொல் tiainen (tit, tomtit, titmouse, Paridae).

3:193 விரியன் பாம்பு; இதன் பின்னிஷ் சொல் ka*a*rme (snake, viper, Ophiclia l. Serpentes).

3:194 இது ஒரு நன்னீர் மீன்வகை; வெள்ளி மீன் என்றும் சொல்லப்படும்; இதன் பின்னிஷ் சொல் kiiski (ruff, Acerina cernua).

3:304(i) இழுவைப்பட்டி

3:304(ii) பார்க்க 2:28.

3:322 இது ஒரு பூவினம்: அல்லி, ஆம்பல், நீராம்பல், குவளை; இதன் பின்னிஷ் சொல் lumme (lily, water lily, Nymphaea). valkealumme: வெள்ளாம்பல் (white water lily, Nymphaea alba). பாடல் 9:412ல் வருவது பொன்னாம்பல்; இதன் பின்னிஷ் சொல் kultalumme.

3:330 கக்கம்

3:553 கூந்தலையுடைய பெண்கள், நீண்ட கூந்தலையுடைய பெண்கள், பின்னிய கூந்தலையுடைய பெண்கள் என்று சில இடங்களில் கூறப்பட்டுள்ளது. அந்த நாட்களில் விவாகம் ஆகும்வரை பெண்கள் நீண்ட கூந்தலை வளர்த்தனர் என்றும் விவாகம் ஆனவுடன் கூந்தலை வெட்டித் தலைக்கு முக்காடு இட்டனர் என்றும் கலேவலா அகராதி கூறுகிறது. அதனால் கூந்தலையுடைய பெண் என்றால் பொதுவாக விவாகம் ஆகாத பெண் என்று கருதப்பட்டது. இதன்படி விவாகம் ஆனதும் தான் தனது கூந்தலை இழக்க நேரிடும் என்பதும் இங்கே ஐனோவின் கவலைக்கு ஒரு காரணம் ஆகலாம்.

3:576 பார்க்க 2:79.

3:580 எரிந்த நிலம்.

4:4 சவுனா (சௌனா) sauna (sauna) எனப்படும் நீராவிக் குளியலின்போது உடலை விசிறிக் கொள்ளப் பயன்படும் ஒருவகை இலைக்கட்டு (whisk). சொற்றொகுதியில் பார்க்க 'சவுனா'.

4:10 பார்க்க 2:26.

4:25 கப்பல்கள் மூலமாக இறக்குமதி செய்யப்பட்ட துணிவகைகள்.

4:123 பன்றியிறைச்சி.

4:186 இது ஒருவகைச் சிறுபழம்; மூலநூலில் உள்ள பின்னிஷ் சொல் vaapukka; தற்காலப் பெயர்கள் vadelma, vattu (raspberry, Rubus idaeus).

4:215 கீல், தார் என்பது நிலக்கரியிலிருந்து பெறப்பட்டு வீதிகள் அமைக்கப் பயன்படும் பொருள் (tar).

4:309 பார்க்க 2:30.
4:310 இது ஓர் அரச மரவினம்; இதனைக் காட்டரசு என்றும் சொல்வதுண்டு; இதன் பின்னிஷ் சொல் haapa (aspen, European aspen, Populus tremula).
4:327 வீட்டில் உள்ள ஒருவரை (செல்லமாகக்) கோழி என்று அழைப்பதாகத் தெரிகிறது. சிலர் புறா, வாத்து, பறவை என்றும் மொழிபெயர்த்துள்ளனர், தமிழ் மக்கள் மயில், கிளி என்று அழைப்பது போல.
4:406 நீண்ட செவிகளையுடைய முயல்.
4:408 சிலுவை போன்ற வடிவமான வாயையுடைய முயல்.
4:422 வட்டமான விழிகளையுடைய முயல்.
4:428 பார்க்க 2:372.
4:430 செப்பினால் செய்யப்பட்ட ஒரு பட்டி வீணே ஆழ்ந்து போயிற்று.
4:450 பாக்கியமில்லாக் கன்னங்கள் மீது.
4:474 ஓடுகின்ற ஆறாக உருக்கொள்ளத் தொடங்கி -
4:513 இது ஒரு பயறு வகை; இதன் பின்னிஷ் சொல் herne (pea, Pisum).
4:514 இது ஒரு அவரையினம்; இதன் பின்னிஷ் சொல் papu (bean, Phaseolus).

5:17 Untamo 'உந்தமோ' என்ற பின்னிஷ் சொல் கனவு, நித்திரை என்னும் பொருள்படும் uni என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். எனவே இவ்விடத்தில் கனவின் சக்தி, கனவின் ஆக்க சக்தி, கனவின் ஆவி, கனவின் காரண கர்த்தா என்றும் மொழி பெயர்க்கலாம். உந்தமோ என்ற இச்சொல் பாடல் 31ல் ஒரு கதாபாத்திரத்தின் பெயராகவும் வருகிறது.
5:36 சில இடங்களில் கப்பல் என்றும் அதே மரக்கலத்தைப் பின்னர் படகு, தோணி, ஓடம் என்றும் வருவதைக் காணலாம். ஏனைய மொழிபெயர்ப்பாளர்களைப் போன்று மூல நூலில் உள்ளது அப்படியே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
5:63 இது ஒரு மீனினம்; இதன் பின்னிஷ் பெயர் siika (powan, whitefish, Coregonus lavaretus).
5:64 இது ஒரு மீனினம்; இதன் பின்னிஷ் சொல் kuuja, kuujanen, ja*rvilohi; (trout, lake-trout, salmon, Salmo trutta). இதை ஆங்கிலத்தில் lake-trout என்றும் salmon-trout என்றும் மொழிபெயர்த்துள்ளனர்.
5:65 பார்க்க 3:159.
5:69 கடற்கன்னி, நீரரமகள்; பழம் பௌராணிக மரபுகளில் அரைக்கு மேல் பெண்ணாகவும் அரைக்குக் கீழ் மீன் வாலாகவும் அமைந்த அரை மனித உரு (mermaids).
5:71 இது ஒரு மீனினம்; வஞ்சிர மீன்; இதன் பின்னிஷ் சொல் merilohi (salmon, Salmo trutta).
5:72 பார்க்க 3:161.
5:121 பீர்' என்னும் பானக் கலயம்; பார்க்க 1:94.
5:149 நீரிணை: ஜலசந்தி, கால்வாய், தொடுவாய் (strait).

6:5 வைக்கோல் நிறத்து.
6:6 பார்க்க 4:513.
6:37 பின்னிஷ் மொழியில் Hiisi எனப்படும் தீய சக்தி; பேய், பிசாசு, கூளி, அலகை, நரகம் என்று பொருள் (the devil).
6:38 பின்னிஷ் மொழியில் Lempo எனப்படும் தீய சக்தி; தீய ஆவி, பிசாசு, அலகை என்றும் பொருள் (the devil).
6:43 இந்த அடியிலிருந்து அடி 46 வரை வில்லின் அலங்கார வர்ணனை; வில்லின் முதுகுப்புறத்தில் ஒரு குதிரை நின்றது; அடிப்புறத்தில் பாயும் பாவனையில் ஒரு குதிரைக் குட்டி நின்றது; வில்லின் வளைவிலே ஓர் இளம்பெண் உறங்கினள்; மேற்புறத்தில் ஒரு முயல் படுத்திருந்தது.
6:50 மரத்திலிருந்து வடிந்து உறைந்த பால் (resin, gum, exudation from certain trees). அம்புகளின் முனைகள் பிசினுள்ள மரத்தினால் என்றும் மொழிபெயர்க்கலாம்.
6:53 இக்குருவி தூக்கணங்குருவி, தகைவிலாங்குருவி என்றும் அழைக்கப்படும்; இதன் பின்னிஷ் சொல் pa*a*sky[nen] (swallow, Hirundinidae).

6:54 இக்குருவி ஊர்க்குருவி, சிட்டுக்குருவி, இல்லுறைக் குருவி, அடைக்கலாங்குருவி, தகைவிலாங்குருவி என்றும் அழைக்கப்படும்; இதன் பின்னிஷ் சொல் varpunen (sparrow, Passer).
6:62 அமைதிநீர் மனிதன், நன்னீர் மனிதன் என்பன வைனாமொயினனின் சிறப்புப்பெயர்கள்.
6:93 வைக்கோல் நிறத்து.
6:120 விவாகத் தொடர்பால் சகோதரியின் கணவன், மனைவியின் சகோதரன்.
6:127 பின்னிஷ் மொழியில் Manala 'மணல' எனப்படும் ஒரு பௌராணிக இடம். மரண உலகம் என்று பொருள் (abode of the dead, the underworld, Hades).
6:128 பின்னிஷ் மொழியில் Tuonela 'துவோனலா' எனப்படும் ஒரு பௌராணிக இடம். மரண உலகம் என்று பொருள். சொற்றொகுதியில் துவோனி, துவோனலா என்ற சொற்களைப் பார்க்க; (Hades, the underworld).
6:177 பார்க்க 3:170.
7:67 Luotola - பின்னிஷ் மொழியில் luoto என்றால் பாறை, பாறைத்தீவு என்று பொருள்; luotolaவை விரிகுடா, தீவு, தீவவுத்தோட்டம் எனலாம்.
7:68 Joukola - யொவுகாஹைனனின் இடம்; யொவுகாஹைனனின் தோட்டம்.
7:133 பார்க்க 2:206.
7:188 பார்க்க 2:27.
7:285 இந்த அடியிலிருந்து அடி 288 வரை: அன்னிய நாட்டில் தங்கக் கிண்ணத்தில் தேன் அருந்துவதிலும் பார்க்க, சொந்த நாட்டில் மிலாறு மரத்துக் காலணியில் இருக்கும் நீரைக் குடிப்பது சிறந்தது. ('மிலாறு மரத்தின் காலணி பதிந்த தடத்தில் தேங்கிய நீரைக் குடிப்பது' என்றும் மொழிபெயர்க்கலாம்).
7:312 சம்போவின் மூடியைப் 'பல நிறங்கள்' கொண்ட மூடி என்றும் 'ஒளிப் புள்ளிகள்' உடைய மூடி என்றும் சிலர் விளங்கியுள்ளனர். 'ஒளிமிக்க' என்பதே பலரது விளக்கம். 'சம்போ'வைச் சொற்றொகுதியில் பார்க்க.
7:350 பழுப்பு நிறம், மண்ணிறம்; பின்னிஷ் மொழியில் ruskea (brown colour).

8:1 பார்க்க 2:206.
8:58 மாரிகாலத்தை மேல்நாடுகளில் கழிக்கும் இன்னிசைப் பறவை வகை. இதன் பின்னிஷ் பெயர் kynto*rastas, ra*ka*ttirastas (fieldfare, Turdus pilaris).
8:74 பின்லாந்து போன்ற நாடுகளில் குளிர் கொடுமையானது. 'அதனிலும் குளிராம்' என்பதை 'அதனிலும் கொடிதாம்' என்று பொருள் கொள்ளலாம்.
8:152 பார்க்க 6:37.
8:153 பார்க்க 6:38.
8:161 பார்க்க 6:38.
8:162 பார்க்க 6:37.
8:172 ஊசிபோன்ற இலைகளையுடைய மரம். இதன் பின்னிஷ் பெயர் honka. இதைப் 'பைன்' மரம் என்றும் சொல்வதுண்டு. 2:21யும் பார்க்க.
8:191 இந்த அடியிலும் அடுத்த இரு அடிகளிலும் வரும் பொருள் வருமாறு: அங்கே எந்த மண் மேடும் இல்லை இரத்த வெள்ளத்தில் மூழ்கா நிலையில், தடையில்லாது பாய்ந்த குருதியில் மூழ்கித் தாழா நிலையில்.

9:31 உடன்பிறப்புகள் எல்லோரிலும் இரும்பே இளையவன்.
9:80 ஒளித்தல் அபயம் பெறுதல் ஆகிய இரண்டையும் பெற்றது.
9:99 உறைந்த சேற்றில் ஓர் ஓநாய் ஓடியது.
9:101 ஓநாய் கால் வைத்த அடித் தடத்தில் சேறு ஊர்ந்தது.
9:234 மிலாறுப் பட்டை - வீட்டுக்கூரையில் மிலாறு மரப்பட்டையின் கீழே இருந்து பார்த்தது.
9:297 பார்க்க 3:170.
9:298 இது ஒரு மான் இனம்; கலைமான், வடதேசத்து மான்; இதன் பின்னிஷ் சொல் poro (reindeer, Rangifer tarandus). இந்த அடியில் பயன்படுத்தப்பட்ட பின்னிஷ் சொல் peura; இதைக் காட்டுக்கலை என்றும் மொழிபெயர்க்கலாம்.

9:349 கடலில் நிற்கும் வாள் போல் நிற்பாய்! இது ஒரு கோரைப் புல்லினம். இதன் இலை அதாவது தாள் வாளின் அலகு போல நீரில் நிமிர்ந்து நிற்கும் தன்மையுடையது. இதன் பின்னிஷ் பெயர் kurjenmiekka. பின்னிஷ் மொழியில் miekka என்றால் வாள் என்று பொருள் (iris, Iris pseudacorus).
9:412 பார்க்க 3:322.
9:458 அவை நூறு பயணத்து வழிகளில் சேர்க்கப்பட்டவை.
9:467 பல கிளைகள் பரந்த அரச மரமொன்று.
9:525 இந்த அடியும் அடுத்த அடியும்: நோவை ஒரு மலையில் ஏற்றி அழிப்பதாக நம்பப்பட்டதால் 'நோவின் குன்று' என்றும் 'நோ மலை' என்றும் பெயர்கள் வந்தன.
9:527 நோவை அங்கே கற்களில் திணித்தான்.

10:2 பழுப்பு நிறம், மண்ணிறம்; பின்னிஷ் மொழியில் ruskea (brown colour).
10:12 பார்க்க 2:29.
10:42 பார்க்க 1:304.
10:58 நிலக்கரிக் குடிசையிலிருந்து வந்த கலகலத்த ஒலியைக் கேட்டனன்.
10:91 பார்க்க 1:304.
10:346 படகுத்துடுப்புக்கு உகைப் பாதாரமான அமைவு; படகின் விளிம்பில் துடுப்பிற்கு நெம்பு விசை மையமாய்ப் பயன்படும் இரு குவடுடைய பள்ளப்பகுதி; இதைத் துடுப்பு நெம்புவிசைக் குவடு, மிண்டுக்குழி, உகை மிண்டு, மிண்டுக்குவடு என்றும் அழைப்பர் (rowlock, tholepin).
10:429 மூல நூலில் yhdeksa*n sylen syva*ha*n என்பதை to a depth of nine fathoms என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கலாம். Fathom என்பது ஆறடி நீளம். அதனாலேயே தமிழில் இங்ஙனம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலில் வேறு சில இடங்களிலும் இந்த fathom என்னும் அளவை கூறப்படுகிறது. அந்த இடங்களிலும் தமிழ் மொழிபெயர்ப்பில் இவ்வாறே அடிக்கணக்கில் கூறப்பட்டுள்ளது.
10:450 இது ஒரு வகைப் புதர்ச்செடியில் காய்க்கும் சிவப்பு நிறமான சிறிய பழம்; இதன் பின்னிஷ் சொற்கள் puna-puola, puolukka, puola (cranberry, mountain cranberry, cowberry, lingonberry, Vaccinium vitis-idaea).

11:10 பார்க்க 3:161.
11:54 காய்கறிகள், மீன் , இறைச்சி வகைகள் வெந்த சாறு, ரசம் (soup).
11:58 இந்த மெல்லிய மரக்குச்சிகள் மெழுகுவர்த்திபோல எரிக்கப் பயன்படுத்தப்பட்டன.
11:148 பார்க்க 3:553.
11:174 பார்க்க 2:372.
11:195 குயிலிக்கி ஏனைய பெண்களுக்கு மேலாகச் சிறப்பாக இருந்தனள்.
11:264 இந்த அடியிலிருந்து அடி 266 வரை: பின்னிஷ் மொழியில் Muurikki, Mansikki, Puolukka 'மூரிக்கி', 'மன்ஸிக்கி', 'புவோ லுக்கா' என்பன இந்த அடிகளில் பசுக்களின் பெயர்கள். 'மூரிக்கி' அந்த நாட்களில் வழக்கிலிருந்த பசுவின் பெயர்தான். ஆனால் 'மன்ஸிக்கா' ('மன்ஸிக்கி' அல்ல), புவோலுக்கா என்ற பெயர்களில் சிறு பழங்கள் இருப்பதும் கவனிக்கத்தக்கது. பார்க்க 2:79, 10:450. (ஓர் ஆய்வாளரின் கருத்து இது: "லெம்மின்கைனன் பசுக்களை வைத்திருக்க முடியாத அளவுக்கு ஏழை. சில பூக்களுக்கும் இப்பெயர்கள் இருந்தன. குயிலிக்கி பசுக்கள் என்று நினைக்கட்டும் என்ற எண்ணத்தில் இங்கு பூக்களின் பெயர்களை இரு பொருளில் கூறுகிறான்.")
11:385 பனிக்கட்டிப் பறவை; இவ்வடியில் கூறப்பட்டது lumi-sirkku, pulmunen என பின்னிஷ் மொழியில் அழைக்கப்படும் ஒரு சிறுகுருவி (bunting, snowbunting, Plectrophenax nivalis, Emberiza nivalis).
11:393 கூடத்தின் நிலப்பரப்பைப் பெரிதாக்கி அமை.

12:63 'பீர்' என்னும் பானம்; பார்க்க 1:94.
12:69 இங்கு கூறப்பட்டது 'அல்டர்' என்னும் மரத்தினால் செய்த பீப்பாவை. பார்க்க 2:26.
12:94 மூல பாடத்தில் ஒரு பெண்னி என்று இருக்கிறது; 12:101ஐயும் பார்க்க.

12:101 Markka 'மார்க்கா' என்பது பின்னிஷ் நாணயம்.
12:145 பாம்புகள் சபித்தன.
12:154 துளை கருவி, துறப்பணம், கன்னக்கோல் என்றும் பொருள் வரும்.
12:206 தலைமயிரை வார (அல்லது கோதப்) பயன்படும் கருவி, 'பிரஷ்' (brush).
12:349 Kymmenia* என்ற பின்னிஷ் சொல்லுக்கு ஆங்கிலத்தில் 'tens' என்று பொருள். அதையே தமிழில் 'பதின்மர்' என்று மொழிபெயர்க்கப்பட்டது.
12:363 இங்கே சுடுதலுக்கு அம்பு எய்தல் என்று பொருள்.
12:390 பாசி படர்ந்த இடத்திலிருந்து; பாசி படர்ந்த மரக்கட்டைகளிலிருந்து என்றும் மொழிபெயர்ப்புகள் உண்டு.
12:462 பார்க்க 3:161.

13:29 பனிக்கட்டியில் சறுக்குதல்; சறுக்கிச் செல்லுதல். இதன் பின்னிஷ் சொல் hiihta*a* (ski [along a skiing track]).
13:39 பனிக்கட்டியில் சறுக்கிச் செல்லப் பயன்படும் (இடது) சறுக்கணி. இதன் பின்னிஷ் சொல் lyly (the longer ski [formerly used on the left foot]).
13:40 பனிக்கட்டியில் சறுக்கிச் செல்லப் பயன்படும் (வலது) சறுக்கணி. இதன் பின்னிஷ் சொல் kalhu (short[er] ski, kick ski).
13:69 பனிக்கட்டியில் சறுக்கும் போது ஊன்றிச் செல்லும் தண்டுகள். இதன் பின்னிஷ் சொல் sauva (staff).
13:70 ஊன்றிச் செல்லும் தண்டு தரையைத் தொடும் நுனிப் புறத்தில் இருக்கும் வளையம். இதன் பின்னிஷ் சொல் sompa (ring [ on a ski stick]).
13:75 ஆறுகளில் வாழும் மீன் உண்ணும் பிராணி. நீந்துவதற்கு வசதியாக விரல்கள் ஒன்றோடொன்று இணைந்த நான்கு பாதங்களையும் தட்டையான வாலையும் தடித்த பழுப்பு நிற உரோமத்தையும் உடையது. இது நீர்க்கீரி என்றும் அழைக்கப்படும். இதன் பின்னிஷ் சொல் saukko 'சவுக்கோ' (common otter, Lutra lutra).
13:106 இந்த அடியில் பின்னிஷ் மொழியில் பயன்படுத்தப்பட்ட சொல் Juutas. இது ஆங்கில Judas என்பதிலிருந்து வந்தது. இதன் பொருள் காட்டிக் கொடுப்பவன் என்பதாகும். கிறிஸ்தவ வேதாகமத்தில் யேசுநாதரைக் காட்டிக் கொடுத்த ஜூதாஸ் (Judas Iscariot) என்பவனின் பெயரிலிருந்து வந்ததாகும். சில ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் 'ஜூதாஸ்' என்றே மொழிபெயர்த்துள்ளனர்; சிலர் கொடிய பிராணி என்றும் தீய சக்தி என்றும் மொழி பெயர்த்துள்ளனர்.
13:108 பார்க்க 13:106.
13:110 இது ஒரு வகைச் சிறிய மரம்; இந்த மரத்துக் கிளைகளின் கவர்த்தடிகளைக் கொண்டு கொம்புகள் செய்தன. இதன் பின்னிஷ் சொல் raita (sallow, goat willow, great willow, Salix caprea).
13:152 இடுகாட்டு ஆவியின் மேட்டிலும் சென்றான்.
13:219 இந்த அடியில் கூறப்பட்டது ஒருவகை மரம். இதன் பின்னிஷ் சொல் vaahtera (maple, Acer)
13:239 பார்க்க 13:219.

14:34 உச்சியை அவன் அடைய உடன்வழி நடத்துவீர்.
14:102 வேட்டை: மூல பாடத்தில் பின்னிஷ் சொல் vilja என்பதன் பொதுப்பொருள் தானியம். இந்நூலில் பல இடங்களில் 'செல்வம்', 'சொத்து' என்ற பொருளில் இச்சொல் வருகிறது. சந்தர்ப்பத்திற்கேற்ப தானியம், கால்நடை, வேட்டை, வன விளையாட்டு என்பனவற்றை இச்சொற்கள் குறிக்கின்றன. பாடல் 14:102ல் வேட்டைச் செல்வத்துக்குரிய முதிய பெண்கள் கிடந்தனர் என்று பொருள்.
14:117 இந்த அடியையும் அடுத்த அடியையும் சேர்த்து இப்படிப் பொருள் கொள்க: ஒவ்வொரு கோட்டையின் மூலையிலும் பொன்னால் அமைந்த ஆறு சாளரங்கள் இருந்தன.
14:138 பூர்ச்ச மரப்பட்டையால் செய்யப்பட்ட பாதணிகள்; பார்க்க 2:25.
14:154 தளிரிலைகளில் தொப்பியும் பாசியில் ஆடையும் அணிந்தவனே.

14:158 ' அல்டர்' (alder) மரம்; பூர்ச்ச மரவினத்தைச் சேர்ந்தது; பார்க்க 2:26.
14:160 பார்க்க 2:22.
14:161 தாரு என்பது மரத்தின் பொதுப் பெயர்; தேவதாருவையும் குறிக்கும். இவ்வடியில் கூறப்பட்டது ஊசியிலை மரத்தை (fir). பார்க்க 8:172.
14:162 பார்க்க 2:21.
14:167 பார்க்க 2:22.
14:168 பார்க்க 2:21.
14.254 பசும் புற்புதர்களில் வாழும் அழகானவனே.
14:331 இந்த அடியும் அடுத்த அடியும்: பொன் வளையத்தினுள்ளே வெள்ளி மணிகளின் நடுவே தலையைத் திணிப்பாய். இப்படியே அடிகள் 347, 348க்கும் பொருள் கொள்க.
14:377 அன்னம்: நீண்ட கழுத்துடைய ஒரு நீர்ப்பறவை. இதன் பின்னிஷ் சொல் joutsen (swan, Cygnus).
14:399 இந்த அடியிலும் அடிகள் 402, 403லும் குருடன் எனக் கூறப்பட்ட நனைந்த தொப்பியன் 'கண்டான்' 'பார்த்தான்' என்று மூலப் பாடத்தில் வருவது கவனிக்கத்தக்கது.
14:408 நீர்க்குழல்: குழல் போன்ற தோற்றத்தில் நீரில் வாழும் பாம்பு.
14:434 அரத்தம்: இரத்தம் (blood)

15:104 Jalopeura என்னும் பின்னிஷ் சொல் வலிய விலங்கு, சிங்கம் என்று பொருள் தரும்; இந்த அடியில் வலிய விலங்கான (சிங்கம் போன்ற) கலை மான்.
15:119 பார்க்க 13:75.
15:120 நிலத்தில் வளை தோண்டி வாழும் கரடியினம். இதன் பின்னிஷ் சொல் mauriainen (pismire, badger, Lasius niger); இதைக் கீரியினம் (weasel) என்றும் சில நூல்களில் காணலாம்.
15:121 குளவி; இதன் பின்னிஷ் சொல் neuliainen, ampiainen (wasp).
15:203 முட்களின் நீளம் 100 x 6 அடிகள் (hundred fathoms). பார்க்க 10:429.
15:204 கைப்பிடியின் நீளம் 500 x 6 அடிகள் (five hundred fathoms).
15:285 இது ஒரு காக்கையினம். நீர்க்காகம் என்றும் சொல்வதுண்டு. இதன் பின்னிஷ் சொல் korppi (raven, Corvus corax).
15:291 மனிதனைக் கடலுக்குள் போக விடுவாய்.
15:293 இந்த அடியில் வரும் பின்னிஷ் சொல் turska; இச்சொல்லுக்கு தற்கால வழக்கில் ஆங்கிலத்தில் 'கொட்' (cod, Gadus morhua) என்று அழைக்கப்படும் மீனும் ஒரு பொருள். அதனால் சிலர் இந்த அடியில் மட்டும் ஒரு வகை மீன் என்று மொழிபெயர்த்துள்ளனர். பார்க்க 2:67.
15:531 மிருகங்களின் கொம்புகள் (horn).
15:532 அடர்த்தியான கட்டுகள் (bundle).
15:580 நீண்ட நகங்களையும் சிறகுகளையும் கொண்ட நெருப்பைக் கக்கக்கூடிய ஒரு கற்பனைப் பிராணி. இதைத் தமிழில் பறக்கும் நாகம், குக்குட சர்ப்பம் என்று சில தமிழ் அகராதிகள் கூறுகின்றன. பறக்கும் முதலை என்றும் சொல்வதுண்டு. இதன் பின்னிஷ் சொல் lapokyy (dragon).
15:581 பாக்கியமற்ற என் மேல் அவன் ஏவினான்.
15:593 இது நீண்ட வாலுள்ள வாத்தினம். இதன் பின்னிஷ் சொல் alli (squaw, long tailed duck, Clangula hyemalis).
15:594 இது ஒரு வகைக் கடற் பறவை; இதன் பின்னிஷ் சொல் meripa*a*sky (sea swallow); pa*a*sky[nen] (swallow, Hirundinidae).
15:595 இதன் பின்னிஷ் சொல் Syo*ja*ta*r. இந்த சொல்லில் syo*ja* என்றால் உண்பது, உண்ணும் சக்தியுடையது என்று பொருள். -ta*r என்பது பெண்பால் விகுதி. (i) புராணங்களில் வரும் நரமாமிசம் உண்ணும் கொடிய பயங்கரமான பூதம் அல்லது அரக்கி அல்லது பயங்கரமான உருவம் கொண்ட பிராணி என்று இதற்குப் பொருள். இதனை ஆங்கிலத்தில் ogress (இதன் ஆண்பால் ogre) என்று மொழிபெயர்த்துள்ளனர். (ii)

புராணக் கதைகளில் வரும் நரமாமிசம் புசிப்பவளான ஓர் அரக்கி. (iii) ஒரு பெண்ணின் தலை, உடலுடன் இறக்கைகளும் நகமும் கொண்ட ஒரு கொடிய பிராணி (harpy).

16:6 'ஆறு வங்கக் கால்களையுடைய தோணி என்னிடமிருந்து வராது' என்று இந்த அடிக்குப் பொருள். தோணியின் பக்கவளை வரிக்கட்டை; இதை வங்கக்கால், வங்கக்கட்டை என்றும் சொல்வதுண்டு.
16:136 அவன் ஒரு சொல்லையும் பெறவில்லை; பாதிச் சொல்லையும் பெறவில்லை.
16:155 பார்க்க 2:27.

17:20 பெண்களின் ஊசி நுனியில் ஓடிச் செல்லுதல் வேண்டும்.
17:22 ஆண்களின் வாள்களின் முனையில் நடந்து செல்லுதல் வேண்டும்.
17:33 காவடி, காவுதடி, காத்தண்டு (cowl-staff).
17:75 அணில்கள் சேர்ந்த தாருவைப் புருவத்திலிருந்து வீழ்த்தினான்.
17:121 வைனாமொயினனின் இடுப்புப் பட்டியில் ஒரு கத்தி இருந்தது.
17:236 கவிநிலை: காலநிலை.
17:278 பார்க்க 13:106.
17:301 சுவர்க்கத்தின் துருவத்தில் இருக்கும் முதியவனே!
17:406 பார்க்க 3:161.
17:407 அங்கே உனக்கு ஓர் இடம் கிடைக்காவிடில் -
17:495 முன்னர் படைக்கப்பட்ட பேய்க்கு முடிவு வந்தது.

18:114 பார்க்க 5:64.
18:225 நெசவு செய்யும் கைத்தறியில் நூல் சுற்றும் கருவி.
18:295 பார்க்க 4:4.
18:359 அதன் பின்னர் வீட்டிலே தைக்கப்பட்ட நீண்ட மேலங்கி.
18:363 ஆயிரம் தெறிகளோடு (buttons) தைக்கப்பட்ட புதிய கம்பளியாடை.
18:370 பார்க்க 3:553.
18:388 எம்மிடத்தில் ஆறு குதிரைகள் இருக்கின்றன.
18:389 இந்த அடியில் கூறப்பட்டது ஒரு புல்லரிசி வகைத் தானியம் (oats); பார்க்க 2:253.
18:395 குயில்போல் ஒலிக்கும் ஆறு மணிகளைச் சறுக்கு வண்டியில் கட்டு!
18:396 நீலப் பறவைகள் போல் ஒலிக்கும் ஏழு மணிகளைக் கட்டு!
18:403 பார்க்க 2:67, 15:293.
18:523 குவியல்கள் பெரியவை; விறகுச் சுள்ளிகள் நல்லவை.
18:532 கதம்: கோபம்.
18:545 நாட்டின் சிறந்தது ஏன் உறுமிற்று என்று.
18:548 காதலர் சந்திக்கும் கடற்கரையிலுள்ள குடா நாடு எனக் கற்பனையாகக் கருதப்பட்ட இடம்.
18:565 பார்க்க 2:29.

19:12 எனக்கு மனைவியாகி எனது சொந்தமாக வரப்போகும் பெண்ணை.
19:76 சலசலத்திரையும் மண்டையோடுகளைக் கண்டான்.
19:155 பார்க்க 3:159.
19:172 மரண உலகின் மாய்வில்லாத/ அழிவில்லாத அருவியில்.
19:209 ஒரு சிறகு கடலைக் கலக்கிற்று.
19:217 நீரில் இருந்தொரு நீர்ச்சக்தி எழுந்தது.
19:227 இரண்டு கோடரிகளின் கைப்பிடி நீளத்தில் அதன் நாக்கு இருந்தது. இரண்டு கோடரிகளின் அலகளவு நாக்கு என்றும் சில மொழிபெயர்ப்பாளர்கள் விளங்கியுள்ளனர்.
19:287 வீசிய காற்றில் காற்றின் மணம் இல்லை; ஏனென்றால் அடுத்த அடியைப் பார்க்க: 'பறந்து கொண்டிருந்த கழுகின் பெரிய இறகுகளினால்'.

19:369 செழிப்பான தோட்டங்களில் நாடோடித் தொழிலாளர்களில் ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் வதிவிடங்கள் இருந்தன. இரும்புத் தொப்பி அணிந்த ஆண்களிலும் பார்க்க, செப்பில் தலையணி அணிந்த பெண்களிலும் பார்க்க, சணற் துணியில் கைத்துண்டையுடைய கன்னியரே முன்வந்து விருந்தாளிகளை வரவேற்றனர்.

19:381 சணற்றுணிக் கூரையில் கன்னியர் கோட்டை.

19:457 கைத்தறியில் நூல் சுற்றும் கருவி.

19:458 பார்க்க 2:292.

19:461 கைத்தறியில் நூலைப் பரப்பி இழையோடும் சட்டம். இப்படி இழை யோடுதலைப் பாவோடுதல் என்றும் சொல்வதுண்டு.

19:480 நான்கு ஊடிழை நூலின் கீச்சொலியோடு.

19:484 இரு வார வயதுடைய குழந்தை இவ்வாறுரைத்தது.

19:507 அடிகள் 507, 508, 509, 510 மூல நூலில் உள்ளபடி சரியாகவே தமிழில் இப்படி மொழிபெயர்க்கபட்டுள்ளன: "தன்கரு மம்மெலாம் தனியே வருந்துவான் இளமையில் திருமணம் செய்து கொள்பவன் பிள்ளைப் பருவம் பிள்ளை பெறுபவன் சிறுபிரா யத்தில் பெறுபவன் குடும்பம்." இந்த அடிகளைப் படிக்கும்போது கிடைக்கும் பொதுவான விளக்கம் வருமாறு: "இளமையில் திருமணம் செய்பவனும் பிள்ளைப் பருவத்தில் பிள்ளைகளைப் பெறுபவனும் சிறு பிராயத்தில் குடும்பத்தை அடைபவனும் தனது கருமங்கள் எல்லாவற்றிற்கும் வருந்துவான்." ஆனால் இந்த மூன்றும் செய்யத் தகாதன அல்ல; அதற்காக வருந்த வேண்டியதும் இல்லை. எனவே அந்த அடிகளுக்கு வேறு உட்பொருள் இருக்க வேண்டும் என்பது அறிஞரின் கருத்து. இந்த நான்கு அடிகளையும் விளங்கிக் கொள்வதில் மொழிபெயர்ப்பாளரிடையே கருத்து வேறுபாடும் உண்டு. சிலர் இப்படியும் விளங்கியுள்ளனர்: "இளமையில் திருமணம் செய்தல், பிள்ளைப் பருவத்தில் பிள்ளைகளைப் பெறுதல், சிறு பிராயத்தில் குடும்பத்தை அடைதல் ஆகியவற்றிற்கு எவன் வருந்துகிறானோ அவன் தன் கருமம் அனைத்துக்கும் வருந்துவான்." பலர் ஏற்றுக் கொண்ட பொருள் இது வாகும்: "இளமையில் திருமணம் செய்பவனும், பிள்ளைப் பருவத்தில் பிள்ளைகளைப் பெறுபவனும், சிறு பிராயத்தில் குடும்பத்தை அடைபவனும், இவை தவிர்த்த மற்ற எல்லாக் கருமங்களுக்கும் வருந்துவான்." இந்தக் கட்டத்தில் வைனாமொயினன் தான் இளமையில் விவாகம் செய்யாததையிட்டு வருந்தியே அவ்வடிகளைக் கூறுகிறான் என்பது கவனிக்கத் தக்கது.

20:27 பார்க்க 6:53.

20:31 ஒரு மாத காலம் ஓடித் திரிந்த ஒரு கோடையணில் -

20:115 பதன் செய்யப்பட்ட இறைச்சி; இதன் பின்னிஷ் பெயர் makkara (sausage).

20:140 இது கொத்துக் கொத்தாய்ப் பூக்கும் ஒரு தழுவிப் படரும் செடி. இதன் காய்ந்த பூக்கள் (அல்லது காய்கள்) 'பீர்' பானத்திற்குக் கசப்புச் சுவையுட்டப் பயன்படுத்தபடும். முசுக்கட்டை இனத்தைச் சேர்ந்தது. இதன் பின்னிஷ் சொல் humala (hop, Humulus lupulus)

20:143 remu என்ற பெயர் அடியிலிருந்து வந்த remunen என்ற பின்னிஷ் சொல்லுக்கு ஆரவாரமான சத்தம், மகிழ்ச்சிக் கூக்குரல், இரைச்சல் என்று பொருள். இந்தச் செடி கலந்த புளித்த மதுபானத்தை வடிக்கும் பொழுது ஏற்படும் இரைச்சலை இவ்விதம் கூறியிருக்கலாம். இந்தச் சொல்லை ஆங்கிலத்தில் revel, hubbub என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். சிலர் மொழிபெயர்ப்புச் சிரமத்தினால் remunen என்ற பின்னிஷ் சொல்லை அப்படியே ஆங்கிலத்திலும் பயன் படுத்தியிருக்கிறார்கள்.

20:146 இது பூனைக்காஞ்சொறிச் செடி வகை; இந்தச் செடி காஞ்சோன்றி என்றும் அழைக்கப்படும். இதன் பின்னிஷ் சொல் viholainen, nokkonen (nettle, Urtica).

20:197 மரத்திலிருந்து அல்லது ஏதாவது உலோகத்திலிருந்து சீவிக் கழிக்கப்பட்ட அல்லது கிழிந்து கழிபட்ட சிராய்/சீவல் துண்டு.

20:223 இந்த அடியும் அடுத்த அடியும்: தேவதாரு இனமான ஊசியிலை மரங்களின், பசுமை மரங்களின் (fir, pine, cedar) காய். வட்டமான அடிப்புறத்திலிருந்து குறுகி வந்து நுனியில்

கூராக முடியும் வடிவமுள்ளவை; அதன் மேற்புறத்தில் செதிள் போன்று பட்டை பட்டையாக மரத்தோல் இருக்கும். இதன் பின்னிஷ் சொல் ka*py (cone).

20:228 சடை வாலையுடைய அணில்.

20:231 இந்த அடியும் அடுத்த அடியும்: அந்த அணில் ஒரு சோலையை முடித்தது: அடுத்த சோலையைக் கடந்தது; மூன்றாம் சோலையையும் குறுக்கே கடந்தது.

20:265 பார்க்க 20:197.

20:289 புளித்த மாவினுறை, புரையுட்டும் பொருள், மாவைப் புளிக்க வைக்கும் பொருள், மது பானங்களைப் புளித்துப் பொங்கச் செய்யப் பயன்படும் பொருள், நுரை, நொதி, காடிச்சத்து (yeast, leaven).

20:308 பாதத்திலும் பின்னர் படிபுரை சேர்த்தது.

20:329 இளம் பயற்றங் கன்று (pea pod).

20:467 அவனே அஹ்தி, அந்தத் தீவின் அரிய மகன்.

20:509 குமிழ்கள் எழும்பக் கொதிக்க வைத்து -

20:510 சலசலவென ஓசை எழும்பச் சட்டிகளைக் கையாண்டனள்.

21:43 இது காக்கையினத்தில் ஒரு பெரிய பறவை. அண்டங்காகம், நீர்க்காகம் என்றும் சொல்வதுண்டு. இதன் பின்னிஷ் பெயர் kaarne (raven, crow).

21:44 சிங்கத்தின் உடலில் கழுகின் தலையும் இறகுகளும் கொண்ட பௌராணிக விலங்கு; இதன் பின்னிஷ் பெயர் lieve (griffin, griffon, gryphon).

21:72 வார்: பட்டி(belt).

21:93 கோடைக்கோதுமையில் சமைத்த உணவை; அடு - தல் சமை - த்தல்.

21:94 ஒரு வகைத் தானியம் (rye). பார்க்க 1:93.

21:104(i) Kappa 'கப்பா' என்னும் பின்னிஷ் சொல் அந்த நாட்களில் தானியங்களை அளக்கப் பயன்படுத்திய ஒரு முகத்தலளவையைக் குறிக்கும். இது சுமார் ஒரு 'கலன்' அல்லது அரை 'பெக்' அல்லது நாலரை லிற்றருக்குச் சமமான அளவை (gallon, half a peck).

21:104(ii) இந்த அடியில் கூறப்பட்டது ஒரு புல்லரிசி வகைத் தானியம் (oats); பார்க்க 2:253.

21:150 வாங்கு = வாங்குப் பலகை, பலகையாசனம் (bench, wooden seat)

21:161 Osma, ahma 'ஒஸ்மா' 'அஹ்ம' என்பன பின்னிஷ் மொழிச் சொற்கள். பெருந்தீனி கொள்ளும் பெரிய தசையுண்ணி வகை; கீரியினத்துப் பிராணி என்றும் சொல்வர் (gluton, wolverine, Gulo gulo).

21:166 இந்த அடியில் கூறப்பட்ட மீனின் பின்னிஷ் பெயர் lahna (bream, Abramis brama). நன்னீரில் வாழும் மஞ்சள் நிறமுடைய மீன்வகை. கெண்டை மீனினத்தைச் சேர்ந்தது.

21:174 அடுப்பின் வாய்ப்புறத்தில் அல்லது புகைபோக்கி மூலயின் அருகில் அமைந்த ஆசனம்.

21:190 கீல் என்பது நிலக்கரியிலிருந்து பெறப்பட்டு வீதிகள் அமைக்கப் பயன்படும் பொருள்; தார் (tar). இந்த இடத்தில் வெளிச்சத்திற்காக விளக்குகள் போலப் பயன்படுத்தப்பட்ட கீல் பூசப்பட்ட மரப்பலகைகள் / கம்புகள் என்று பொருள்.

21:218 கடலில் அல்லது சேற்றில் வளரும் ஒரு வகை நாணல், இதன் பின்னிஷ் சொல் kaisla (bulrush, club rush, Scirpus).

21:258 அழிவற்ற பாடலுக்கு ஆதாரமாக விளங்கும் தூண் அவன்.

21:280 அயர்வு = நிகழ்ச்சி, செய்கை < அயர்-தல்.

21:281 பார்க்க 21:150.

21:349 இந்த அடியில் முளை நிலம் எனப்படுவது மரங்கள் தறிக்கப்பட்ட பின்னர் அடிக்கட்டைகளுடன் காணப்படும் காட்டுநிலம்; அறுவடையின் பின்னர் முளைகளுடன் காணப்படும் வயல் நிலம் போன்றது. வயலில் மண்கட்டிகளை உடைத்துப் பரவுவதற்குப் பயன்படும் கருவி பரம்பு; இதைப் பலுகுக் கட்டை, பலகொழுத்தட்டு என்றும் அழைப்பர்.

21:394 கடற்கூழாங்கற்களைப் பயற்றம் மணிகளாகவும்; பார்க்க 4:513.

21:395 i. மதுவகை செய்வதற்காக நீரில் ஊறப்போட்டு முளைகட்டி உலர்த்திய வாற்கோதுமை முதலிய தானிய வகை, மாவூறல் (malt, wort). [ii. ஊறிய தானியமும் பாலும் சேர்த்துச் செய்யப்படும் ஊறற் பானம் (malted milk)].

21:405 தலையில் கொம்புகளையுடைய கால்நடைகள்.

21:411 இது புள்ளியுள்ள உரோமமும் குறுகிய வாலும் கூர்மையான பார்வையும் கொண்ட பூனையினக் காட்டு விலங்கு; இதன் பின்னிஷ் சொல் ilves (lynx, Lynx lynx).
21:412 தலைவியருக்கு அகலத் துணிகளில் மேலாடை.

22:78 பார்க்க 2:79.
22:93 அன்னையின் மண்ணில் விளைந்த ஒரு சிறுபழம் போல்.
22:94 இது ஒருவகைச் சிறுபழம் (raspberry); பார்க்க 4:186.
22:106 கதவு வழியால் கன வாயில் வழியால்.
22:224 பார்க்க 4:215.
22:259 இவ்வடியில் கூறப்பட்டது 'ஸ்புறூஸ்' அல்லது 'பைன்' என்னும் மரத்தின் கிளையை / சுள்ளியை (spruce, pine).
22:260 லாப்புலாந்தில் கலைமான் இழுக்கும் சறுக்கு வண்டி.
22:261 'களஞ்சிய கூடத்தின் வாயிற்படி' என்றும் மொழி பெயர்ப்பு உண்டு.
22:293 இந்த அடியும் அடுத்த அடியும்: 'பெண்ணே, நீயொரு வளர்ந்த கோழி போன்ற பருவத்தில் இருப்பதால், உண்மையிலேயே எண்ணிப் பார்த்ததுண்டா?'
22:331(i) வஞ்சிர மீன் (salmon); பார்க்க 1:272.
22:331(ii) இது ஒருவகை நன்னீர் மீன் (ruff). பார்க்க 3:194.
22:332 பார்க்க 3:161.
22:333(i) இது ஒரு நன்னீர் மீன்வகை; வெள்ளி மீன் என்றும் சொல்லப்படும். இதன் பின்னிஷ் சொல் sa*rki(i. roach, Rutilus rutilus; ii. cyprinid [fish], Cyprinidae).
22:333(ii) இது ஒருவகைச் சிறுமீன்; ஒருவகை வெண்ணிற ஆற்று மீன்; இதன் பின்னிஷ் சொல் salakka (bleak, Alburnus alburnus).
22:334 இது கடல் வாத்துவகை; இதன் பின்னிஷ் சொல் meriteeri (Glangula glaucion); பின்னிஷ் மொழியில் telkka* என்னும் கடல் வாத்து இனத்தைச் சேர்ந்தது (golden-eye, Bucephala clangula).
22:340 'கடிப்பவர்' 'தேய வைப்பர்' 'அரித்தெடுப்பவர்' என்றும் பொருள் கொள்ளலாம். அடிகள் 335ல் இருந்து 340 வரை பொருள் வருமாறு: "தாயார் பெற்ற பெண்களில், பெற்றோர் பேணி வளர்த்த பெண்களில் ஒருவரும் அறியமாட்டார், ஒன்பது பேரும் அறியமாட்டார் தம்மை(க் கணவராக வந்து ) உண்பவர் எங்கே பிறப்பார் என்பதை; தம்மை(க் கணவராக வந்து) கடிப்பவர் எங்கே வளர்வார் என்பதை".
22:382 துணிகளை அடித்துத் தோய்க்கும் தடியொன்று கையினில் இருக்கும்.
22:393 இவ்வடியில் கூறப்பட்டது sirkku 'சிர்க்கு' என பின்னிஷ் மொழியில் அழைக்கப்படும் ஒரு சிறு இசைக்குருவி (bunting, Emberiza). ஆங்கிலத்தில் 'பிஞ்' (finch) என்னும் பறவை இனத்தைச் சேர்ந்தது.
22:477 இவ்வடியில் கூறப்பட்டது மேல் நாடுகளில் வாழும் ஓர் இசைப்பறவை; பெரும்பாலும் பழுப்பு நிற முதுகும் புள்ளிகள் உள்ள நெஞ்சும் உடையது; இதன் பின்னிஷ் சொல் rastas (thrush, Turdus).
22:484 எதற்குமே வேண்டாம் இனிய தாயின் மகளே.
22:521 இந்த அடியும் அடுத்த அடியும்: கூழாங் கற்களைப்போல பண நாணயங்களும் சிறு கற்களைப்போல சில்லறை நாணயங்களும் குவிந்திருக்கும்.

23:20 பார்க்க 2:79.
23:22 வெல்வெட் துணி, அடர்த்தி மிக்க மென்பூம் பட்டுத் துணி வகை (velvet).
23:28 மற்றவர் மத்தியில் மறு ஆளாய் வருகிறாய்.
23:47 சிறுபெண்ணின் இயல்புகள் தூரிகைப் பிடியில் தங்கட்டும்.
23:104 விளம்பும் சொற்களையும் செய்யும் செயல்களையும் விளங்கிக் கொள்ளும் ஆற்றல்.
23:121 பார்க்க 1:304.
23:148 ஒவ்வொரு தண்டிலும் மும் மூன்று இலைகளைக் கொண்ட சிறிய செடி; அரிதாக ஒரு தண்டில் நான்கு இலைகள் உண்டாகும்; இந்த நான்கிலைத் தண்டைக் காண்பவருக்கு அதிர்ஷ்டம் வரும் நம்பிக்கையும் உண்டு. இதன் பூக்கள் ஊதா அல்லது வெண்சிவப்பு

அல்லது வெள்ளை நிறமாக இருக்கும். கால்நடை உணவுக்காக இதைப் பயிரிடுவார்கள். மணப்புல் என்றொரு பெயரும் உண்டு. இதன் பின்னிஷ் பெயர் 'அபிலா' apila (clover,Trifolium).

23:178 பார்க்க 4:4.

23:217 கைத்துண்டு, கைக்குட்டை, லேஞ்சி (kerchief).

23:222 பார்க்க 2:29.

23:235 பார்க்க 2:31.

23:306 காவடி, காவுதடி, காத்தண்டு (cowl-staff).

23:320 பார்க்க 4:310.

23:352 பார்க்க 4:4.

23:360 கும்மலி - த்தல் குதித்து விளையாடுகை.

23:374 சுற்றியுள்ள பாதுகாப்பு அகழி.

23:376 நெய்தற்குரிய பாவு நூல்.

23:386 தறியில் ஊடிழை நுழைந்து செல்லும் புழையுடைய கயிறு அல்லது கம்பி.

23:446 குளிர் காலத்திலிருந்து அது இரண்டு மடங்காகவே கிடைக்கும்.

23:487 மூல பாடத்தில் உள்ள பின்னிஷ் சொல் vaahtokuu; வழக்கிலுள்ள பின்னிஷ் சொல் maaliskuu; இது ஆங்கில 'மார்ச்' (March) மாதத்தைக் குறிக்கும்.

23:499 இது வானம்பாடி, மேகப்புள் என்னும் பறவை; இதன் பின்னிஷ் சொல் kiuru 'கியுறு' (skylark, lark, Alauda arvenis). இந்த அடியின் பொருள்: 'கணவனின் எண்ணம் வானம்பாடியின் நாக்கைப் போன்றது'.

23:505 இவ்வடியில் கூறப்பட்டது mesimarja என பின்னிஷ் மொழியில் அழைக்கப்படும் ஒருவகைச் சிறு பழம் (arctic bramble, Rubus arcticus).

23:510 இவ்வடியில் கூறப்பட்டது sirkku என பின்னிஷ் மொழியில் அழைக்கப்படும் ஒரு குருவி (bunting). பார்க்க 22:393.

23:529 இது ஒருவகைப் புதர்ச் செடியில் காய்க்கும் சிவப்பு நிறமான சிறிய பழம்; இதன் பின்னிஷ் சொல் puola (cranberry, cowberry). பார்க்க 10:450.

23:530 பார்க்க 2:79.

23:532 இது 'அல்டர்' (alder) என்னும் மரம்; பூர்ச்ச மரவினத்தைச் சேர்ந்தது; பார்க்க 2:26.

23:534 இது அரச மரவினம்; இதனைக் காட்டரசு என்றும் சொல்வதுண்டு (aspen). பார்க்க 4:310.

23:544 இந்த அடியில் கூறப்பட்டது ஒரு புல்லரிசி வகைத் தானியம்(oats); பார்க்க 2:253.

23:547 "காசுகள்" என்பதற்கு "நல்ல சொற்கள்" , "புகழ்ந்து கூறும் வார்த்தைகள்" என்ற விளக்கமும் உண்டு. அடிகள் 559, 560ஐப் பார்க்கும்போது இந்த விளக்கமும் பொருத்தமாகவே அமைகிறது. அதாவது: அவள் எதிர்பார்த்துச் சென்றது புகழ்ச்சியான சொற்களை; ஆனால் பெற்றதோ இகழ்ச்சியான சொற்களை.

23:606 உணவுக்கான ஒருவகைச் சிறிய மீன்; இதன் பின்னிஷ் சொல் kuore (smelt, Osmerus eperlanus).

23:614 குதிரை இலாயத்திலுள்ள எருவை வாருவதற்குப் பயன் படுத்தப்படும் கவர்க்கோல்; வைக்கோல்வாரி.

23:690 இவ்வடியில் கூறப்பட்டது ஒருவகைச் சிறிய மரம்; இம்மரத்தின் கவர்த்தடியினால் கால்களும் அமைத்து என்று மொருள் (sallow, goat willow). பார்க்க 2:28.

23:758 இது கறுப்பு - வெள்ளை இறகுகளையும் நீண்டொடுங்கிய வாலையும் உடைய இசைபாடும் ஓர் ஐரோப்பியப் பறவை வகை; இது பிரகாசமான சிறிய பொருட்களைக் கண்டால் கொத்திக் கொண்டு பறந்து விடும். இது புறா இனத்தைச் சேர்ந்தது என்றும் சொல்வர்; இதன் பின்னிஷ் சொல் harakka (magpie, Pica pica).

23:809 இவ்வடியில் கூறப்பட்டது முட்டைக்கோசுவில் / முட்டைக் கோவாவில் செய்யப்பட்ட ரசத்தை (cabbage soup).

24:11 பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் பழுப்பு நிறமான இசைபாடும் சிறு பறவை; மூல நூலில் உள்ள பின்னிஷ் சொல் linnanlintu; பேச்சு மொழியில் hemppo (linnet, hemp-bird, Carduelis cannabina).

24:40 பார்க்க 20:223.
24:56 இது சமையலுக்குப் பயன்படுத்தப்படும் உப்புச் சுவையுள்ள இலைகளையுடைய ஒருவகைப் பூண்டு; இதன் பின்னிஷ் சொல் suolaheina* (sorrel, Rumex). இதைத் தமிழில் புளியாரை என்றும் சொல்வர் (yellow wood-sorrel, Oxalis corniculata).
24:83 பார்க்க 1:304
24:91 பார்க்க 6:54.
24:92 பார்க்க 24:11.
24:119 இது சேம்பையினத்தைச் சேர்ந்த ஒரு செடி; இதன் பின்னிஷ் சொல் vehka (arum, Calla palustris, Araceae).
